பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 17 திங்கட்கிழமை (31.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 186

# கூட்டமைப்பும் இந்தியாவிடம் தீர்வு யோசனையை முன்வைக்குமா?

## ஜனாதிபதியின் புதுடில்லி விஜயம் எழுப்பும் கேள்வி

புதுடில்லி, மே 31

எதிர்வரும் 8ஆம் திகதி இடம்பெற உள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதுடில்லிக்கான உத்தியோகபூர்வ விஜயம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஜனாதிபதி புதுடில்லி செல்லும்போது இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வுத் திட்டம் ஒன்றை எடுத்துச் செல்கிறார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தீர்வுத்திட்டம் ஒன்றை இந்தியாவிடம் கையளிக்குமா என்று அரசியல் மற்றும் ராஜதந்திர வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்படுகிறது.

இலங்கையில் 30ஆண்டுகால யுத்தம் முடிவடைந்து ஒருவருடம் பூர்த்தி அடைந்த நிலையில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் யோசனைகளை முன்வைக்குமாறு இந்திய அரசு சமீப காலமாக இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுத்து வந்ததன் பின்னணியிலேயே ஜனாதிபதி ராஜபக்ஷவின் முக்கியத்துவம் வாய்ந்த புதுடில்லி விஜயம் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

13ஆவது அரசமைப்புத் திருத்தம், மேல்சபை என்று அரசு பல யோசனைகளை முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும் -

பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் இல்லாத மாகாண சபைகளினால் ஒரு பயனும் இல்லை என்றும் -

சமஷ்டி ஆட்சி முறையே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்றும் -

மேல்சபையினால் எதுவித பயனும் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போவதில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதுகிறது.

தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் (24ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாந்தோட்டையில் இந்தியாவின் துணைத்தூதரகம்

கொழும்பு, மே 31

இந்தியா தமது துணைத் தூதரகம் ஒன்றை அம்பாந்தோட்டையிலும் அமைப்பதற்கு உத்தேசித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் ஆதிக்கம் தென்னிலங்கையின் அம்பாந்தோட்டையில் அதிகரித்துள்ளமையை அடுத்தே இந்த உத்தேசம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இந்தியா, இலங்கையுடன் பேச்சு நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய அரசிடமே பொலிஸ் அதிகாரங்கள்; மாகாண சபைகளுக்குத் தேவை இல்லை

### 'ரைம்ஸ் ஒவ் இந்தியா'வுக்கு ஜனாதிபதி பேட்டி



புதுடில்லி, மே 31

பொலிஸ் அதிகாரங்கள் எப்போதும் மத்திய அரசிடமே இருக்க வேண்டும். மாகாணங்களுக்குவழங்கப்படக்கூடாது.

இதில் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. அண்மையில் மும்பையில் நடந்த தாக்குதலைக் கவனியுங்கள். எத்தனையோ தடைகளையும் கடந்து இராணுவ கொமாண்டோக்கள் பல மணிநேரப் போராட்டத்தின் பின் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

'ரைம்ஸ் ஒவ் இந்தியா'வுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அளித்த பேட்டியில் இப்படிக் கூறியுள்ளார்.

புலிகளுடனான போராட்டத்தில் பெற்ற வெற்றியின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி 'ரைம்ஸ் ஒவ் இந்தியா'வுக்கு ஜனாதிபதி இந்தப் பேட்டியை வழங்கி இருந்தார்.

பேட்டியில் ஜனாதிபதி தெரிவித்துள்ளவை வருமாறு:-

(23ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி கணேசபுரத்தில் மனிதப்புதைகுழி! மலகூடக் குழியின் மேற்பரப்பில் 4 சடலங்கள்!!

### மேலும் மனித எச்சங்கள் இருக்கலாம் எனச் சந்தேகம்

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி நகரை அண்டிய கணேசபுரத்தில் மனிதப் புதைகுழி இருப்பது குறித்து வெளியான தகவலை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மலசலகூடக் குழியைத் துப்புரவு செய்ய முற்பட்ட வேளை, அங்கு கறுப்புப் பொலித்தீனால் கட்டப்பட்ட நிலையில் சடலங்கள் இருப்பதை வீட்டின் உரிமை யாளர் கண்டுள்ளார்.

இதுகுறித்து உரிமையாளரான நவரத்தினம் என்பவர் கிராம சேவையாளரின் உதவியுடன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை அடுத்து கிளிநொச்சி நீதிவான் எஸ். சிவகுமார் சடலங்கள் இருப்பதாகக் கூறப்படும் மலசலகூடக் குழியை (24ஆம் பக்கம் பார்க்க)

## நடிகர் சல்மான்கானின் பொம்மை மும்பையில் எரிப்பு

கொழும்பு, மே 31

கொழும்பில் நடைபெறவுள்ள திரைப் படவிழாவில் தூதுவராக நடிகர் சல்மான் கான் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று மும்பை தாராவியில் காவல் நிலையம் முன்பு நடிகர் சல்மான்கானின் உருவப் பொம்மையை எரித்த நாம் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

அமிதாப்பச்சன் தூதர் பதவியில் இருந்து விலகியமையால் அவருக்கு பதிலாக நடிகர் சல்மான்கான் சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழா தூதுவராக நியமிக்கப்பட்டார்.

சல்மான் கானுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று மும்பை தாராவியில் உள்ள காவல் நிலையம் முன்பு நாம் தமிழர் இயக்கத்தினர் சல்மான் கானின் உருவப்பொம்மையை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து பொலிஸார் உருவப் பொம்மையைக் கைப்பற்றி தீயை அணைத்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட நாம் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 10 பேரை கைது செய்தனர்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்தோர் 50 ஆயிரம் ரூபா நிவாரணம் பெறுவதற்கு காணி உறுதிகள் கிடைக்க மாற்று ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், மே 31

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களில் காணி உறுதி இல்லாதவர்கள் 50 ஆயிரம் ரூபா நிவாரணத்தைப் பெறுவதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வன்னிக்குக் கடந்தவாரம் மேற்கொண்ட விஜயத்தின்போது, அங்குள்ள மக்கள் தமது காணிகளின் உறுதிகளைப் பெறமுடியாதுள்ளது என்றும் அதன் காரணமாக 50 ஆயிரம்ரூபாநிவாரணத்தையும்இழக்கும்நிலை உள்ளதாகவும் கவலை வெளியிட்டனர்

இது தொடர்பாக பிரதிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயரிடம் முறையிட்டபோது, உறுதிகளைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டப் பதிவகத்தில் இருந்த காணி உறுதிகள் காணாமற்போய் விட்டன. இதன் காரணமாகத் தற்காலிக மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காணிச் சொந்தக்காரர் தம்மிடம் உள்ள உறுதிகளின் பிரதிகளை மீளப்பதிவு செய்ய ஏற்பாடு (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்த ஐ.நா. விசாரணை அவசியம்!

### உள்வீட்டு இரகசியங்களை உடைக்கிறார் நீதி விசாரணையாளர் இக்பால்

கொழும்பு, மே 31

இலங்கையில் யுத்தத்தின் இறுதி நாள்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் வெளிச்சத்துக்கு வரவேண்டுமானால் ஐக்கிய நாடுகள் சபையால் சர்வதேச மட்டத்தில் நீதி விசாரணை ஒன்று கட்டாயம் நடத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு [illegible] படுகொலைகள் குறித்து விசாரிக்க இலங்கை அரசால் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்டிருந்த இரு ஆணைக்குழுக்களின் செயலாளராகக் கடமையாற்றிய எம்.சி.எம். இக்பால் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு, உள்நாட்டின் விசாரணை ஆணைக்குழுக்களின் கண்டுபிடிப்புகளையோ, சிபாரிசுகளையோ ஒருபோதும் ஏற்றுக்கொள்வதே இல்லை என்றும் அவர் சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் காப்பகம் ஆகியவற்றுக்கு நேற்று எழுதிய கடிதங்களில் சுட்டிக்காட்டி உள்ளார்.

அவர் தம் கடிதங்களில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

இலங்கை அரசு உள்நாட்டு விசாரணை ஆணைக்குழுக்களின் கண்டுபிடிப்புகளையோ, சிபாரிசுகளையோ ஒருபோதும் ஏற்றுக் கொள்வதே இல்லை.

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளைப் பிரதேசத்தில் மீளாய்வுப் படிவம் இன்று விநியோகம்

கிளிநொச்சி, மே 31

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்தவர்களுக்கு மீளாய்வுப் படிவங்கள் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 4ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளன.

வடக்கு மாகாண புனரமைப்புத்திட்ட அதிகாரிகளால் இந்தப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கண்டாவளைக் கிராமம், ஊரியான், பரந்தன், கல்மடுநகர், புளியம்பொக்கணை, முரசுமோட்டை, பெரியகுளம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கடந்த 26ஆம் திகதி புதன்கிழமை குறிப்பிட்ட பகுதிகளில் மீள்குடியேற்றம் இடம்பெற்ற நிலையில் இப்பகுதிக்கான புனரமைப்பு தொடர்பான கூட்டம் நடைபெற்றது. அங்கு எடுக்கப்பட்ட முடிவின்படியே படிவங்கள் வழங்கப்படவுள்ளன. (1-111)

# அத்தியார் கல்லூரிக்கு "பக்ஸ்" அன்பளிப்பு

நீர்வேலி, மே 31

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு லண்டனில் வாழும் கல்லூரியின் பழைய மாணவன் எஸ். வசந்தகுமார் என்பவர் தானாகவே முன்வந்து "பக்ஸ் மெஷின்" ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். (ஒ-110)

# யாழ். நகர அபிவிருத்தி குறித்து அமைச்சர் டக்ளஸ் நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையப் பகுதி உட்பட யாழ். நகரின் கேந்திர நிலையப்பகுதிகளுக்கு நேற்றுக்காலை விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அப்பகுதி நிலைமைகளையும் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் கண்டறிந்தார்.

நாடுதழுவிய ரீதியில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அதுதொடர்பாக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத் திட்டங்களும் அமைச்சரின் இவ்விஜயத் தின்போது கண்டறியப்பட்டன. குறிப் பாக நகரை அழகுபடுத்துதல், பொதுமக் களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும்படியாக அமைந்துள்ள நடைபா தைக் கடைகளை அகற்றுதல், தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு நெருக்கடியற்ற பகுதிகளில் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற பல நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டன.

மேற்படி நடவடிக்கைகள் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நடைபாதை வியாபாரிகளுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்ளுமுகமாக பொருத்தமான இடத்தினைத் தெரிவுசெய்து வழங்குமாறு அங்கு சமுகமளித்திருந்த யாழ். மாநகர முதல்வருக்குப் பணிப்புரை வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தனியார் பேருந்து ஓட்டுநர்கள் முன்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைவாக அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தரிப்பிடங்களைப் பயன்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும், யாழ். மத்திய பஸ்நிலையப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர், வடபிராந்திய பிரதிப் போக்குவரத்து முகாமையாளர் கணேசபிள்ளை உள்ளிட்ட இ.போ.ச. பணியாளர்களுடன் கலந்துரையாடி மத்திய பஸ் நிலையப்பகுதியில் மேற்கொள்ளப்படும் முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்துக் கேட்டறிந்துகொண்டதுடன் அதுதொடர்பான ஆலோசனைகளையும் வழங்கினார்.

இதேவேளை யாழ். நகர அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய விரிவான சந்திப்பொன்றினை நாளையதினம் நடத்துவதாகவும் சம்பந்தப்பட்ட அனைவரையும் அக்கூட்டத்தில் பங்குகொள்ளுமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமைச்சருடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டின் (உதயன்), யாழ். மாநகர பிரதி முதல்வர் துரைராஜா இளங்கோ (றீகன்), ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), வர்த்தக சங்கப் பிரமுகர்கள், தனியார் பேருந்து உரிமையாளர்கள், நடைபாதை வியாபாரிகள் உள்ளிட்ட பலரும் சமுகமளித்திருந்தனர். (1)

# முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம்: ஆராய அமைச்சர் யாழ்.வரவுள்ளார்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கு மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்ணான்டோ அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். யாழ்.மாநகரசபை உறுப்பினர் மௌலவி ஏ.சுபியான் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் 125 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் இதுவரை மீள்குடியமர்ந்துள்ளன.

இவ்வாறு மீள்குடியமர்த்த மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு விதமான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் முஸ்லிம் மக்களின் எதிர்கால வாழ்வினை வளப்படுத்துவதற்குமான திட்டங்களைப் பார்வையிடுவதற்காகவும் மீள்குடியேற்ற அமைச்சர் வருகை தரவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரமளவில் வருகை தரவுள்ள இவர் யாழ்.முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடவுள்ளார் - என்றார். (எ-9)

# சமய சந்நிதிகளில்

வடமராட்சி, மே 31

வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மணவாளக் கோல திருக்கல்யாண உற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகி பிற்பகல் 4 மணிக்கு அவல் பூசை நடைபெற்று திருக்கல்யாணம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா வரும் நிகழ்வு இடம்பெறும். (எ-236)

* * *

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் ஆலய (பருத்தித்துறை சிவன் கோயில்) வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாள்கள் உற்சவம் இடம்பெறும். (எ-36)

* * *

வடமராட்சி, மே 31

புலோலி, மந்திகை அருள்மிகு கண்ணகை அம்மன் கோயில் வருடாந்தப் பொங்கல் உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த ஒருவார காலத்துக்கு மேலாக இடம்பெற்றுவரும் 'சிலம்புச் செல்வி' கதைகூறல் நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலையுடன் நிறைவுறும்.

அதனைத் தொடர்ந்து பொங்கல் இடம்பெறும். அன்றைய தினம் முழுவதும் பல பகுதிகளிலிருந்தும் பாற்காவடி, பறவைக் காவடி, கரகக்காவடி, கரகாட்டம் என்பன வெவ்வேறு கோயில்களிலிருந்து இங்கு வந்துசேரும். தொடர்ந்து விசேட அபிஷேகம் பூசை என்பவற்றுடன் பொங்கல் உற்சவம் நிறைவுறும். (எ-236)

# சிறுகைத்தொழிலில் ஈடுபட்ட பெண்கள் கௌரவிப்பு

நவாலி, மே 31

நவாலி ஊன்றுகோல் நிறுவனத்தினர் நடத்திய அன்னையர் தினத்தில் சிறுகைத் தொழிலில் ஈடுபட்டுவரும் பெண்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்தவாரம் நவாலி முருகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் சி. விஜயகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீண்ட காலமாக தையல் செய்துவருபவர்கள், மாலை கட்டுபவர்கள், பாலர் பாடசாலை ஆசிரியைகள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டு, அவர்களுக்குப் பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

மேலும் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த சுமார் 70 அன்னையருக்கு சேலைகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், முதியோர்கள் ஆகியோரின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (எ-100)

# வட்டுக்கோட்டையில் அமைச்சருக்குக் கௌரவிப்பு

வட்டுக்கோட்டை, மே 31

பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட்டுக்கோட்டை தெற்கு அருள்மிகு பேச்சி அம்பாள் ஆலயப்பகுதியில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை தெற்கு அருள்மிகு பேச்சி அம்பாள் ஆலயம், அம்பாள் சனசமூக நிலையம் மற்றும் இளம் நிலா விளையாட்டுக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து இக்கிராம மக்களால் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பேச்சி அம்பாள் ஆலயப் பணிகளை நிறைவு செய்யும் நோக்கில் மடப்பள்ளி, குடிதண்ணீர்தொட்டி என்பவற்றுக்கும் அமைச்சரால் அடிக்கல் நடப்படவுள்ளது. அத்துடன் அப்பகுதியில் இடம்பெறும் வீதித்திருத்த வேலைகளையும் அவர் பார்வையிடவுள்ளார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலன்ரின், முருகேசு சந்திரகுமார் மற்றும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. கமலேந்திரன், வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளர் வே. மகேந்திரன், தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம் ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர். (1-161)

# இடம்பெயர்ந்த மாணவர்கள் 48 பேருக்கு சைக்கிள்

வடமராட்சி, மே 31

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்து பாடசாலைகளில் கல்வி கற்று வரும் மாணவர்கள் 48 பேருக்கு "பார்சிஸ்" நிறுவனம் சைக்கிள்களை வழங்கியுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட 48 மாணவர்களுக்கும் உதவிப்பிரதேச செயலர் திருமதி உஷா சுந்தரலிங்கம் முன்னிலையில் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (எ-236)

# காரைநகர் அபிவிருத்தி கொத்தணிக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 31

காரைநகர் பிரதேசசபை கொத்தணிகளுக்கான வடக்கு-கிழக்கு உள்ளூர் சேவை மேம்பாட்டு செயற்திட்ட நாலாண்டு அபிவிருத்தித்திட்டம் (நெல்சிப்) தொடர்பான கலந்துரையாடல் அப்பகுதி மக்களுடன் இடம்பெறவுள்ளதாகக் காரைநகர் பிரதேசசபைச் செயலாளர் இ. லோகநாதன் அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் காரை. தெற்கு கொத்தணியின் ஜே/42, ஜே/43, ஜே/44, ஜே/45 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு களபூமி திக்கரை இந்து இளைஞர் மன்றக் கட்டடத்திலும் -

காரை.வடக்குக் கொத்தணியின் ஜே/40, ஜே/41, ஜே/46, ஜே/47, ஜே/48ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்குக் காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயக் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளது.

இந்தக்கலந்துரையாடல்களில் அப்பகுதி மக்களைக் கலந்துகொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-16)

SHAMROCK
சுச்சமோட்டை, யாழ்.
A/L 2012
இணைந்த கணிதம்
*நிலையியல்
*திரிகோண கணிதம்
Fri-4.30, Sat,Sun- 6.30.p.m
Mr.G.கண்ணன்,Bsc.
BIOLOGY
Mr.R.[illegible],Bsc.

# மரண அறிவித்தல்கள்

## பஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (முத்துராசா)

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ்.மாநகரசபை)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை நான்காம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 29.05.2010 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரேசம்மாவின் (ராசாத்தி) அன்புக் கணவரும், லியோனாகார்மல் (பேபி-கனடா), வின்சன் ஆரோக்கியராசா (ராஜன்-பிரான்ஸ்), வின்சன் டனி (ஜெரி-கனடா), Bro. ரொனி ஜெராட் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

*நான்காம் குறுக்குத்தெரு,*
*பருத்தித்துறை. தொ.பே. : 0213008986*

தகவல்:
மனைவி.

## கிட்டிணர் வில்வரத்தினம்



அச்சுவேலி, கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணர் வில்வரத்தினம் (சிவலிங்கம்) கடந்த (27.05.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கிட்டிணர் காலஞ்சென்ற இரத்தினம் தம்பதியினரின் பாசமிகு மகனும் விக்கினேஸ்வரியின் (மாலா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னப்பு மற்றும் பூபதி தம்பதியினரின் அன்பு மருமகனும் தர்சன் (இத்தாலி), தீபம், நிசோ, காலஞ்சென்ற கபிலன் மற்றும் நதி, நிதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் வில்வம் (கனடா), விசாகரத்தினம், இராசாத்தி (கனடா), காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் ரோகினியம்மா, ஐயாத்துரை, பூவிலிங்கம் (கனடா), சிவனடி (லண்டன்), சிவானந்தம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ரதம் (லண்டன்), விசி (இத்தாலி), காலஞ்சென்ற ஈசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் குணாளன், கரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விது, தனு, தர்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.30 மணிக்கு தீர்த்தான்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கதிரிப்பாய்,*
*அச்சுவேலி.*

தகவல்:
குடும்பத்தினர்.

# சுன்னாகத்தில் வெல்ல உற்பத்தி நிலையம்

யாழ்ப்பாணம், மே 31

சுன்னாகத்தில் பதநீர் வெல்ல உற்பத்தி நிலையத்தைப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைத்தனர்.

பனைசார் உற்பத்திகளைப் பெருக்குவதற்கும் அதன் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கும், தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி நிலையத்தைத் திறந்து வைத்ததன் பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் சந்திரசிறி, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) எம்.பி. உள்ளிட்ட அதிதிகள் தொழிற்சாலையின் பணிகளைப் பார்வையிட்டதுடன் பணியாளர்களுடனும் கலந்துரையாடினர். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933· தொலைநகல்.: 222 9944

# நினைத்ததும்... நடப்பதும்...!

அப்பாடா! சுமார் இரண்டு, மூன்று மாதங்களாக இழுபட்ட ஐக்கிய நாடுகள் சபையோடு - அதன் செயலாளர் நாயகத்தோடு சம்பந்தப்பட்ட - இலங்கை குறித்த விடயம் ஒன்று முடிவுக்கு வந்துள்ளது.

ஆம். இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில், மிகக்குறிப்பாக இறுதிக்கட்டத்தில், மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக்கூறும் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ- மூனுக்கு ஆலோசனை கூறுவதற்கு நிபுணர் குழு நியமிக்கப்படும் என்பது இப்போது தீர்க்கமாகிவிட்டது.

குறிப்பிட்ட நிபுணர் குழுவை நியமிக்கப்போவதாக அறிவித்த பின்னர், அது விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை உரிய நடவடிக்கையில் இறங்குவதற்கு சுணக்கம் காட்டி வந்தது. இலங்கை அரசின் சார்பில் சில தரப்புகளால் கொடுக்கப்பட்ட அழுத்தத்தினால், உத்தேச நிபுணர் குழு நியமிக்கப்பட மாட்டாது என்ற சந்தேக நிலை தோற்றுவிக்கப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் உயர் வட்டாரங்கள் வெளியிட்ட முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை அல்லது தகவல்களை வைத்து இது விடயத்தில் அவை, தளம் பல் நிலையில் இருப்பதாக, அக்கறை இழந்து அத்திட்டத்தை கைவிடப் போவதான ஊகங்கள் வெளியாகிக் கொண்டிருந்தன.

இது விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை வளாகத்தில் இயங்கும் 'இன்னர் சிற்றி பிறெஸ்', நிபுணர் குழு நியமிப்பதில் அக்கறை குறைந்து போவதனை அடிக்கடி ஆதார பூர்வமாக வெளிப்படுத்தி, அம்பலமாக்கி வந்தது.

எனினும் ஐக்கிய நாடுகள் சபை நேற்றுமுன் தினம் - இருபத்தொன்பதாம் திகதி - உத்தியோகபூர்வமாக வெளியிட்ட அறிக்கை -

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் நடைபெற்றதாகக் கருதப்படும் போர்க் குற்றங்கள் உட்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறும் விவகாரத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை கூறுவதற்கு நிபுணர் குழு ஒன்றை தெரிவு செய்வதில் ஐ.நா. இப்போது ஈடுபட்டுள்ளது- என்று அறிவித்திருந்தது.

நிபுணர் குழு நியமிக்கப்படுமா அல்லது அது கைவிடப்படுமா என்பதில் கடந்த இரண்டு, மூன்று மாதங்களாக நிலவிய தளம்பல் நிலையும், அதனால் உண்டான சந்தேகங்களும் நீங்கிவிட்டன. இனிக் காரியம் நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம்.

இத்தனைக்கும், முதற்சொன்ன நிபுணர் குழுவோ அல்லது இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து வேறு எந்தவிமான சர்வதேச மட்டத்திலான விசாரணைகளோ நடைபெறக்கூடாது என்பதில் அதீத அக்கறை காட்டிய - விழுந்தெழும்பி அவசரப்பட்ட - இலங்கை அரசாங்கத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ அறிவிப்பு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் தனக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் குழுவை நியமித்தால் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், மனி தாபிமானமற்ற சம்பவங்கள் குறித்து உண்மைகள் வெளி வந்துவிடக்கூடும் என்ற மனப் பயத்தினால் சாக்குப் போக்கு காட்டுவதற்கு நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவை முன்னிறுத்தி -

சர்வதேச மட்டத்தில் 'கிளறிப் பார்க்கும்' வேலைகளைத் தடுக்கும் நோக்குடன் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அமெரிக்காவுக்கு மேற்கொண்ட விஜயம் பலன் எதனையும் தரவில்லை. பச்சையாகச் சொன்னால் பீரிஸ் தோற்றுப் போனார்.

மேலும் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமெரிக்க அமைச்சர் -

வன்னிப் போரின் இறுதியில் நடைபெற்ற போர்க் குற்ற முறைப்பாடு எதனையும் ஆணைக்குழு விசாரிக்க அதிகாரம் வழங்க வேண்டும் என்றும் -

ஆணைக்குழு சுதந்திரமாக செயற்படுவதும் அது கண்டறியும் தகவல்களை ஒளிவுமறைவின்றி பகிரங் கப்படுத்துவதும் மிகவும் அவசியம் என்றும் போட்ட 'சூடு'களுடன் பாவம் பீரிஸ் அல்லாடி இருப்பார்!

# ஐ.நா. செயலாளர் எடுத்த முடிவை மாற்ற அமைச்சர் பீரிஸ் செய்த முயற்சிதோல்வி

நேற்று 30.05.2010 அன்று சண்டே ரைம்ஸ் பத்திரிகை எழுதியிருந்த அரசியல் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி இது.

★ ஐரோப்பிய ஒன்றியத்துடனான பேச்சு பயனில்லை.

★ பான் கீ - மூன் தீர்மானத்தை மாற்ற அமைச்சர் பீரிஸ் எடுத்த முயற்சி தோல்வி.

★ சீன, ரஷ்ய ஆதரவில் இலங்கைக்குத் துணிச்சல்.

★ இந்திய உறவில் திருப்பம் வருமா?

ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து - ஜி.எஸ்.பி -பிளஸ் சலுகைகளை மீளவும் உறுதிசெய்து கொள்ளும் வகையில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு உயர்மட்ட குழுவொன்றை அரசு பிரஸல்ஸ் நகருக்கு அனுப்பியிருந்தது. இந்த சலுகைகளை இந்த வருடம் ஓகஸ்ட் மாதத்துடன் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே முடிவு செய்திருந்தது.

மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச நியமங்களைக் கடைப்பிடிக்கும் தகுதிகளை இலங்கை கொண்டிருக்கவில்லை, அந்த வகையில் இலங்கை தவறிழைத்து விட்டதாக ஐரோப்பிய ஒன்றியம் கருதுகின்றது.

இச்சலுகைகள் வாபஸ் பெறப்படுமானால் உடுபுடைவைகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் வேலையின்றி தெருவீதிகளில் தவிக்க வேண்டிய நிலை ஏற்படக் கூடும்.

பிரஸல்ஸுக்குசென்றிருந்த உயர் அதிகாரம் கொண்ட குழுவுக்கு சட்டமா அதிபர் மோகான் பீரிஸ் தலைமை வகித்தார். இக்குழுவில் அங்கம் வகித்த ஏனையவர்களில் வெளியுறவு அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கை தூதுவர் ரவிநாத ஆரியசிங்க ஆகியோரும் அடங்கி இருந்தனர்.

பேச்சுக்களின் பின்னர் இலங்கை தரப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கை-

இலங்கை அரசும் மக்களும் அமைதியேற்பட்டுள்ள நிலைமையை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறார்கள் என்பது இலங்கைதரப்பினால் எடுத்துக் கூறப்பட் டிருந்தது. அவசரகால விதிகளின் கீழான ஆட்சிசெயற்பாடுகள் மாற்றப்பட்டுள்ளன.தேசிய இணக்கப்பாடுகள் தொடர்பான ஆணைக்குழுநியமிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் தொடர்பாக தேசிய நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் அமைச்சரவையினால்

## அழுத்தம் பிரயோகிக்கும் நிலையில் இந்தியா

அங்கீகரிக்கப்பட விருக்கிறது. இவ்வாறெல்லாம் இலங்கை தரப்பினால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அங்கிருந்து ஜனாதிபதிக்கும் அரசாங்கத்தின் ஏனைய தலைவர்களுக்கும் கிடைத்துள்ள தகவல்கள் மகிழ்ச்சியளிப்பவையாக இல்லையென்று தெரிகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச ஒத்துழைப்பு - மனிதஉரிமை உதவி - மற்றும் நெருக்கடிகளுக்கான பிரதிபலிப்பு ஆண்ணயாளர் டாக்டர் கிறிஸ்டலினா ஜோர்ஜியாவுடன் குழுவினர் மேற்கொண்ட பேச்சுக்களின் போது அவர் கேள்விகளுக்குமேல் கேள்விகளைக் கேட்டுவைத்தார். நீதி மன்றங்களில் சட்டத்தரணிகள் தோன்றி செயல்பட முடியாமலிருப்பதாகவும் ஜோர்ஜியா அம்மையார் குழுவினரிடம் சுட்டிக்காட்டினார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் நடைபெற்றுவரும் பேச்சுக்களை தொடர்ந்து மேற்கொள்ளும் நோக்கத் துடனேயே தமது குழு பிரஸல்ஸ் வந்ததாகவும் இப்போதைய சூழ்நிலை தொடர்ந்து நிலவுமானால் தமது குழு மீளவும் பிரஸல்ஸ்வரமாட்டாதென்றும் குழுவின் தலைவர் பீரிஸ் பின்னர் கூறியதாகத் தெரிகின்றது.

முன்னர் நடந்தவற்றைவிட இம்முறை நடைபெற்றுள்ள பேச் சுக்கள் கடினமானதாக இருந்துள்ளது எனக் கருதப்படுகின்றது.

நாட்டின் வருமானத்தை பெருமளவில் தேடித்தரும் உடுபுடைவைகள் தொழில் மிக மோசமான எதிர்காலத்துக்கு முகம் கொடுக்க வேண்டிவரலாம் என்று கருத இடமுண்டு.

### வெளிஉறவு அமைச்சரின் அமெரிக்க விஜயம்

புதிய வெளிஉறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் அமெரிக்க விஜயம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

நியூயோர்க்கில் ஐ.நாவில் பேராசிரியர் பீரிஸ் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீமூனை சந்தித்துப் பேசினார். அந்த வேளையில் ஜனாதிபதி ராஜபக்ஷவிடமிருந்து கடுமையான செய்தியொன்றை பான்கீமூனுக்கு

## சீனா, ரஷ்யா ஆதரவு நிலையால் இலங்கைக்கு வந்தது துணிச்சல்

அமைச்சர் வழங்கியதாகத் தெரிகிறது.

''இலங்கை மீதான உங்கள் கைகளை அப்பால் எடுங்கள்'' என்பதாகும் அந்தச் செய்தி. ஐ.நாவின் இப்படியான செயற்பாடுகள் முன் உதாரணமற்றது என்று பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் செயலாளர் நாயகம் நியமிக்க விரும்பும் குழுவுக்கு ஐ.நா.பாதுகாப்பு சபையினதோ, பொது சபையினதோ அல்லது மனிதஉரிமை சபையி னதோ ஆதரவு கிடைத்திருக்க வில்லையென்றும் பீரிஸ் தெரிவித் துள்ளார்.

இலங்கை தானே சொந்தமாக தனது இணக்கப்பாட்டு ஆணைக் குழுவை நியமித்திருக்கிறது. முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி. சில்வா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவே போரின் இறுதிகட்டத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.விசாரிப்பதானது காலத்துக்கு முந்திய செயற்பாடாகும் என்று பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை கண்காணிப்புச்சபை போன்ற சர்வதேச அமைப்புகள் இலங்கையின் தலையீடு இல்லாதவகையில் இந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஆயங்கள் அமைக்கப்பட வேண்டுமென வற்புறுத்துகின்ற போதிலும் இலங்கை தனது உள்ளூர் ஆணைக் குழுவின் விசாரணையைத் தொடர்ந்து நடத்துவதற்கு அவகாசம் அளிக்கப்பட வேண்டும் என்று, பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஐ.நா.செயலாளர் நாயகம் பீரிஸின் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை யென்று தகவல்கள் கூறுகின்றன. குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு ஆயம் ஒன்றை நியமிக்கும் உரிமை தமக்கு இருக்கிறது என்று பான்கீ-மூன் தெரிவித்தார் என்று ஐ.நா .பேச்சாளர் மார்டின் நெசேர்க்கி உறுதிப் படுத்தியுள்ளார்.

இம்மாதிரி ஆயங்கள் காஸாவில் இஸ்ரேல் நடந்து கொண்டவிதம் குறித்தும் கடந்த வருடம் கினிபீஸாவ் போர்க் குற்றங்கள் புரிந்தமை குறித்தும் விசாரணை ஆயங்கள் நியமிக்கப்பட்டதற்கான முன் உதாரணம் இருக்கிறது என்றும் அவர் உறுதி செய்தார்.

கடந்த வாரம் பான்கீ-மூன் பத்திரிகையாளர்களிடம் பேசியபோது இலங்கையில் இடம்பெற்றுள்ள போர்க் குற்றங் கள் தொடர்பாக விசாரிப்பதற்கான ஒரு ஆயத்தை சர்வதேச தரங்கள் மற்றும் நடைமுறைகளின் அடிப்படையில் நியமிப்பதற்கு இன்னமும் நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவித்தார்.

இலங்கை அமைச்சரை மூன்று முக்கிய விடயங்களை முதலில் செயற்படுத்தும்படி பான்கீ-மூன் தெரிவித்திருப்பதாக செய்திகள் கூறின.

முதலில் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்களின் நிலைமைகளை தொடர்ந்து சீர்செய்வதை முன்னெடுங்கள். அவர்கள் மீளவும் குடியமரும் இடங்களைத் தெரிவு செய்வதை விரைவு படுத்துங்கள், அவர்களை மீள வும் ஒருங்கிணையுங்கள்.

இரண்டாவதாக தேசிய இணக்கப்பாட்டை முன்னேற்றுங்கள்.

மூன்றாவதாக நான்முன்னர் ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் விவாதித்தமைக்கு அமைவாக பொறுப்புக் கூறும் செயல் பாடுகளை கூடிய வரையில் விரைவாக முன்னெடுங்கள்.

ஐ.நா.விசாரணைக் குழுவைப் பொறுத்தவரை அரசியல் மட்டத்தில் இலங்கையால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என அமைச்சர் பீரிஸ் ஐ.நா.விலிருந்து செயல்படும் ஐ.பி.எஸ். நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

மேற்குலகு நாடுகள் மற்றும் மேற்குலக நிதி வழங்கலால் செயல்படும் அரசு சாரா நிறுவனங்களினதும் அழுத்தங்களுக்கு மாறாக இலங்கை அரசு இவ்வித கடினமான நிலைப்பாட்டை எடுத்திருப்பதற்கு தனக்கு சீனாவிடமிருந்தும் ரஷ்யாவிடமிருந்தும் உறுதியான ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதே காரணம் என்று கருதப்படுகின்றது. ஐ.நா.உயர்மட்ட நிலைகளில் இலங்கைக்கு எதிராக ஏதும் நடவடிக்கை எடுக்கப்படுமானால் இந்நாடுகள் இரத்து அதிகாரங்களைப் பிரயோகிக்க கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேமாதிரியான ஒருநிலைமை கடந்த வருடம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஏற்பட்ட போது அணி சேரா நாடுகளதும் பல லத்தின் அமெரிக்க நாடுகள் மற்றும் அரபு நாடுகளின் உதவியுடன் இலங்கை நிலைமையைச் சமளித்து விட்டது.

### நம்பியார் விவகாரம்

ஐ.நா.நிர்வாகத்துக்குள்ளும் இது விடயத்தில் சில பிரச்சினைகள் எழுந்துள்ளன.

செயலாளர் நாயகத்தின் அரசியல் ஆலோசகரும் பிரதான அலுவலருமான விஜே நம்பியார் போர் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தபோது ராஜபக்ஷவுடன் பேசுவதற்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டிருந்தார். அவ்வேளையில் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

ஐ.நா.சிறப்பு அறிக்கையாளர் பிலிப்ஸ் ஆல்ஸ்ரன் ஏற்கனவே வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், நம்பியார் புலிகளின் தலைவர்களுடன் பேசிய தன் பின்னர் சரணடையவந்த புலிப் போராளிகளை இலங்கை ராணுவப்படைகள் விசாரணையின்றி கொலை செய்துவிட்டார்கள் என்று கூறியமை பதிவில் இருக்கின்றது.

புலித்தலைவர்களுடனோ சரணடைய வந்தவர்களுடனோ தாம் எதுவிதத் தொடர்பும் கொண்டிருக்கவில்லையென்று நம்பியார் ஏற்கனவே மறுத்துவிட்டார் என்று ஐ.நா.பேச்சாளர் கூறியுள்ளார்.

புலிப்போராளிகள் சரணடைய விருப்பது தொடர்பாக சில தகவல்களை மாத்திரம் வேறொருதரப்பின் மூலம் தாம் கொடுத்திருந்தாக அவர் தெரிவித்திருந்தாராம் இதில் இன்னொரு அம்சம் என்னவென்றால் இந்திய ராணுவத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஜெனரல் சதிஷ் என்பவர் நம் பியாரின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 18 | 01.06.2010 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி | : சதுர்த்தி |
| | மு.ப. 08.15 |
| நட்சத்திரம் | : உத்தராடம் |
| | மு.இ. 7.11 வரை |
| சுபநேரம் | : 10.22 - 11.52 |
| ராகுகாலம் | : 02.52 - 04.22 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 30.05.2010 இல் B.A. பட்டம்பெற்ற

**திரு.முருகையா கேசவன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்

**கல்வியின் சிகரமாய்**
**காலமெலாம் திகழ நீயும்**
**பட்டங்கள் பலபெற்று**
**பார்போற்ற வாழ வாழ்த்துகின்றேன்**

நண்பன் ச.யசோதரன்
பத்திரகாளி கோயிலடி, சுழிபுரம்.

(98946)

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் 30.05.2010 அன்று இடம்பெற்ற வெளிவாரிப் பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வணிகமாணி பட்டத்தினைப்பெற்ற எனது நண்பன்

**இராசரத்தினம் ஸ்ரீகணேசன் (B.Com)**

மென்மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று வாழ்வில் உயர வாழ்த்துகின்றேன்.

க.தினேஸ்குமார்.
U.S.A.

(98943)

## 31 ஆம் நாள் நினைவுகளுடன் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**செல்லையா சபாரட்ணம்**

(இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி)


கடந்த 01.05.2010 அன்று சிவபதமடைந்த அமரர் செல்லையா சபாரட்ணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (31.05.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

V.கோமகள் (மகள்).

(98951)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி சரஸ்வதி



கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சரஸ்வதி நேற்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பார்வதி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் (உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்) அன்பு மனைவியும் சத்தியேஸ்வரன், சத்தியகுமார் (பிரான்ஸ்), சத்தியசீலன் (பிரான்ஸ்), மைதிலி (M.P.C.S., உடுப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தாயும் ஈஸ்வரி, பாலசுப்பிரமணியம், பரமேஸ்வரி, யோகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இராசேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமகள் (ஜேர்மனி), ஜெயகௌரி (பிரான்ஸ்), பாரதி, விக்னேஸ்வரன் (துறைமுக அதிகார சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் வெற்றிவேலாயுதம், விஸ்வலிங்கம், இராசலிங்கம், சிவஞானம், செல்வரட்ணம், சோமசுந்தரம், மகாலிங்கம், சிவக்கொழுந்து ஆகியோரின் மைத்துனியும் ஹரிஸ், கேதீஸ், தனுசன், குகப்பிரியன், சத்தியா, ஜசிந்தா, கீர்த்திகா, திவாகர், விபுஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2010) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ந.விக்னேஸ்வரன் (மருமகன்).
021 7902259

## அச்சுவேலியில் தும்பு உற்பத்தி தொழிற்சாலை திறப்பு

யாழ்ப்பாணம், மே 31

அச்சுவேலியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தும்புப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் பெயர்ப்பலகையும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் தும்புப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலையின் தொழிற்சாலை அலுவலகமும் தொழிற்பேட்டையும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டன.

அத்துடன் தொழிற்பேட்டையில் உற்பத்தி செய்யப்படவுள்ள மாதிரிகளை அதிதிகள் பார்வையிட்டதுடன் அது தொடர்பான விளக்கங்களையும் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டறிந்து கொண்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட இந்தத் தொழிற்சாலையில் 40 பெண்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்கள் முதற்கட்டமாக பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் காலப்போக்கில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளதாகவும் அச்சுவேலி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் செல்வராசா தெரிவித்தார். (ஒ)


தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்

University of Colombo

A/L? Pass → BIT
No → FIT → BIT



Just 25,000 Rs.Only(annually)
( for first 20 students)

Full scholarship for
Computer Engineering(USA),Sun Java, BCS,ICDL, Linux Admin(Canada),A+Hardware Tech(Australia)

Part scholarship for
CCNA,CCNP(USA),Sun Solaris, Toefl, RedHat Engineer(USA),Web Engineer(Canada)

Authorised Testing centre for Microsoft,Sun Microsystem, Toefl, CIMA, ICDL,CISCO

பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியைப்பயில்வதற்கு பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. பரீட்சைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் யாழ் பல்கலைக்கழகத்திலும் விரிவுரைகள் MCS நிறுவனத்திலும் நடாத்தப்படுகின்றன.

MCS
Supported By
UNDP/JRRP

கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
எமது திறமை எமது விரிவுரையாளர்களாலும், எம் மாணவர்களாலுமே

பதிவுகளுக்கு நேரில் MCS, 324, Palaly Road, Jaffna. T.P-772395895


## பாராட்டி வாழ்த்துகின்றேன்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 30.05.2010 இல் B.A. பட்டம்பெற்ற

**திரு.சங்கரப்பிள்ளை யசோதரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்

**கல்விப் புலத்தில் நீயும்**
**கலங்கரை விளக்காய்த்திகழ்ந்து**
**மென்மேலும் பட்டம் பல பெற்று**
**பார் போற்ற பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்**

நண்பன் மு.கேசவன்
பத்தானை வீதி, தொல்புரம், சுழிபுரம்.

(98945)

## வண்ணை வீரமாகாளி கொடியேற்றம் புதனன்று

யாழ்ப்பாணம், மே 31

வண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தான பெருந்திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 25 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

அடுத்த மாதம் 24ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத்திருவிழாவும், 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 26ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஒ-1)

## முதல் நன்றித் திருப்பலி

யாழ்ப்பாணம், மே 31

வண.பிதா அ.ஜெ. அன்ரனி ஜெயரஞ்சன் அடிகளார் நாளை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் தனது முதல் நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுக்கவுள்ளார்.

யாழ். தூய மரியன்னை பேராலயத்தில் கடந்த 27ஆம் திகதி வியாழக்கிழமை புதிய குருக்களில் ஒருவராக யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் இவர் திரு நிலைப்படுத்தப்பட்டார். (ஒ-14)


**வெளிவாரி விசேட கருத்தரங்கு**

கணிதமும் புள்ளி விபரவியலும்
ஆசிரியர்: த.தனசேகர்
ஆரம்பம்: 01.06.2010 செவ்வாய்

| | | |
|---|---|---|
| 1st Com | 4 - 5 p.m | வாரநாள்களில் தினமும் |
| Part I | 5 - 6 p.m. | நடைபெறும். |
| Part II | 6 - 7 p.m | |

DMI, ஆரியகுளம் சந்தி.

**கடை வாடகைக்குண்டு**

பரமேஸ்வராச் சந்தியில் (ஆலடிச் சந்தி) பலாலி றோட்டில் கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு:- 0771882111

**நிரு பிஸ்னஸ் கொலிஜ்**

2010 கணக்கீடு கருத்தரங்கு

கணக்கியல் மாணவர்களுக்கான தொடர் கருத்தரங்குகள் கொழும்பில் இருந்து வருகைதரும் பிரபல ஆசிரியர் எம்.சசிரூபன் அவர்களினால் செவ்வாய் (01.06.2010) காலை 10 மணிக்கு ஆரம்பமாக உள்ளதால் அனுமதியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். அலகு ரீதியாக பாடங்கள் மீட்கப்படும்.

மேலதிக தகவல் : T.P.-0773516592 / 0217200213
NIRU BISINESS COLLEGE, Nunavil Center, CHAVAKACHCHERI.


## மரண அறிவித்தல்கள்

### ஞானப்பிரகாசம் அருளானந்தம்

(ஜஸ்ரின்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் அருளானந்தம் (ஜஸ்ரின்) 28.05.2010 வெள்ளிக் கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் பிலோமினா தம்பதியரின் அன்பு மகனும் கொன்சியின் அன்புக் கணவரும் ஜஸ்மினின் (சாணுஜா - திருக்குடும்பக் கன்னியர் மடம்) பாசமிகு தந்தையும் தர்மசகாயம்பிள்ளை - றீற்றம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ரவி, அமரர் மேபிள் ஜெயமணி, அமரர் கிறிஸ்ரி, பெரியதம்பி மேசி, ஜெகன், செல்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமரர் ஜான்சி, சூட்டி, புனிதசீலி, ஜோன்சி, கரன், சுபா, கசில்டா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் நேற்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை மண்டைதீவில் நடைபெற்றன.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

(98948)

தகவல்:
கொன்சி (மனைவி).

### நடராசா தவமணிதேவி



மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தவமணிதேவி நேற்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பொன்னையா தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் தங்கராசா (ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான ஜெகதீஸ்வரி, கிருஸ்ணராசா ஆகியோரின் மைத்துனியும், நாராயணன், சுலோசனா ஆகியோரின் சகோதரியும் அருணகுமார் (கனடா), மோகனகுமார், தயாளன் ஆகியோரின் அன்பு மாமியும் கிஷோர், மிதிலா (சுவீடன்), லதன் (லண்டன்), அமுதினி, பிரபாலினி ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியை களுக்காகக் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 10, கனகசபை
அவெனியூ,
யாழ்ப்பாணம்.

(98944)

தகவல் :
தங்கராசா (மைத்துனர்).
0772224908


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரணைமடு குளத்திலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு நீர் விநியோக திட்டத்தினை துரிதப்படுத்துவதற்கான கருத்து பரிமாற்றக் கூட்டம் கடந்த 29ஆம் திகதி சனிக்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பாரம்பரிய மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுவின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி வி.மகேஸ்வரன் ஆகியோர்மேடையில் அமர்ந்திருப்பதனை முதல் படத்திலும், அரச அதிபர் கே.கணேஷ், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உதவிப் பொது முகாமையாளர் எந்திரி கி.பாரதிதாசன், தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, சி.சிறிதரன் ஆகியோர் கருத்துரை பகிர்வை மேற்கொள்வதனை 2,3,4,5 ஆம் படங்களிலும் நிகழ்வில் கலந்து கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

*(படங்கள்:லக்ஸ்மன், உமா)*

# நவாலிப் பகுதியில் பின் தங்கியுள்ள பிரதேசங்களை விரைவில் அபிவிருத்தியில் முன்னகர்த்த நடவடிக்கை

## வலி. தென்மேற்குப் பிரதேச செயலர் தகவல்

யாழ்ப்பாணம், மே 31

அபிவிருத்தியில் பின்தங்கியுள்ள நவாலி தெற்கு, நவாலி வடக்கு,நவாலி கிழக்கு ஆகிய பிரதேசங்கள் 'நெப்சி' திட்டத்தின் கீழ் விரைவில் முன்னகர்த்தப் படவுள்ளன.

இத்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னகர்த்துவதற்கு கிராம மட்ட சனசமூக நிலையங்கள்-பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

நவாலிக்கான திட்டமுன்மொழிவுகளை முன்னிலைப்படுத்தும் அபிவிருத்தி கூட்டம் மானிப்பாய் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் இ.கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பிரதேச செயலர் திருமதி எ.அ. யோகநாயகம் தொடர்ந்து பேசுகையில் :

எமது பிரதேசம் 28 கிராம அலுவலர் பிரிவுகளை கொண்ட பரந்த பிரதேசம்.

ஒவ்வொரு கிராம மக்களினதும் அடிப்படைப் பிரச்சினைகள் இனம் காணப்பட்டு அவற்றிற்கான தீர்வினை முன்வந்து முன்னுரிமை பிரகாரம் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டவுள்ளது.

அதற்காக இத்திட்டங்களின் முன்னுரிமைத் தன்மையைக் கருத்திற்கொண்டு மக்கள் கூடும் பிரதேசத்திற்கு வருகை தருகின்றோம்- என்றார்.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவியாளர் இ. கிருஸ்ணகுமார் பேசுகையில்:

ஜூன் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் இத்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

கொத்தணி ரீதியாக எம்மால் மேற்கொள்ளப்படும் அனைத்து திட்டங்களும் வடக்கு மாகாண அரசிற்குதிட்டத் தொகுப்புக் கோவையாக வழங்கப்படவுள்ளன.

எனவே 28 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்ட பிரதேச- கிராம இணைப்பாளர்கள் முழுமையாகச் செயற்பட வேண்டும்- என்றார்.

இந்நிகழ்வில் வலி. தென்மேற்கு பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் செல்வி வே. நிரஞ்சலா உரையாற்றுகையில்:

மக்களின் தேவைகள் உணரப்பட்டு அவற்றினை முன்மொழிவுகளாக ஏற்று அபிவிருத்தியைச் செய்வோம்.

அதற்கு இணங்க சமூகமட்ட நிறுவனங்கள் நவாலிப் பிரதேச அபிவிருத்திக்காகவும் மக்களின் தேவைக்காகவும் முழுமையாக செயற்பட வேண்டும்- என்றார்.

மேற்படி கூட்டத்தில் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி சி.பொன்மதி, நவாலி வடக்கு கிராம அதிகாரி அ.தனபாலரத்தினம், நவாலி தெற்கு கிராம அதிகாரி கு. எழிற்செல்வன், நவாலி கிழக்கு கிராம அதிகாரி இ.நித்தியானந்தன், தொழில்நுட்ப அதிகாரி த. கலாவர்ணன், கலாசார அலுவலர் திருமதி கே. மாலினி ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-302)

# ஐந்து ஆலயங்களின் வர்ணனைத் தொகுப்பான 'சிவநெறி' இறுவட்டு வெளியீடு நாளை

வடமராட்சி, மே 31

கரவெட்டி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக சைவ ஆலோசனைச் சபையின் வெளியீடாக வடமராட்சி பிரதேசத்திலுள்ள ஐந்து கோயில்களின் வர்ணனைத் தொகுப்பான "சிவநெறி" இறுவட்டு வெளியீட்டு விழா நாளை செவ்வாய்கிழமை பி.ப.3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மல்லாகம் மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

நிகழ்வில் நல்லை ஞானசம்பந்த ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரையை வழங்குவார். வரவேற்புரையை பிரதேச செயலக நிர்வாகக் கிராம அலுவலர் வி.கே.சண்முகநாதன் வழங்க, வெளியீட்டுரையை யாழ்.பல்லைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவார்.

யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனின் வர்ணத் தயாரிப்பில் உருவமைக்கப்பட்ட 'சிவநெறி' இறுவட்டில் வடமராட்சிப் பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற கரவெட்டி தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகர் கோயில், புலோலி பசுபதீஸ்வரர் கோயில், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில், வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில், அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயில் ஆகிய ஐந்து கோயில்களின் வர்ணனைத் தொகுப்பு இடம்பெற்றுள்ளது.

இவ்விழாவில் வைத்து இறுவட்டு வர்ணனைத் தயாரிப்பாளர் மதுரகவி காரை எம்.பி அருளானந்தன், சைவசமய அறிவுத்துறை சார்ந்த வளவாளர்கள் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா, செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், ஓய்வுபெற்ற ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அ.விநாயகமூர்த்தி, வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன், வீடியோ பாலா ஆகியோர் கரவெட்டிப் பிரதேச செயலக சைவ ஆலோசனை சபையினரால் கௌரவிக்கப்படவு ள்ளனர். (எ-236)

# திறந்த பாடசாலைச் செயற்திட்டம் வேம்படியில் வெள்ளியன்று

யாழ்ப்பாணம்,மே 31

மகரகம தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் திறந்த பாடசாலைச் செயற்திட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, மகரகம தேசிய கல்வி நிறுவக திறந்த பாடசாலைகள் பணிப்பாளர் கலாநிதி நந்தா வன்னியாராய்ச்சி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். இளங்கோவன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா, வடமா காண முறைசாராக் கல்விப் பிரிவுப் பணிப்பாளர் எஸ்.நடராசா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

திறந்த பாடசாலைகள் செயற்திட்டத்தின் கீழ் கல்விபயிலவென யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து கல்விவலயக்களிலிருந்து தலா 20 மாணவர்கள் வீதம் நூறு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்செயற்திட்டத்தின் கீழ் வடமராட்சி க ல்விவலயத்தில் கெருடாவில் சனசமூக நிலையம், அல்வாய் அம்பாள் பாடசாலை, குடத்தனை நற்தூதுப் பணியகம், நாகர் கோவில் மகாவித்தியாலயம் ஆகிய நான்கு இடங்களில் திறந்த பாடசாலை வகுப்புகளை நடத்த ஏற்பாடாகியுள்ளது. (எ-236)

# அடிக்கடி மாற்றமடையும் காலநிலை தொற்றுநோய்களால் பலர் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 31

தற்போது வீசிவரும் கடும் காற்று மற்றும் கால நிலை வேறுபாட்டால் மக்கள் அதிகளவில் தொற்று நோய்களுக்கு இலக்காவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வகையில் குடாநாட்டில் தற்போது கண்நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதனைவிடக் க்காய்ச்சல், தடிமன், தொண்டை நோவு போன்ற தொற்றுநோய்களுக்கு இலக்காகி சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்துக் காணப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சோளக் காற்று பலமாக வீசி வருவதாலும் திடீர் திடீரெனக் காலநிலை வேறுபாடு ஏற்படுவதாலுமே மக்கள் இவ்வாறான தொற்று நோய்களுக்கு இலக்காவதாகவும் மக்கள் இத்தொற்றுக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் செயற்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-224)

# கறுத்தக் கொழும்பானுக்கும்,பலாப்பழத்துக்கும் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வியாபாரிகள்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணத்தின் தனித்துவமாக விளங்குகின்ற கறுத்தக் கொழும்பான் மாம்பழத்துக்கும் பலாப்பழத்திற்கும் யாழ். நகரில் திட்டமிட்ட வகையில் செயற்கைக் கிராக்கி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். நகரச் சந்தையில் பலாப்பழம், கறுத்தக் கொழும்பான் மாம்பழம் என்பவற்றின் சுண்டியிழுக்கும் வாசனையால் கவரப்படுகின்ற சுற்றுலாப் பயணிகள் அவற்றைப் பெருமளவில் வாங்கிச் செல்வதில் அதிக அக்கறைகாட்டி வருகின்றனர்.

என்ன விலைகொடுத்தேனும் கறுத்தக் கொழும் பானையும் பலாப்பழத்தையும் பயணிகள் வாங்கிச் செல்வதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சில வியாபாரிகள் அவற்றின் விலைகளை தம்மிஷ்டப்படி அடிக்கொருதடவை அதிகரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

கறுத்தக் கொழும்பான் மாம்பழம் ஒன்று 60 ரூபாவாகவும் பலாப்பழம் ஒன்று 400 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது.

இவ்வாறு தவித்த முயல் அடிப்பது போல அதிகரித்த விலையில் பழங்களை விற்பனை செய்வதைவிடவும் இப்போது இன்னொரு தந்திரத்தையும் பழவியாபாரிகள் கைக்கொள்ளத் தொடங்கியுள்ளனர். கடைகளில் தேவையான அளவு பழங்கள் இருந்தாலும் அவற்றை மறைத்து வைத்து விடுகின்றனர்.

இதனால் பழங்களை வாங்க ஆவலுடன் வரும் பயணிகளிடம் கறுத்தக் கொழும்பான்,பலாப்பழம் என்பவற்றிற்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகக் கதையளந்து விட்டு, பின்னர் மறைத்து வைத்திருக்கும் பழங்களை கொள்ளை விலைக்கு விற்று விடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-224)

# கற்கள் பறிக்கப்பட்டும் இன்னும் புனரமைப்பு இல்லை

யாழ்ப்பாணம், மே 31

யாழ்.நகரில் சப்பல் வீதியைப் புனரமைப்பதற்கு கற்கள் பறிக்கப்பட்டு நீண்ட நாள்களாகியும் வீதிப் புனரமைப்புப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

புனரமைப்பிற்கெனப் பறிக்கப்பட்ட கற்கள் வீதியெங்கும் சிதறிக்கிடப்பதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாகப் பாதசாரிகள் தெரிவித்தனர்.

மத்திய கல்லூரிக்கு அருகாகச் செல்லும் சப்பல் வீதியின் பெரும் பகுதி பயணிக்க முடியாதவாறு படுமோசமாகச் சேதப்பட்டுக் காணப்படுகின்றது. (எ-224)




# பழுதடைந்த தயிர் வீதிகளில் விற்பனை

யாழ்ப்பாணம்,மே 31

யாழ். நகரை அண்டிய வீதியோரங்களில் வைத்து பழுதடைந்த தயிர் விற்கப்படுவதாக மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்ட சிறிய மண் சட்டியில் அடைக்கப்பட்ட தயிர் யாழ்ப்பாணத்தின் விதியோரங்களில் விற்கப்படுகின்றன.

இந்தத் தயிர் உற்பத்தி செய்யப்பட்டு நீண்ட நாள்களானதால் பழுதடைந்து காணப்படுவதாக இதை வாங்கிப் பயன்படுத்திய மக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு பழுதடைந்த தயிர் சட்டிகள் விற்பனை செய்யப்படுவதால் இவற்றை வாங்கும் போது சரியாகப் பரிசீலித்த பின்னரே வாங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவில்லாத் துயரலையில் மூன்றாம் ஆண்டு நினைவுகள் சுமந்து..



சோதிராஜா நிசாந்தன் — சோதிராஜா சுதர்சன்

மலர்வு 25.09.1980 — உதிர்வு 04.06.2007 — மலர்வு 06.11.1986

நான்கு விழிகள் மூடியதால்
பல விழிகள் நீர் சொரிய
கண்ணீரால் மூன்று ஆண்டுகள் கரைந்து மறைந்தது மகனே
வாயில் கடந்து எப்படி நீங்கள் இருவரும் போனீர்கள்?
தாயின் வயிறு பற்றி எரிவது தான் தெரியாதோ
இயற்கையின் நியதியிலே எமையெல்லாம் தவிக்கவிட்டு
விதி விதித்த வலையினிலே வீழ்ந்து விட்ட என் செல்வங்களே
காட்சி தந்து மறைகிறீர்கள் என் கனவில் மட்டும் ஏன் வரவில்லை.
பாயிற் படுத்தும் உறக்கம் தீண்டவில்லை மகனே
பாதியிலே பறந்து சென்றீர்களோ - இருவரும்
உங்கள் பிரிவின் செய்திகேட்டு ஒரு நிமிடம்
இதயமே நின்று போய் விட்டது.
கொற்றவன் வந்து உன்னை
கொண்டு தான் சென்றதேனோ
விட்ட கண்ணீர் காயவில்லை - இனி விழிகளிலோ நீரும் இல்லை.
உத்தமமான உங்கள் நினைவு உள்ளம் விட்டு அகலவில்லை.
என்னதான் செய்திடினும் என் சோகம் மாறவில்லை.
கண்ணீரில் வாழ்வதனால் கடல்நீரும் காரமில்லை.
மூன்று வருடம் மறைந்து விட்டது
அகலுமா உங்கள் நினைவின் பாரம்
மறையுமா உங்கள் பிரிவின் சோகம்
கூண்டின் கிளிபோல் திகைக்கின்றேன் - நான்
கூப்பிடும் சத்தம் கேட்கின்றதா இருவருக்கும்
ஆலமரமாய் வளர்ந்து நிழல் தருவீர்கள் என்றிருந்தேன்.
காலனவன் செய்த கொடுமையால் உங்களைப் பிரிந்து
ஏங்கித் தவிக்கிறேன்
பாழாய்ப் போன பிரிவு வந்து பாதி வழியில் போய் விட்டீர்களே
என்றும் எங்களுடன் இணைந்தே வாழ்ந்திருப்பீர்கள் என்று இருந்தோம்
துன்பம் எமை வாட்ட தூரதேசம் சென்றீர்களோ
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்கள்
இப்போது குடும்பமே நிர்க்கதியாய் தவியாய் தவிக்குதையா
தொலைத்துவிட்டோம் எங்கள் அருமைச் செல்வங்களை
வாழ்வின் பாதைக்கு வழிகாட்டிய தெய்வங்களே
தேடுகின்றோம் உங்களை
மீண்டும் வருவீர்கள் என்ற நம்பிக்கையில் இருக்கின்றோம்
உங்கள் உயிர்பிரிந்த வேதனைகள்
உள்ளம் குமுறுதையா யாரை நோகமுடியும்
செல்வங்களே நீங்கள் போகவில்லை
எம்மோடுதான் வாழ்கிறீர்கள்
ஒரே ஒரு நிமிடம் 'அம்மா' என்று அழைக்கத்தான் மாட்டீர்களோ
நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இன்று (31.05.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்)

தாய்.

80,கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(98940)

# விஜய் நம்பியாருக்கு உறுதி மொழி வழங்கவில்லை பாலித கோஹன்ன திட்டவட்டமாக மறுக்கிறார்

## புலிகளின் தலைவர்கள் சுடப்பட்ட விவகாரத்தில் புதிய திருப்பம்

கொழும்பு, மே 31

இறுதிக்கட்ட வன்னி யுத்தத்தின் போது சரணடைந்த விடுதலைப்புலிகளின் தலைவர்கள் போர்க் கைதிகளாக நடத்தப்படுவார்களென்றும் தான் ஒரு போதும் ஐ.நா செய லாளர் நாயகத்தின் தலைமை அதிகாரியான விஜய் நம்பியாருக்கு உறுதிமொழி எதுவும் வழங்வில்லையென ஐ.நா. விலுள்ள இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியான கலாநிதி பாலித கோஹன்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கலாநிதி கோஹன்ன ஐ.நா வைத் தளமாகக் கொண்ட இன்னர் சிற்றி பிரஸுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார். ஏற்கனவே விஜய் நம்பியார் அல் ஜஸிரா தொலைக் காட்சிக்கு வழங்கிய செவ்வியில் சரணடையும் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சாதாரண போர்க்கைதிகளாக நடத்தப்படு வார்களென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய, பாலித கோஹன்ன ஆகியோர் தனக்கு உறுதி மொழிகள் வழங்கியதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே கோஹன்னவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த விடயம் ஐ.நா. செயலாளர் பான் கீ மூனுக்கு மேலுமொரு நெருக்கடியை உருவாக்கலாமெனத் தெரிய வருகிறது.ஏற்கனவே வன்னி இறுதி யுத்தத்தின் போது கொல்லப்பட்ட அப்பாவிப் மக்களைக் காப்பதில் ஐ.நா செயலாளர் அசமந்தமாகச் செயற்பட்டதாகவும், இலங்கையில் நிகழ்ந்த போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு தாமதம் காட்டுவதாகவும் உலக அளவில் பான் கீ மூன் மீது கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டவுடன் அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. இந்நிலையில் ஐ.நா செயலாளரின் தலைமை அதிகாரியின் கூற்றுக்கு இலங்கைப் பிரதிநிதி பகிரங்கமாக மறுப்புத் தெரிவித்துள்ளமை கவனிக்கத் தக்கது. (க)

# பருத்தித்துறையிலிருந்து கொழும்பு சென்ற இ.போ.ச.பஸ் மீது மீண்டும் கல்வீச்சு

## பயணிகள் அச்சம்

வடமராட்சி, மே 3

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச. பஸ்வண்டி நேற்றுமுன்தினம் அதிகாலை மீண்டும் கல்வீச்சுக்கு இலக்கானது.

இச்சம்பவத்தில் பஸ்வண்டியின் முன் பக்க கண்ணாடி நொருங்கிய போதிலும் சாரதியும் பயணிகளும் எதுவித காயங்களுமின்றி தெய்வாதீனமாக தப்பினார்கள். இச்சம்பவம் பற்றித் தெரியவருவ தாவது -

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கி பருத்தித்துறை இ.போ.ச.டிப்போவுக்குச் சொந்தமான பஸ் வண்டி பயணிகளுடன் புறப்பட்டுச் சென்றது.

குறித்த பஸ் வண்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 12.35 மணியளவில் நொச்சியாகம பகுதியால் சென்று கொண்டிருந்தபோது அருகில் உள்ள காட்டுப் பகுதியிலிருந்து பஸ் வண்டியின் முற்பகுதியை நோக்கி கற்கள் வீசப்பட்ட தாகவும் இதனால் பஸ்வண்டியின் முன் பக்கக் கண்ணாடி நொருங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன்இச்சம்பவத்தில் சாரதிக்கோ, பயணிகளுக்கோ எதுவித பாதிப்புகளுமின்றி தெய்வாதீனமாகத் தப்பியதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்து பஸ்வண்டியின் சாரதி நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

நொச்சியாகம பகுதியில் வைத்து கடந்த மாதம் 14ஆம் திகதி கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த பருத்தித்துறை இ.போ.ச.டிப்போவுக்குச் சொந்தமான பஸ் வண்டியின் முன்பக்க கண்ணாடி இதே போன்று இனந்தெரியாதோரால் கற்களால் வீசப்பட்டு முன்பக்க் கண்ணாடி நொருக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது இரண்டாவது தடவை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை இ.போ.ச.டிப்போ முகாமையாளர் கொழும்புத் தலைமையகப் போக்குவரத்து கண்காணிப்பு பொலிஸ் பிரிவினரிடம் புகார் செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

நாட்டில் இரவு-பகல் என்றில்லாது போக்குவரத்துச் சேவைகள் சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் இடம்பெற்று வரும் இவ்வேளையில் நொச்சியாகம பகுதியில் வைத்து பருத்தித்துறை டிப்போ இ.போ.ச. பஸ் வண்டிகளை மட்டும் குறிவைத்து தாக்கப்படுவது தொடர்பாக பொலிஸாரோ இ.போ.ச. தலைமைப் பீடமோ உரிய நடவடிக்கைகளை எடுக்காததினால் சாதாரண பயணிகள் மத்தியில் பலத்த அச்சம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(எ-236)

# ஐ.நா. செயலாளர்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரர். இவர் இலங்கை பாதுகாப்பு அமைப்புடன் நெருங்கிய தொடர்புடையவராம்.

எதுவானாலும் அமைச்சர் பீரிஸ் ஐ.நா. போர் குற்றங்களை விசாரிக்க விருப்பதைத் தடுத்து விட்டார் என்று சொல்ல முடியாது.

அமெரிக்காவில் அமைச்சர் நடத்திய பேச்சுக்களில் இலங்கை இனப் பிரச்சினை தீர்வுக்கு செனேட் சபை அமைப்பு ஒரு வழியாக அமையும் என்பதை எடுத்துக் கூறியுள்ளார்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்ரனுடன் நடத்திய பேச்சுக்களின் போது போர்க்குற்றங்கள், சிறுபான்மையோர் நடத்தப்படும் முறைமை போன்றவிடயங்கள் இடம் பெற்றதாகத் தெரிகின்றது.

இலங்கையில் செனேட் சபையா னது இந்திய ராஜ்யசபாவின் மாதிரியில் அமையும்.

இவையெல்லாம் இந்தியாவை எந்த அளவு திருப்திபடுத்தும் என்பது தெரியவில்லை. இலங்கை சிறுபான்மை யோர் பிரச்சினைக்கு 13 வது திருத்தசட்டத்தையே இந்தியா தீர்வு பொதியாக வற்புறுத்திவரு கின்றது. அவர்களே இந்தத் தீர்வினை இலங்கைமீது திணித்தவர்கள். அதனால் அவர்களுக்கு இதில் ஆர்வம் கூட இருக்கலாம்.

ஜனாதிபதி ராஜபக்ஷ விரைவில் இந்தியாவுக்கு அதிகார பூர்வமாக விஜயம் செய்யவிருக்கின்றார்.

இப்பொழுது இந்தியா தொடர்பான அம்சம் வெளியுறவு அமைச்சரிடம் இருந்து பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் அம்பாந்தோட்டையிலும் துணை தூதரகம் ஒன்றையல்ல பிரதி ஸ்தானிகராலயம் ஒன்றையே இந்தியா இப்போது அமைக்கவிரும்புகிறது.

சீனத் தொடர்புகளை இந்தியா பூதாகாரமாகவே பார்க்கத் தொடங்கியுள்ளது. சீன செல்வாக்கு குறிப்பாக அம்பாந்தோட்டை பகுதியில் அதிகரிப்பதை இந்தியா ஒரு பிரச்சினையாகவே பார்க்கத் தொடங்கியுள்ளது.

இந்த விடயம் பற்றி ஜி.எல்.பீரிஸிடம் வாஷிங்டனில் கேள்வி எழுப்பப்பட்டது. இந்தியா - சீனா இரண்டு நாடுகளுடனும் இலங்கை சிறப்பான நல்லுறவைக் கொண்டிருக்கின்றது என்று அவர் பதிலளித்தார்.

ஒரு பிரச்சினை இருக்கவே செய்கின்றது என்பதை இலங்கை அறியும்.

புதுடில்லியில் இயற்கையாகவே இப்பொழுது தோன்றி யுள்ள 45 பாகை வெப்பத்தை ராஜபக்ஷ நிர்வாகம் இப் பொழுது உணர ஆரம்பித்துள்ளது.

இந்தியாவுடனான வியாபாரம் ஒப்பந்தத்துடன் தொடர்புடைய இலங்கை வர்த்தகர்களை கடந்த வாரம் அழைத்து ஆலோசனை நடத்தினர் ஜனாதிபதி ராஜபக்ஷ. பூமியில் எதற்காகவும் தாய் நாட்டை அடகு வைத்து விடமாட்டேன் என்று அப்போது அவர் உறுதியளித்தார்.

150 டொலர் பெறுமதியான ஐரோப்பிய யூனியனுக்கான உடுபுடைவைகள் ஏற்றுமதி தொடர்பாகவும் இவ்வாறுதான் அவருடைய அரசு பெருமையாக பிரகடனங்களை செய்திருந்தது. ஆனால் அந்த வர்த்தக சலுகைகளைப் திரும்பப் பெறுவதற்கான மார்க்கங்களை இப்போது தேடிக்கொண்டிருக்கிறது.

பொருளாதார ரீதியில் இந்தியா பெருமளவில் உதவிகளை வழங்கி வருகின்றது. வடக்கை வளர்த்தெடுப்பதில் அதிக அக்கறைக் காட்டப்படுகின்றது. அதேவேளை சீனாவுடனான இலங்கையின் நெருங்கிய தொடர்புகள் இந்தியாவுக்கு கவலை கொடுப்பனவாகும். எனவே இந்தியாவுக்கு இன்னும் பத்து நாள்களில் தமது ராஜாங்க பயணத்தை மேற்கொள்விருக்கும் ராஜபக்ஷவுக்கு நிறையவே தலையிடிகள் இருக்கும் என்று சொல்லலாம். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி பெறுவதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர் யுவதிகள் நேற்று களுத்துறை பயிற்சிப் பாடசாலைக்குச் செல்வதற்காக யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் குழுமியிருப்பதை முதலிரு படங்களிலும்
வடபகுதிக்கான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி அமரக்கோன் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் பயணத்துக்குத் தயாராகவுள்ள பஸ் வண்டிகளில் பொலிஸ் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஏறிக்கொள்வதை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்:லக்ஸ்ன், நேசன்)*

# சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் வகையில் சிறந்த பொலிஸாராக யாழ். இளைஞர்கள் உருவாக வேண்டும்

## - வடபிராந்திய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் -

நல்லூர், மே 31

சிறந்த பயிற்சிகளைப் பெற்று திறமையான பொலிஸ் உத்தியோகத்தர்களாக சேவையாற்றி சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதோடு, உங்களுக்கும் பொலிஸ் துறைக்கும் பெருமை சேருங்கள் என யாழ். மாவட்டத்திலிருந்து பொலிஸ் சேவையில் இணையவுள்ள இளைஞர் கள், யுவதிகள் மத்தியில் உரையாற்றிய வடபிராந்திய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி அமரக்கோன் தெரிவித்தார்.

பொலிஸ் சேவையில் இணைந்து கொள்வதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளை களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லும் நிகழ்வு நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் கூறியவை வருமாறு:

யுத்தத்தின் பின் வடமாகாணத்திலிருந்து இப்போதுதான் ஆண்களும், பெண்களும் பொலிஸ் சேவையில் இணையவுள்ளனர். கடந்த காலங்களில் வடமாகாணத்தைச் சேர்ந்த பலர் பொலிஸ் திணைக்களத்தில் உயர் பதவிகளைத் திறமையுடன் வகித்துள்ளனர். நீங்களும் சிறப்பாகச் செயற்பட்டு உயர் நிலையை எய்த வேண்டும் என வாழ்த்துகிறேன் - என்று கூறினார்.

### தெரிவான 252 பேர் களுத்துறைக்கு பயிற்சிக்கு

பொலிஸ் பயிற்சிக்கெனத் தெரிவு செய்யப்பட்ட 237 ஆண்களும் 15 பெண்களும் 11 பஸ் வண்டிகளில் களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்கு தமது பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுடன் அழைத்துச் செல்லப்பட்டனர். (எ-க-111)

# உணவில்லாத பொருள்கள் வழங்கல்

நவாலி,மே 31

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உணவில்லாத பொருள்களைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் மீளக் குடியமர்த்தப்பட்டவர்களுக்கும் நாளை மறுதினம் புதன்கிழமை கட்டுடை கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்துப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் இதற்குரிய அவணங்களுடன் காலை 9 மணிக்கு தவறாது சமூகந்தருமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(201-100)

# 'நெல்சிப்' திட்டத்தினூடான அபிவிருத்திக்கு பிரதேச மக்களின் முழு ஒத்துழைப்பு அவசியம்

## வலி.மேற்கு பிரதேச சபைச் செயலர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மே 31

வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபைக்குட்பட்ட நெல்சிப் கொத்தணி மட்ட அபிவிருத்திக் கூட்டங்கள் பிரதேச மட்டத்தில் இடம்பெறவுள்ளன.

துரித நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெறவுள்ள மேற்படி கொத்தணிக் கூட்டங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவர்கள் உரிய திகதிகளில் முழுமையாக ஒருங்கிணைந்து பிரதேச அபிவிருத்திக்குப் பங்களிக்க வேண்டும்.

வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திகாமணி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - கொத்தணி ரீதியாக நடைபெறும் கூட்டங்களுக்கு மதத்தலைவர்கள், கிராம மட்ட நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், பொது மக்கள் என்போர் கலந்துகொண்டு அபிவிருத்திகளை முன்னெடுக்கலாம். இத்தகைய கொத்தணிக் கூட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட திகதிகள் வருமாறு-

அராலி கொத்தணிக்கான கூட்டம் ஜூன் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை
சுழிபுரம் கொத்தணி 1 இற்கான கூட்டம் ஜூன் 2 ஆம் திகதி புதன்கிழமை
சுழிபுரம் கொத்தணி 2 இற்கான கூட்டம் ஜூன் 3 ஆம் திகதி வியாழக்கிழமை
வட்டுக்கோட்டை கொத்தணிக்கான கூட்டம் ஜூன்6ஆம்திகதி வெள்ளிக்கிழமை
சங்கானை கொத்தணிக்கான கூட்டம் ஜூன் 5 ஆம் திகதி சனிக்கிழமை

வலி.மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் அலுவலர்களும் - வலி.மேற்கு பிரதேச சபை திட்டமிடல் அலுவலர்களும் மேற்படி கொத்தணி அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்துச் செல்வர்.

எனவே குறித்த திகதிகளில் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும் நெல்சிப் திட்டக் கூட்டங்களுக்கு மக்களும் தமது அனைத்து பங்களிப்பினை முழுமையாக வழங்கவேண்டும்.

200 மில்லியன் ரூபா திட்டத்தினை முழுமையாக உள்வாங்கி அபிவிருத்தி செய்ய அனைத்துப் பிரதேச மட்ட மக்களினதும் ஒத்துழைப்பினை வேண்டி நிற்கின்றோம் - என்றார்.

பிரதேச மட்ட திட்ட வசதியளிப்பவராக உதவித்ள திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமார் இதற்கான நடவடிக்கையினை முழுமையாக மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-302)

# கோட்டையைப் பார்வையிடுவதில் தென்பகுதிப் பயணிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், மே 31

தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யாழ். கோட்டையைப் பார்வையிட்டுச் செல்வதில் ஆர்வம் காட்டி வருவதாகக் கூறப்படுகின்றது. கடந்த இரு நாள்களுக்கு மட்டும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இந்த கோட்டையைச் சுற்றிப் பார்வையிட்டனர். இதனால் கோட்டைப் பகுதி எங்கும் சனக் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.

யாழ். குடாநாட்டின் புராதனச் சின்னங்களில் ஒன்றாக விளங்கும் இந்தக் கோட்டையைப் பார்வையிட்டுச் செல்லும் இந்த மக்கள், கோட்டையினுள் அமர்ந்திருந்து தாளம் போட்டு பாட்டிசைப்பதிலும், கோட்டைச் சுவர்களில் தமது பெயர்களைப் பொறிப்பதிலும் ஈடுபடுவதாகவும் கூறப்படுகின்றது. (எ-224)

# போக்குவரத்து விதிகள் மீறப்படுவதால் வாகன விபத்துக்கள் திடீரென அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 31

யாழ். குடாநாட்டில் விபத்துச் சம்பவங்கள் ஏற்படுவது திடீரென அதிகரித்துள்ளது.

ஏ9 பிரதான வீதி மற்றும் பருத்தித்துறை வீதி, கே.கே.எஸ். வீதி, பலாலி வீதி, மானிப்பாய்- ஸ்ரான்லி வீதி போன்ற மக்கள் அதிகம் பயன்படுத்துகின்ற வீதிகளிலேயே இவ்வாறு வாகன விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனக் கூறப்படுகின்றது.

வாகனங்களைக் கட்டுப்பாடின்றி வேகமாகச் செலுத்திச் செல்வதும் மற்றும் பிரதான சந்திகளைக் கடக்கும் போது போக்குவரத்து விதிகளை அலட்சியம் செய்வதுமே வாகன விபத்துக்கள் திடீரெனப் பெருகியுள்ளமைக்கு முக்கிய காரணம் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தற்போது குடாநாட்டில் வாகனங்களின் போக்குவரத்தும் மக்களின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்படுவதால் வாகனங்களைச் செலுத்துவோர் உரிய விதிமுறைகளைக் கடைப்பிடித்து வேகத்தைக் கட்டுப்படுத்திச் செல்வதன் மூலம் விபத்துக்களைக் குறைக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-224)

# சிவபூமியில் இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,மே 31

அண்ணாமலை பல்கலைக்கழகப் பட்டதாரி செல்வி அபர்ணா குகதாசனின் இன்னிசைக் கச்சேரி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்ல கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சகல இசை ஆர்வலர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)

# வீட்டில் தனித்திருந்த பெண்மணியை பட்டப்பகலில் கொலை செய்து நூறு பவுண் நகைகள் கொள்ளை

## - கரவெட்டியில் பயங்கரம்-

வடமராட்சி, மே 31

கரவெட்டி கிழக்கு, தல்லையப்புலம் பகுதியில் தனிமையாக வசித்து வந்த பெண் ஒருவரை இனந்தெரியாதோர் கழுத்து நெரித்து கொலை செய்துவிட்டு அவரது வீட்டிலிருந்து நூறு பவுணுக்கும் அதிகமான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல்11.30 மணியளவில் பட்டப்பகல் வேளையில் நடைபெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ஜெயபாலா விஜயலட்சுமி (54 வயது) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டதுடன் அவரது வீட்டில் இருந்த நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவா சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் பிரேத பிரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-236)




# புற்றுநோயாளர்களுக்கு சத்துணவு வழங்கல்

யாழ்ப்பாணம்,மே 31

மானிப்பாய் வட்ட வலய லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும், யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளருமான அமரர் வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தினத்தின் இரண்டாவது சிரார்த்த தினத்தை ஒட்டி புற்றுநோயாளர்களுக்கு அண்மையில் சத்துணவு வழங்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி எஸ்.சிறிபவானந்தன் தலைமையில் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் 60 புற்றுநோயாளர்களுக்குச் சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் என்.ஜெயக்குமார், யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர்களான செ.பிரசாத், எஸ்.மோகனதாஸ் ஆகியோர் உட்பட லயன்ஸ் கழக அங்கத்தவர்கள் பலரும் கலந்துகொண்டனர். (எ-236)

# கிளிநொச்சியில் கனமழையை அடுத்து விவசாய நடவடிக்கைகள் தீவிரம்

யாழ்ப்பாணம், மே 31

அண்மையில் பெய்த கனமழையை அடுத்து கிளிநொச்சிப் பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சியில்மிதிவெடிமற்றும்கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதிகளில் அனுமதிக்கப்பட்ட தோட்ட நிலங்களை விவசாயிகள் உழுது, சீர்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.இப்பகுதிகளில் மரக்கறி மற்றும் உப உணவுப் பயிர்களையும் பயிரிடுவதில் விவசாயிகள் அதிக அக்கறைகாட்டி வருகின்றனர்.

பயறு, கௌபி,உழுந்து மற்றும் மரக்கறிச் செய்கை போன்றவற்றில் பயிரிடுவதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமுறை கண்ட கட்டடக் கலைஞன் சந்திரன்



புதுமுறை காணுதல் பொருளாதார வளர்ச்சியின் தேவைப்பாடாகப் பொருளியலாளர்களால் கூறப்படுகின்றது.

எம்மவர்களும் எமது வாழ்க்கை முறையில் உபயோகிக்கப்படும் உபகரணங் கள் தொடர்பாக புதுமுறை காணுதல் அவ்வவ் போது நிகழ்த்துகின்றனர். அத்தகைய புதுமுறை காணுதலை ஒன்றை நிகழ்த்திய தென்மராட் சியின் மட்டுவில் கிராமத்தை வசிப்பிடமாகக் கொண்ட சங்கரன் சந்தி ரன் என்பவரை உதயன் வாசகர்களுக்குப் பெருமையுடன் அறிமுகம் செய்கின்றோம்.

சமையல் செய்வதற்கு விறகு அடுப்பை உபயோகிப்பது எமது பாரம்பரியமாக இன்று வரையும் எம்மிடையே தொடர்கிறது.

யாழ்ப்பாணத்தின் மீது இறுக்கமான பொருளாதாரத் தடை நிலவிய 1992 ஆம் ஆண்டளவில் சிக்கன அடுப்பு ஒன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டது ஞாபகத்தில் இருக்கும். சிமெந்துக் கலவையால் கட்டிய அடுப்புக்கள் வெடிப்பதும் இடிவதும், மண்ணால் கட்டிய அடுப்புக்களை



மெழுழுகுவதும் போன்ற கஷ்டங்கள் இருக்கின்றன. அதற்குத் தீர்வாகவே திரு.ச. சந்திரன் உருவாக்கிய அடுப்பு உள்ளது.

இவர் கட்டடம் கட்டும் தொழிலுடன் மட்டுமல்லாது கிராமிய சிந்து நடைக் கூத்தில் பெயர்பெற்ற பாடகராகவும், சிறுகைத்தொழில் விற்பன்னராகவும், விவசாயியாகவும் பன்முக ஆளுமை மிக்கவர். அவரும் அவரது குடும்பத்தினரும் எம்மை மிகவும் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தனர்.

தாங்கள் வடிவமைத்து உருவாக்கிய அடுப்பு மெல்லமெல்ல பிரபலமாகி வருவதை அறிந்தோம். அதைப் பற்றிய விவரங்களைக் கூறுமாறு கேட்டபோது "எமது சமையல் பாரம்பரியத்தில் இன்னமும் விறகு அடுப்பு பெரும் பங்கை வகித்து வருகிறது. குடும்பப் பெண்கள் அடுப்பை பராமரிக்கப் பலவித கஷ்டங்களைப் படுவதைக் கண்டுள்ளேன்.

கடந்த 2000ஆம் ஆண்டு மே மாதம் தென்மராட்சியில் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தால் நாம் இடம்பெயர்ந்து வடமராட்சியின் பொலிகண்டி கிராமத்தில் இருந்தோம். அப்போதே தற்செயலாக இவ் அடுப்பின் வடிவமைப்பை உருவாக்கும் எண்ணம் மனதில் தோன்றியது.

இப்படத்தில் காணப்படும் செங்கற்களைக் கொண்டு வடமராட்சியில் பெருமளவானோர் வீடு கட்டுவது வழக்கம்.

எமது அயல் வீட்டுக்காரர் இச் செங்கற்களை மணல் மீது அடுக்கி சமையலில் ஈடுபட்டதனைக் கண்டேன்.

அச் செங்கற்களின் நெருப்பு வெக்கையில் வெடிக்காத, உடையாத தன்மையைக் கண்டதும் என்னுள் புதுமுறை காணும் சிந்தனை தோன்றியது.

ஏழு செங்கற்களை எடுத்து அவற்றை அடுப்பாக வடிவமைத்து இரண்டு பாத்திரங்கள் வைத்து சமைக்கும் அடுப்பு ஒன்றை உருவாக்கிப் பார்த்தேன்.

இப்பரீட்சார்த்த முயற்சியை எனது வீட்டில்தான் மேற்கொண்டேன். நெருப்பில் வெடிக்காதவாறு சிமெந்து கலவையை வன்னி ஆற்றுமண் கலந்து நுட்பமாக அடுப்பை உருவாக்கினேன்.

எனது மனைவி இவ் அடுப்பில் சமையலில் ஈடுபட்டதனையும், அது வெடிக்காமல் இருப்பதனையும் நல்ல காற்றோட்டம் காரணமாக விறகுகள் நன்றாக எரிவதனையும் அயலவர்களும், உறவினர்களும் கண்டனர்.

அடுப்பின் பின்புறமும், முன்புறமும் அழகுக்காக மாபிள் பதித்ததும் இவ் அடுப்பின் மீதான கவர்ச்சியைக் கூட்டியது".

அடுப்புச் செங்கற்களின் வெம்மை தணிந்த பின்பு அவற்றைக் கழுவி சமையல் செய்ய முடிவதும், குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் இலகுவாகக் கழுவி சமையல் செய்ய முடிவதும் இல்லத்தரசிகளால் பெரிதும் விரும்பப்பட்டது.

குறிப்பாக கணவன், மனைவி இருவருமே அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பங்கள் பல இவ் அடுப்பை விரும்பிக் கட்டி வருகின்றனர்.

இந்த வகையான செங்கற்கள் எவ்வாறு தங்களுக்குக் கிடைக்கின்றன எனக் கேட்டோம். படத்தில் காணப்படும் இச் செங்கற்கள் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும்.

இவை வடமராட்சிப் பிரதேசத்தின் மண் அமைப்பிற்கு வீடு கட்டுவதற்கு பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. எனது வீட்டு அடுப்பைப் பார்த்த பலரும் அதைப்போல கட்ட ஆசைப்பட வடமராட்சியிலிருந்து 500 செங்கற்களைக் கொண்டு வந்தேன். அவற்றைக் கொண்டு சுமார் 60 வீடுகளில் அடுப்புக் கட்டிக் கொடுத்தேன்.

2 கண் அடுப்பாயின் 7 செங்கற்களும், 3 கண் அடுப்பாயின் 10 செங்கற்களும் தேவை. அவரவர் நம்பிக்கைக்கேற்ப கட்டிக் கொள்கின்றனர்.

காஸ் சிலிண்டரின் தாராள வருகையும், காஸ் அடுப்புப் பாவனையும் பெருகி வரும் இந்நாளில் தங்களின் எண்ணத்தில் உருவான அடுப்பின் பாவனை நிலைத்து நிற்குமா எனக் கேட்டோம்.



தாங்கள் கூறுவதில் ஓரளவு உண்மை இருக்கிறது. காஸ் சிலிண்டரின் செலவுடன் ஒப்பிடும்போது விறகு மலிவாக யாழ்ப்பாணத்தில் கிடைக்கின்றது.

யாழ்ப்பாண மக்கள் பழைமையை இலகுவில் கைவிட மாட்டார்கள். அதற்கு நல்ல உதாரணம் அரசாங்கம் மின்சக்தி நெருக்கடிக்குத் தீர்வாக 1996 ஆம் ஆண்டு இறுதியில் கடிகாரத்தின் நேரத்தை 1 மணித்தியாலத்தால் கூட்டியது. பின் அரை மணித்தியாலத்தால் குறைத்தது. இறுதியாக 2006 ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டுடன் நேரத்தை முன்னைய நிலைக்கே கொண்டு வந்தது. இவ் இடைப்பட்ட காலத்தில் எமது மக்களில் மிகப் பெரும்பாலானோர் பழைய நேரம் எனக் கூறி முன்னைய நேரத்தையே கடைப்பிடித்ததை அறிவீர்கள். அதுபோல விறகு அடுப்பின் பாவனையை மிகப் பெருமளவில் கைவிடும் காலம் மிகத் தொலை தூரத்தில் தான் இருக்கிறது.

விறகு அடுப்பில் மண் சட்டியில் சமைக்கும் உணவின் சுவையும் ஆரோக்கியமும், காஸ் அடுப்பில் அலுமினியப் பாத்திரங்களில் சமைக்கும்போது வராது என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தவர்கள் எம் மக்கள்.

கணவனும் மனைவியும் உத்தியோகம் பார்ப்பவர்கள், நகர வாசிகள் தான் பெருமளவில் காஸ் அடுப்பிற்கு மாறி விட்டார்கள். பெரும் நிலப்பரப்பைக் கொண்ட தென்மராட்சியில் விறகு மிக மலிவான விலையில் கிடைக்கிறது. இங்கு விறகு அடுப்பின்பாவனை மிக மிக நீண்ட காலத்திற்கு இருக்கும்.

இவ் அடுப்பை வடிவமைக்கும் செங்கற்களை எவ்விதம் பெற்றுக் கொள்கிறீர்கள், இப்போது இக் கற்கள் இங்கு கடைகளில் கிடைப்பதில்லை. பழைய கற்கள் எங்காவது இருக்கும். அவற்றைத் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும். கிடைப்பது மிக அரிது. கைதடியிலுள்ள ஓர் அன்பர் அண்மையில் 200 கற்களை தேடிப் பெற்றுக் கொடுத்து உதவினார். யாழ். நகரப் பிரதேசத்திலும் ஒரு வீட்டில் இவ் அடுப்பைக் கட்டியுள்ளேன்.

இன்னமும் பலர் கட்ட ஆவலாயுள்ளனர். ஆனால் செங்கற்கள் கிடைப்பதில் உள்ள கடினநிலை காரணமாக கட்ட முடியாதுள்ளது. ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை மீளவும் இயங்க ஆரம்பித்து விட்டது. அங்கு இவை மீண்டும் உற்பத்தி செய்ய ஆரம்பித்தால் நல்லது.

நீர்கொழும்பில் தங்கொட்டுவ எனுமிடத்தில் இவ் வடிவமைப்பிலுள்ள கற்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்குள்ள கட்டடப் பொருள் வணிகர்கள் அவற்றைத் தருவித்தால் நல்லது. இக்கற்களைக் கொண்டு முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, வடமராட்சி பிரதேசங்களில் வீடு கட்டுவதனைக் கண்டுள்ளேன். இவ்வாறுகட்டப்படும் வீடுகள் வெப்ப காலத்தில் உள்ளே வசிப்போருக்கு குளிர்ச்சித் தன்மையைக் கொடுக் கின்றன. வெப்பம் வரவர மிகக் கடுமையாக அதிகரித்துச் செல்வதால் இச்செங்கற்களைக் கொண்டு சுவர் அமைத்து சிமெந்தினால் பூசி வீடு கட்டுவது நல்லதென்பது என் கருத்து.

பன்முக ஆளுமையும், புதுமுறை காணும் ஆற்றலும் உள்ள தங்களை நேர் கண்டதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். நன்றி எனக் கூறி விடைபெறுகின்றேன். ★

- மருதன் -

# சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று

# யாழ்.மாவட்டக் கல்வித் துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## லிசிலேவிதா சேவியர்
## திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை

எனது பெயர் செல்வி லிசிலேவிதா. சேவியர். நான் பாலர் பாடசாலை தொடக்கம் இன்று வரை யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்திலேயே கல்விகற்று வருகிறேன். எனது ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் 7ஏபிஎஸ் பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டேன். எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காவிட்டாலும் இப் பெறுபேறு கிடைத்ததையிட்டு நானும் என்னைச் சார்ந்தவர்களும் மகிழ்ச்சியடைகின்றோம். நான் இரவில் அதிக நேரம் படிப்பேன். படிக்கும்போது எழுதிப் பார்த்துப் படிப்பேன். பரீட்சை எழுதும்போது முதல் நாள் சற்று பதற்றமாக இருந்தாலும் பின் எல்லாப் பரீட்சைகளையும் திருப்தியாக எழுதினேன். இப்பெறுபேறு கிடைத்ததற்கு எனக்கு உதவிய எனது பெற்றோர், பாடசாலை அதிபர், பாடசாலை ஆசிரியர்கள், உறவினர், ஏனைய ஆசிரியர் மற்றும் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். இவை தவிர எனது கற்றல் நடவடிக்கைகளுக்கு யாழ். பொதுசன நூலகமும் பேருதவியாக அமைந்தது.

நான் உயர்தரத்திற்கு விஞ்ஞானத்துறையைத் தெரிவு செய்துள்ளேன். எதிர்காலத்தில் எனது பெற்றோருக்கும் மக்களுக்கும் உதவக்கூடிய பணி புரிவதே என் விருப்பமாகும். இவை எல்லாவற்றையும் எனக்கு வழங்கும் என் இறைவனுக்கு என் மனம் நிறைந்த நன்றி கூறுகின்றேன்.



## சு.கௌசிகன்
## ஹாட்லிக் கல்லூரி

நான் சுப்பிரமணியம் கௌசிகன், ஹாட்லிக் கல்லூரியிலே கல்வி பயின்று வருகின்றேன். எனது ஜீ.சி.ஈ சாதாரணப் பரீட்சைப் பெறுபேறு 7ஏ2பி ஆகும். இப்பெறுபேறு எனக்கு திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது. இதற்காக நான் பலருக்கு நன்றி கூறுவதற்கு கடமைப் பட்டுள்ளேன். அந்த வகையில் எனது பாடசாலையினதும், தனியார் கல்வி நிலையத்தினதும் பங்களிப்புக்கள் மிக முக்கியமானவை ஆகும். மாணவர்களின் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயற்படும் கல்[illegible] எமக்கு ஒரு தந்தை போலவும் நண்பர் போலவும் எம்மை வழிப்படுத்திய வகுப்பாசிரியர் அவர்களுக்கும் கல்வி கற்பித்த ஆசிரியர்களிற்கும் தனியார் கல்வி நிலைய நிர்வாகி அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி யடைகிறேன். இவர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையும் சரியான வழிகாட்டலுமே எனது பெறுபேறிற்கு காரணமாகும். அத்துடன் என்னை ஊக்கப்படுத்திய பெற்றோரிற்கும், உறவினருக்கும், நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் நான் பரீட்சைக்காக சக நண்பர்களுடன் இணைந்து கடந்தகால வினாப்பத்திரங்களையும், மாதிரி வினாப்பத்திரங்களையும், பத்திரிகை வினாப்பத்திரங்களையும் பெற்றுசெய்து பார்த்து தெளிவு பெற்றேன். மீண்டும் அனைவரிற்கும் நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் க.பொ.த உயர்தரப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றைப் பெற முயற்சிப்பேன் என்று கூறி விடைபெறுகிறேன்.



## சபாரத்தினம் பரதன்
## ஹாட்லிக் கல்லூரி

நான் ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றி 5ஏ2பி2சி இப்பெறுபேற்றைப் பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. நான் முற்றாக விளையாட்டைத் துறந்து பரீட்சைக்கு தயாராகவில்லை. இறுதி நேரங்களில் படிப்பில் முழுமையாக ஈடுபட்டேன். பரீட்சை எழுதியபின் இன்னும் கொஞ்சம் அதிகம் படித்திருக்கலாமோ என்று தோன்றியது. ஆனால் பரீட்சை முடிவு திருப்தி அளிக்கிறது. எனது இப்பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வதற்கு கல்லூரிச் சமூகம் பெரிதும் பங்களிப்பு செய்தது. ஆசிரியர்கள் தம்மால் இயன்றளவு உதவியை வழங்கினார்கள். விடுமுறைகாலங்களிலும் வகுப்பெடுத்து மாணவர்களுக்காக தம் விடுமுறையைத் தியாகம் செய்தனர். நான் NEI தனியார் கல்வி நிறுவனத்தில் 2009 ஆம் ஆண்டு கல்வி கற்றேன். கற்ற ஒரு வருடத்தில் நான் என்னில் மாற்றத்தை உணர்ந்தேன். இறுக்கமான சட்டதிட்டங்கள் கல்வி பற்றியே சிந்திக்க வைத்தது. வெற்றிப்படிதுக்கத்தை தூர விலக்கியது. நிர்வாகியின் ஆழ்ந்த ஆலோசனைகள் படிக்கத் தூண்டியது. எனக்கு இப்பெறுபேற்றை பெற உதவிய கடவுளுக்கும், என் குடும்ப அங்கத்தவர்களுக்கும் கல்லூரி சமூகத்திற்கும் NEI கல்வி நிறுவனத்திற்கும் மரியதாஸ் ஆசிரியருக்கும் நண்பர்களுக்கும் நன்றி கூற விரும்புகின்றேன்.

நேர்காணல்: எஸ்.மூர்த்தி, சுகந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிழக்கில் ஆசிரியர் இடமாற்றம்

## கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் தகவல்

அம்பாறை, மே 31

''கிழக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு பல புதிய திட்டங்கள் அமுலுக்கு வரவுள்ளன. அவற்றிலொன்று ஆசிரியர் இடமாற்றம். வலயத்துக்குள்ளான ஆசிரியர் இடமாற்றம் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும்.''

- இவ்வாறு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.நிஸாம் தெரிவித்தார்.

சாய்ந்தமருது அல்ஹிலால் மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் கூறியவை வருமாறு:-

வலயத்துக்குள்ளான ஆசிரியர் இடமாற்றங்களுக்கென சில நியதிகள் உள்ளன. அவற்றுக்கிணங்க அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் இவ்விடமாற்றங்களை செய்ய வேண்டும்.

வருடாந்த இடமாற்றங்களும் இதே போல் பல நியதிகளுக்கமைவாக இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படவேண்டும். வலயத்துக்குள்ளான ஆசிரியர் இடமாற்றத்தின் போது சில நடைமுறைகள் கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

பாடரீதியாக மேலதிகமாகவுள்ள ஒரு பாடசாலையின் ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படுவார்.

ஒரே பாடசாலையில் 8 வருடங்களுக்குக் கூடுதலான சேவையைச் செய்தவர் முன்னுரிமை அடிப்படையில் இடமாற்றப்படுவார்.

இதேவேளை, 8 வருடத்துக்கும் மேற்படாமல் சேவைக் காலத்தைக் கொண்டிருந்து மேலதிகமாக ஆசிரியர் காணப்பட்டால் இறுதியாக அங்கு வந்த ஆசிரியர் இடமாற்றப்படுவார்.

53 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றத்தின்போது தவிர்க்கப்படுவர். தேவையேற்பட்டால் அவர்களது சம்மதத்துடன் கோட்டத்துக்கு அண்மையிலுள்ள பாடசாலைக்கு இடமாற்றப்படுவர்.

குறிப்பாக இந்த இடமாற்றம் எதிர்வரும் 31.12.2010 இற்குள் அமுலாகும். வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்குள் உட்படாதவர்கள் மாத்திரமே வலயத்துக்குள்ளான் ஆசிரியர் இடமாற்றத்திட்டத்திற்கு உட்படுவர்.

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அவர்களது காலத்தை கருத்திற் கொண்டு பிற்திகதியிடப்பட்டு இடமாற்றம் வழங்கப்படும் - இவ்வாறு கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

(ளி)

# தோப்பூர் உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்குக

## பிரதேச மக்கள் வேண்டுகோள்

திருகோணமலை, மே 31

தோப்பூர் உப பிரதேச செயலக எல்லையை நிர்ணயம் செய்து முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தி அதற்கான வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிடுமாறு தோப்பூர் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றார்கள்.

தோப்பூர் உப பிரதேச செயலகமாகப் பல வருட காலமாக இயங்கி வருகின்றது. இதற்கான எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படவும் இல்லை. அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவும் இல்லை.

இந்த தோப்பூர் உப பிரதேச செயலகமானது பொது நூலக கட்டடத்தின் ஒரு குறித்த அறையில் இயங்கி வருவதுடன் ஒரு சிற்றூழியர் உட்பட இரண்டு, மூன்று அலுவலர்களே இவ் உப பிரதேச செயலகத்தில் இணைக்கப்பட்டுப் பணியாற்றுகின்றனர்.

பிரதேச செயலகத்தினால் பொதுமக்களுக்கு ஆற்றவேண்டிய பல பணிகள் இருந்த போதிலும் இப்பிரதேச செயலகத்தில் சில குறிப்பிட்ட விடயங்களை மாத்திரம் நிறைவேற்ற முடிவதாகப் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

தோப்பூர் பிரதேச செயலகம் அமைப்பதற்கு உரிய பல நடவடிக்கைகள் பல வருடகாலமாக மேற்கொள்ளப்பட்டாலும் அவை அனைத்தும் வீணாகியுள்ளன.

தோப்பூர் பகுதியில் உள்ள அரச காணி ஒன்றில் ஒரு அமைச்சரினால் தோப்பூர் பிரதேச செயலகக் கட்டடத்திற்கான நினைவுக்கல் நடப்பட்டுள்ளது.

ஆனால், இவ்விடத்தில் நினைவுக்கல் நடப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளன. கட்டடம் நிர்மாணிக்கப்படவில்லை. குறித்த அமைச்சரின் இந்த வேடிக்கை நாடகம் குறித்து பொதுமக்கள் ஆத்திரமும் கவலையும் அடைந்துள்ளனர்.

தோப்பூர் பிரதேச மக்கள் இங்குள்ள 13இற்கும் அதிகமான கிராமசேவையாளர் பிரிவுகளை ஒன்றிணைத்து சுமார் 17 ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் பயனடையக் கூடியவாறு இந்தத் தோப்பூர் பிரதேச செயலகத்தைக் கோரி வருகின்றனர்.

அரசு புதிதாகக் கிராமசேவையாளர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவுகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வரும் இவ்வேளையில் திருகோணமலை மாவட்டத்தில் தோப்பூர் பிரதேச செயலகத்தையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென இங்குள்ள பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

(ளி)

# பிரதேசத்தின் அரசியல், நிர்வாகத்தை தீர்மானிக்கும் சக்தி வர்த்தகர்களே!

## அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் தெரிவிப்பு

அம்பாறை, மே 31

''பிரதேச அரசியல் மற்றும் நிர்வாகத்தை தீர்மானிக்கும் சக்தியாக வர்த்தகர்கள் உள்ளனர்'' - இவ்வாறு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.எம். நஸீர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை வர்த்தகர் சங்கக் காரியாலயம், பிரதான வீதி தபால் கந்தோரடியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதில் விசேட அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதேச செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ஏ.பி. நூறுல் ஹக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியவை வருமாறு:-

இலங்கையிலும், முழு உலகத்திலும் முஸ்லிம்கள் வரலாறு படைத்து வருவதற்கு காரணம் வர்த்தகம்தான். வர்த்தகத்தின் மூலம்தான் மக்கள் அபிவிருத்தியடைந்துள்ளனர். வர்த்தகர்கள், வியாபாரம், அரசியல் மற்றும் குடும்ப ரீதியாகவும் ஒற்றுமையுடன் வாழவேண்டும்.

அத்தோடு, வர்த்தகர்கள் பிரதேசத்தின், கிராமத்தின் அபிவிருத்தியில் பங்களிப்பு - ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும். - என்று தெரிவித்தார் பிரதேச செயலாளர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர்களான எம்.எஸ். உதுமாலெப்பை டாக்டர் துரைப்பா நவரட்ணராஜா, அட்டாளைச்சேனை மக்கள் வங்கி முகாமையாளர் எம்.சி. கிபாஸ்தீன், இலங்கை வங்கி முகாமையாளர் ஏ.சி.கிபாஸ்தீன் உட்பட இன்னும் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

(ளி)

# உத்தியோகத்தர் அலுவலகத்தை மூடுவதற்கான முடிவு இடைநிறுத்தம்

மட்டக்களப்பு, மே 31

மட்டக்களப்பில் இயங்கிவரும் தபால் திணைக்கள கிழக்கு மாகாண நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகத்தை மூடுவதற்கான முடிவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என அஞ்சல் தொலைத் தொடர்புகள் சேவையாளர் சங்க மட்டக்களப்பு கிளைச் செயலாளர் எஸ். ரதீஸ்வரன் தெரிவித்தார்.

மேற்படி அலுவலகம் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் மூடப்பட்டு, அதன் பணிகளை பெரும்பாக தபால் அத்தியட்சகர் அலுவலகங்களுக்குப் பரவலாக்க முடிவு எடுக்கப்பட்டது.

இது குறித்து கிடைத்த முறைப்பாட்டை அடுத்து மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தபால் தொலைத் தொடர்பு அமைச்சருடனும், அஞ்சல்மா அதிபருடனும் தொடர்பு கொண்டு இதற்கு ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

அத்தோடு, அஞ்சல், தொலைத் தொடர்புகள் உத்தியோகஸ்தர் தாய்ச் சங்கச் செயலாளர் கே.எஸ்.வீரசேகரவும், அஞ்சல் மா அதிபருடன் தொடர்பு கொண்டு மட்டக்களப்பு அலுவலகத்தை மூடாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தார்.

மேற்படி நடவடிக்கைகளை அடுத்தே இவ்வலுவலகத்தைக் மூடும் முடிவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ளி)




# கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 18 பாடசாலைகள் புனரமைப்பு

திருகோணமலை, மே 31

கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த 18பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் என்பவற்றின் நிதியுதவியுடன் இப்பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கடந்தகால யுத்தச் சூழ்நிலைகளினால் சேதமடைந்த 18பாடசாலைகள் முழுமையாகப் புனரமைக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 13 பாடசாலைகளும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள 5 பாடசாலைகளும் இத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த திகிலிவெட்டை, வடமுனை, முறுத்தானை, வாகனேரி, படுவான்கரை போன்ற பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன.

இப்பாடசாலைகளைப் புனரமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதற்காக கல்வியமைச்சு மற்றும் கிழக்கு மாகாணசபைக் கல்வியமைச்சு என்பன அனுமதிகள் வழங்கியுள்ளன.

புனரமைக்கப்படவுள்ள இப்பாடசாலைகளை ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய அதிகாரிகள் சென்று பார்வையிட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ளி)

# கிழக்கு மாகாணத்தில் முன்பள்ளிப் பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை

அம்பாறை, மே 31

''கிழக்கு மாகாணத்தில் செயற்படும் சகல முன்பள்ளிப் பாடசாலைகளில் நிலவும் நீண்ட காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அதற்காக முகாமைத்துவ குழுவொன்றை நியமிப்பதற்கும் கிழக்கு மாகாண சபை அனுமதி அளித்துள்ளது''

- இவ்வாறு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்பாசனம், வீடமைப்பும் நிர்மாணமும், கிராமிய மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரும், கிழக்கு மாகாண சபை அமைச்சரவையின் பேச்சாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மாகாணத்தில் செயற்படும் முன்பள்ளிப் பாடசாலைகளை ஒருமுகப்படுத்தி அதன் பௌதீக வளங்களையும் ஆசிரிய, ஆசிரியைகளின் நீண்ட காலப் பிரச்சினைகளையும் தீர்க்கும் முகமாக கல்விப் பணியகம் ஒன்றை (முகாமைத்துவ வாரியம்) உருவாக்குவதற்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண அமைச்சரவையின் சிபாரிசுடன் விசேட சட்டமூலத்தை கிழக்கு மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெற்று அதற்கு மாகாண ஆளுநரின் அனுமதியும் கிடைத்துள்ளது.

இக்கல்விப் பணியகத்தின் செயற்பாடுகளாக கிழக்கு மாகாணத்தில் செயற்படும் அனைத்து முன்பள்ளிப் பாடசாலைகளின் தரவுகளைச் சேகரித்தல், பதிவு செய்தல், முன்பள்ளிப் பாடசாலையில் சேவையாற்றும் ஆசிரிய, ஆசிரியைகளின் கல்வித் தகைமைகளைப் பரிசீலித்தல், அவர்களின் தகைமைகளில் குறைபாடுகள் இருக்குமாயின் கால அவகாசம் வழங்கித் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குதல், முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்குதல், பாலர் பாடசாலை ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பான குறைபாடுகளை சீர்செய்தல், முன்பள்ளிப் பாடசாலைகளின் பௌதீக வளம் தொடர்பான விவரங்களைச் சேகரித்து இயன்றளவு வசதி வாய்ப்புகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியன அடங்கும்.

இக்கல்விப் பணியகத்திற்கு உதவும் முகமாக ஆலோசனைக்குழு ஒன்று நிறுவப்படவிருப்பதாகவும் இதன் தலைவராக கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் நியமிக்கப்படவிருப்பதோடு உறுப்பினர்களாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் ஆகியோர்கள் இடம்பெறுவர்.

அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்து மூன்று மாவட்டங்களிலும் தலா ஓர் உறுப்பினர் வீதம் மூன்று பேரும் உள்ளடங்கலாக, நிபுணத்துவம் பெற்ற கல்விமான் ஒருவரும் விசேட வைத்திய நிபுணர் ஒருவரும் இக்குழுவில் செயற்படவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து முன்பள்ளிப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் தியாகத்தின் அடிப்படையில் எமது மாகாணத்தில் உள்ள சிறுவர்களுக்கு ஆரம்ப முன்பள்ளிப் பருவக் கல்வியை ஊட்டி வருகின்றனர். இருந்தபோதிலும் இவ்வாசிரியர்கள் சம்பளம், பௌதீக வசதிகள், பிற நலன்கள் எதுவும் பெறாது தமது சேவையைச் செய்து கொண்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாணம் தனியாகப் பிரிக்கப்பட்டு மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர் பல வரலாற்று முக்கியத்துவமான சேவைகளை மூவின மக்களுக்கும் கிழக்கு மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்று கிழக்கு மாகாண அமைச்சரவையின் பேச்சாளர் உதுமாலெவ்பை மேலும் தெரிவித்தார்.

(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

★பயிலுநர் கணனி பதிவாளர்/வரவேற்பாளர்

(RECEPTIONIST/ DATA ENTRY OPERATOR (TRAINEE)

★விடுதிச் சிப்பந்தி, விடுதிச் சிப்பந்தி மேற்பார்வையாளர்
★காவலாளி
★கணனி அறிவுள்ள தரவுப் பதிவாளர்

யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு மேற்கூறிய வேலையாள்கள் தேவை. பயிற்சி வழங்கப்படும். ஆங்கிலம், சிங்கள மொழிஅறிவு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

BLUE HAVEN
70, நக்கா றோட்,
யாழ்ப்பாணம்.

தொடர்பு: நேரில் வரவும்.
தொ.பே.இல: 021 222 9958 (98913)

## Annex வீடு வாடகைக்குண்டு

சுண்டுக்குளி பாடசாலைக்கு அண்மையில் ஒரு அறை, Hall, குளியலறை வசதிகளுடன் 2 அங்கத்தவர்களுக்கு மட்டும் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 0775998255

## சிமெந்து பைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மே 31

மீளக்குடியமர்ந்த மக்களின் வீடமைப்புக் பணிகளுக்கென மற்றுமொரு தொகுதி சிமெந்துப் பைக்கற்றுக்கள் யாழ்.செயலக புனர்வாழ்வுக் கிளையினால் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

பிரதேச செயலகங்கள் ஊடாக இந்தச் சிமெந்து பைக்கற்றுக்கள், கூரைத் தகரங்கள் என்பன சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஒரு குடும்பத்துக்குஎட்டுசிமெந்து பைக்கற்றுக்களும், ஏழு கூரைத் தகரங்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

(50-224)

## எங்களின் வாடிக்கையாளர்களின் கவனத்துக்கு!

★மென்பானம் தயாரிப்புப் பொருள்கள்
★ கேக் தயாரிக்கும் பொருள்கள்
★ பொலித்தீன், லஞ்ச் பொக்ஸ்
★ இந்தியன் ஊதுபத்தி வகைகள்
★ ஆயுர் வேத மூலிகைகள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ பான்சி குட்ஸ் வகைகள்
★ ஹொட்டல் மற்றும் சைனிஸ் ஹொட்டலுக்குரிய பொருள்கள் மற்றும் பல்வேறு வகையான அனைத்துப் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

★ ஐஸ்கீறிம் தயாரிப்புப் பொருள்கள்
★ எமல்சன் வகைகள்
★ பிஸ்கட்வகைகள்
★ ஆயுர்வேத மருந்துகள்
★ றோயல் தயாரிப்புப்பொருள்கள்
★ சொக்லெட் வகைகள்
★ பேப்பர் சேவியற்
★ எசன்ஸ் வகைகள்
★ றொபி வகைகள்
★ சொப்பிங் பாக்
★ லைற் வகைகள்

(சி-567170)



**சிவா நறுமணப் பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: இல. 021 222 2567

## இளைஞர் விவகார அமைச்சு
## இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை

# போதனாசிரியர் வெற்றிடங்கள்

இந்த அதிகார சபையில் கீழ்க்கண்ட பயிற்சித் துறைகளுக்கு சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலமான பயிற்சி நெறிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் போதனாசிரியர் (ஆண்/பெண்) இணைத்துக் கொள்ளப்படுவதற்கு கீழ்க்கண்ட தகைமைகள் உள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தமிழ் மொழி மூலமான வெற்றிடங்கள் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் மட்டுமே உள்ளது. தகைமையுள்ள சிங்கள மொழி மூலமான விண்ணப்பதாரிகள் வெற்றிடங்கள் நிலவும் மாவட்டங்களில் கட்டாயமாக தொழில் செய்வதற்கு கட்டுப்படல் வேண்டும்.

| பயிற்சித்துறை | மொழி |
|---|---|
| Carpenter | Sinhala / Tamil |
| Cook | Sinhala |
| Aluminum Fabricator | Sinhala / Tamil |
| Metal Fabricator | Sinhala |
| Beautician & Hair Stylist | Sinhala / Tamil |
| Electrician | Sinhala / Tamil |
| Tailor | Sinhala / Tamil |
| Motor Winder | Sinhala / Tamil |
| Computer Hardware Technician | Sinhala / Tamil |
| Offset Lithographic Machine Operator | Sinhala |
| Computer Application Assistant | Sinhala / Tamil |

| பயிற்சித்துறை | மொழி |
|---|---|
| Out board Motor Mechanic | Tamil |
| Leather Products Maker | Tamil |
| Farm Equipment Mechanic | Tamil |
| Radio & Television allied Equipment Repair | Tamil |
| Motorcycle& Three wheeler Mechanic | Tamil |
| Motorcycle mechanic | Tamil |
| Motor Mechanic | Tamil |
| Welder | Tamil |
| Plumber | Tamil |
| Draughtsman | Tamil |
| Meason | Tamil |

### கல்வி மற்றும் தொழில்துறை தகைமைகள் : -

1. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது அதற்கு சமமான தகைமைகளுடன் 05 வருடங்களுக்கு குறையாத பயிற்சி வழங்கும்/தொழிற்றுறையில் அனுபவம் பெற்றிருத்தல்

அல்லது

2. சிங்களம் / தமிழ் மற்றும் கணிதத்துடன் விஞ்ஞானம் அல்லது அதற்கு சமனான தொழில்நுட்பத்திற்கு திறமைச் சித்தியுடன் இரண்டு முறைக்கு மேற்படாத கால கட்டத்தினுள் க.பொ.த. (சா/த) அல்லது மேற்கண்ட பாடங்களில் பி சித்தியுடன் தே.க.பொ.த பரீட்சையில் சித்தியுடன் கீழ்க்கண்ட துறைரீதியான தகைமைகள் ஒன்று அதற்கு மேல் முழுமைப்படுத்தியிருக்க வேண்டும்.

அல்லது

(I) தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் அல்லது அதற்கு சமமான துறை சம்பந்தமுள்ள தகைமைகளுடன் 03 வருடங்களுக்கு குறையாத இத் துறையில் அனுபவம் பெற்றிருத்தல்

அல்லது

(II) மூன்று வருட ஆரம்ப பயிற்சி பாடநெறி பயின்றிருத்தலுடன் 03 வருடங்களுக்கு குறையாத மேற்கண்ட துறையில் அனுபவம் பெற்றிருத்தல்

அல்லது

(III) விண்ணப்பிக்கும் துறை தொடர்பில் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பூரண கால பாடநெறியை முடித்திருத்தல் அல்லது தேசிய தொழிற்றுறை மட்டத்தில் சான்றிதழ் 4 (NVQ Level 4) சித்தியுடன் சார்ந்த துறையில் 05 வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்

வயதெல்லை :- 2010/06/11 ஆம் திகதிக்கு 21 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டதாக இருத்தல்.

தெரிவுமுறை :- நேர்முகப்பரீட்சையும் சம்பந்தப்பட்ட பாடநெறியில் செய்முறைப்பரீட்சையின் மூலம்

சம்பளம் :- மாதாந்தம்
1340-10x145-7x170-12x290-12x345=23710 (MA1-2-2006-A) சம்பளத் தரத்தில் ஆரம்பக் கட்டத்தில் நியமிக்கப்படுவர்.

இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் கிடைப்பதோடு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்யப்படும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது கல்வி, தொழிற்றுறை மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் போட்டோ பிரதிகளுடன் விண்ணப்பதாரர் தொடர்பில் அறிந்துகொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர்கள், விலாசம் மற்றும் தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கி சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை 2010.06.11 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்பதாக கீழ்க்கண்ட முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் மொழி மற்றும் பயிற்சித் துறையை தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.

தலைவர்,
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை,
4ஆம் மாடி, நிபுணதா பியச
354/2, எல்விட்டிகல மாவத்தை,
நாரஹேன்பிட்டி, கொழும்பு 05.

**"வாழ்க்கைக்கு திறமை — திறமைக்கு தொழில்"**

## உத்தியோக பூர்வ முடிவுகள் — சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 551
திகதி 2010/05/29

சுப்பர் இலக்கம்: 26
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 03 22 24 64

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 25,412,382.40 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | — |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 07 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 162 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 335 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 8,348 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 50.00 விகிதம் | 4,868 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 119,490 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 30.00 விகிதம் | 19,140 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 5,051,200.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 25,865,736.00

தேசிய லொத்தர் சபை

## ஜாதிக சம்பத — Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 25
திகதி - 29.05.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: O — அதிர்ஷ்ட இலக்கம்: 07 — வெற்றி இலக்கம்: 3 2 1 1 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | O 07 3 2 1 1 9 | ரூ. 10,295,146.00 | - |
| 1 பரிசு | 07 3 2 1 1 9 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 2 1 1 9 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 2 1 1 9 | ரூ. 10,000.00 | 15 |
| 4 பரிசு | 1 1 9 | ரூ. 1,000.00 | 176 |
| 5 பரிசு | 1 9 | ரூ. 50.00 | 1824 |
| 6 பரிசு | 9 | ரூ. 20.00 | 17331 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|---|
| 7 பரிசு | 3 2 1 1 | ரூ. 1,000.00 | 16 |
| 8 பரிசு | 3 2 1 | ரூ. 100.00 | 189 |
| 9 பரிசு | 3 2 | ரூ. 50.00 | 1827 |
| 10 பரிசு | O | ரூ. 20.00 | 7231 |
| 11 பரிசு | O 07 | ரூ. 100.00 | 849 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,319,590.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ. இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ. 10,631,080.00

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2125 திகதி 29-05-2010

ஆங்கில எழுத்திற்கும்: F
வெற்றி எண்கள்: 11 24 29 53
போனஸ் இல: 39

ஜக்பொட் பரிசு ரூ. 20,661,150/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 133242 | 20/- | 2,664,840/- |
| 2 இல | 9535 | 100/- | 953,500/- |
| 3 இல | 207 | 1,000/- | 207,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 5401 | 40/- | 216,040/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 380 | 1,000/- | 380,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 05 | 10,000/- | 50,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 20,661,150/- | - |
| 1 இல + போனஸ் இல | 6346 | 100/- | 634,600/- |
| 2 இல + போனஸ் இல | 305 | 500/- | 152,500/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 242 | 200/- | 48,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 05 | 1,500/- | 7,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 6,614,380/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 155682 | | 7,214,380/- |

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 301960211-9-33 |
| மாத்தளை | 301965514-8-31 |
| கம்பஹா | 301968164-6-44 |
| யாழ்ப்பாணம் | 301960461-0-28 |
| கொழும்பு | 301973962-5-23 |
| நுவரேலியா | 301960601-4-08 |
| குருணாகல் | 301972210-4-18 |
| அம்பாந்தோட்டை | 301962236-5-12 |
| கம்பஹா | 301974552-2-15 |
| கண்டி | 301965323-7-05 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 20,204,025/-

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனப் பயிற்சி செய்பவர்களின் கவனத்துக்கு...

ஆர்.பிரியா
யோக போதனா ஆசிரியர்,
பிரிய யோகா பயிற்சி நிலையம்.

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

குணமாகும் நோய்கள்:-

- மாதவிடாய்க் கோளாறுகள்
- பருவமடையாத நிலை
- அடிக்கடி கருச்சிதைவு
- குழந்தை இன்மைப் பிரச்சினைகள்
- தைரொய்ட்டுக் கோளாறுகள்
- உடற்பருமன் குறைத்தல்
- ஒற்றைத் தலைவலி
- இடுப்புவலி, முதுகுவலி
- மூட்டுவலி
- உணர்ச்சியற்ற நிலை
- கொலஸ்ரோல்
- உயர்குருதி அமுக்கம்
- நீரிழிவு நோய்
- நரம்புக் கோளாறுகள்
- அஜீரண நோய்கள்
- தோல் நோய்கள்
- வயிற்றுவலி, குடற்புண்
- மூட்டுவலி
- வெள்ளை சாய்தல்
- மூலம்
- கண்பார்வைக் குறைபாடு
- ஞாபக சக்தி இன்மை.



நம் நாட்டின்பழம் பெரும் கலைகளில் யோகாசனக் கலையும் உணவு முறையும் பிராணாயாமம், தியான முறையும் நம்நாட்டு மக்களின் பழம் பெரும் சித்தவைத்தியமும் மக்களின் நல் வாழ்வுக்கென நம்முன்னோர் வகுத்துத் தந்தவை. அக் கலையின் மூலம் நோய்கள் பலவற்றைப் போக்கி நல்வாழ்வைப் பெறமுடியும்.

ஆசனம் என்பது உடலை வலிமையாகவும் வளைந்து கொடுக்கும் தன்மையுடையதாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதற்கு உதவும். பிராணாயாமம் என்பது சுவாசத்துடன் தொடர்புடையது. உடலில் பல்வேறு உறுப்புக்களுக்கும் தொடர்புடையது. உடலில் பல்வேறு உறுப்புக்களுக்கும் உரிய ஒரு நல்ல பயிற்சியாய் அமைகிறது.


பிராணாயாமம் பயில்பவர்கள் நோயினின்று விடுபட்டு லேசான உடற் கட்டைப் பெற்று விளங்குவர். அவரது தோற்றமும் அழகானதாக இருக்கும்.குரல் இனிமையாக இருக்கும். சரீரத்தில்இருந்து இனிய மணம்பரவும். நல்லபசி, இனிமை, கவர்ச்சியான தோற்றம், நல்லாற்றல்,வலிமை ஊக்கம், ஆரோக்கியம் மன ஒருமைப்பாடு முதலிய அனைத்தையும் பிராணாயாமப் பயிற்சி ஒருவருக்கு நல்குகிறது. தியானம் மனதில் உள்ள எண்ணங்கள், சஞ்சலங்கள், துன்பங்கள், கவலைகளை சிறிது சிறிதாகக் குறைப்பதற்குச் செய்யும் பயிற்சி.

எனவே நாம் அனைவரும் யோகாசனப் பயிற்சிகள் பிராணாயாமம் தியானம் போன்ற பயிற்சிகளை தினம் தோறும் அரைமணி நேரமாவது பயில்வதன் மூலம் நோய்கள் இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்வோம் . ஆயுளைப் பெருக்கி மன நிறைவும் சந்தோஷமும் பெறுவோம்.

*(இன்னும் வளரும்)*

# அறிவு முக்கியமா? அன்பு முக்கியமா?

அறிவும் திறமையும், ஆற்றலும் இருந்தால் புகழ் பெற்றுவிட முடியும் என்கிறார்கள். இவை இருந்தும் பெறாதவர்கள் இருக்கிறார்களா இல்லையா? இருக்கிறார்கள் அவர்கள் ஏன் புகழ் பெறவில்லை.



அதிர்ஷ்டம் இல்லை... என்பார்கள். இதைவிட மிக மிக நுட்பமான ஒரு காரணமும் உண்டு. வெறும் திறமை மட்டும் பெரும் புகழ் தராது. மனித சமூகத்தின் மீதும் உயிர் குலத்தின் மீதும் அன்பும் கருணையும் தயவும் இருந்தால்தான் பெரும் புகழ் கிட்டும்.

உலகின் மிகப் பெரும் புகழ் பெற்ற மனிதன் என்று கொண்டால் அது யேசுநாதராகத்தான் இருக்கும். அவர் புதிதாக என்ன சொல்லிவிட்டார்?அவர் சொன்ன செய்திகள் பழமையானவைதான். அவர் பெரும் திறமைசாலி என்று சொல்வதற்கில்லை. ஆனால் மனிதர்களை, உயிர்களை ஆழமாக நேசித்தார். அவர் கண்களில் கருணை குடியிருந்தது. அவர் தொடுகையில் அன்பு வெள்ளமாய் ஓடியது. எனவேதான் அவர் மனித சமூகத்தால் விரும்பப்பட்டார். வணங்கப்படுகின்றார். புத்தரும் அப்படிப்பட்ட கருணாமூர்த்திதான். அவரது கொள்கை, தத்துவம் என்பவை பிரச்சினைக்குரியவை. ஆனாலும் அவரது அளவற்ற கருணையை மறுக்க முடியாது.

அறிவாளிகளைப் பிறர் விரும்ப வேண்டும் என்று பிறருக்கு என்ன தலையெழுத்து? அன்புள்ளவர்களைத்தான் உலகம் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடும். அளவற்ற புகழ் பெறும் எந்த மனிதனை நீங்கள் ஆராய்ந்தாலும் அவர்களுக்குள் மென்மை, தாய்மை, கருணை சுரந்தோடுவதை உணர்வீர்கள்.

வடக்கே பக்தி இயக்கத்தில் பெரும் புகழ் பெற்றவர் ஸ்ரீ சைதன்ய மகா பிரபு. அவரது கிருஷ்ண பக்திதான் பிற்காலத்தில் ஹரே கிருஸ்ணா இயக்கத்தின் மூல விதை. ஸ்ரீ சைதன்ய அடைந்த பெரும் புகழை அவர் காலத்திய பக்திமான் யாரும் அடையவில்லை. எதைக் கொண்டு அளந்து அவர் பக்தியை மட்டும் பெரிய பக்தி என்று உலகம் அவரை வணங்கியது?

அவர், அறிவை விட அன்புக்கு முக்கியத்துவம் கொடுத்த கருணாமூர்த்தி. எனவேதான் உலகம் அவர் பக்தியை தலைமேல் வைத்து கொண்டாடியது. தன் அறிவை மட்டுமே நம்பி வாழும் சில வறட்டுத் திறமைசாலிகள் அன்பு கருணை என்பன முக்கியத்துவம் புரியாமல் உளறுகிறார்கள். அவர் அறிவை விடவும் அன்பையே விரும்பினார் என்பதற்கு ஓர் ஆதாரம் சொல்லட்டுமா?

ஸ்ரீ சைதன்யருக்குப் பதினாறு வயதிருக்கும் அப்போது அவரை எல்லோரும் நிமாயி என்றே அழைப்பார்கள். அவருடைய உற்ற நண்பர் ஒருவர் பெயர் ரகுநாத்ஜீ. இருவரும் ஒரே ஆசிரியரிடம் சாஸ்திரங்கள் பயின்றனர்.

நியாய சாஸ்திரம் பற்றி இருவருமே தனித்தனியாக நூல் எழுதியிருந்தனர். இருவருமே படிப்பிலும் அறிவிலும் கெட்டிக்காரர்கள். அதிலும் ரகுநாத்ஜீ பாண்டித்தியம் உடையவர். தம் அறிவின் மீது அலாதியான மதிப்பும் வைத்திருந்தார். அதே சமயம் நிமாயியிடம் (ஸ்ரீ சைதன்யரிடம்) அன்பும் உள்ளவர்.

இருவரும் படகு மூலமாக நதியைக் கடந்துதான் பாடசாலை போக வேண்டும். வழியில் ரகுநாத்ஜி நிமாயியிடம் சைதன்யர் எழுதி வைத்திருக்கும் நியாய சாஸ்திர நூலை வாசிக்கச் சொன்னார். ஸ்ரீ சைதன்யர் வாசிக்க வாசிக்க ரகுநாத்ஜி அழ ஆரம்பித்துவிட்டார். நண்பன் அழுவதைக் கண்டு பொறுக்க முடியாத நிமாயி அவரைக் கட்டிக் கொண்டு காரணம் கேட்டார்.


'' நான் எழுதிய நியாய சாஸ்திரம் தான் உலகப் புகழ்பெறும் என்று உறுதியுடன் இருந்தேன். நீ என்னை விட உயர்வாக எழுதியிருக்கிறாய். எனவே உலகம் உன்னைத்தான் பாராட்டும். என்னை மறந்து விடும். என் நூல் அழிந்துவிடும். உன்நூல் அழியாது'' என்று தேம்பித் தேம்பித் அழுதார்.

கருணையே வடிவமான சைதன்ய மகா பிரபு, ' பூ.. இதற்கு ஏன் அழுகிறாய்? ஒரு நண்பனுடைய மகிழ்ச்சியை விட எனக்கு என்ன புகழ் வேண்டியிருக்கிறது. என் நூல் இருந்தால்தானே உன் நூலோடு ஒப்பிடுவார்கள்' என்று கூறிவிட்டுச் சடார்என்று தமது நூலைக் கங்கையாற்றில் எறிந்துவிட்டார். நிமாயியின் அன்பைக் கண்டு அதிர்ச்சியடைந்த ரகுநாத்ஜி கதறி அழுதார்.

அன்பே வடிவான சைதன்யர் உலகப் புகழ்பெற்றார். உலகம் அன்பைத்தான் கொண்டாடுகிறது. அன்பு காரணமாகவே தன்னை அழித்துக் கொண்ட யேசுவின் நல்ல வெள்ளியை எப்போதும் நினைக்கிறது. அன்புதான் உலகப் பொது மொழி!

(சுகி.சிவம்)

# அடிமை கொடுத்த அறிவு



அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படாதவர் உலகத்தில் மிகமிகக் குறைவு. ஒரு வீட்டில் தங்கும் போது நண்பரின் வாசனைத் தைலத்தின் வாசனை மூக்கைத் துளைத்தால் '' ஆஹா.. இது மாதிரி சென்ட் நமக்கு வேண்டுமே'' என்பது ஆசையின் முதல் அலை.''அட... இதையே அவர் நமக்குத் தந்து விட்டு வேறு வாங்கிக் கொண்டால் என்ன?'' என்று நினைப்பது அடுத்த பெரிய அலை.கேட்டால் தரவா போகிறார்...நாம் எடுத்து ஒருமுறை ஸ்ப்ரே செய்தால் என்ன குடிமுழுகியே போய்விடும் என்பது அடுத்த பேய் அலை.வாசனையில் மயங்கி வாசனைத் தைலப் போத்தலை நமது பெட்டியில் ஞாபகமாக மறந்துபோய் உள்ளே வைப்பது ஆசைக் கடலின் புயல்... சூறாவளி... நமது கவுரவக் கப்பலைக் கவிழ்த்துவிடும் கடல் கொந்தளிப்பு. அதாவத மானச் சுனாமி.

இப்படி பிறர் பொருளுக்கு ஆசைப்படுவதை தி.பி.கோ (திருவள்ளுவர் பீனல் கோடு) கண்டிக்கிறது. '' உள்ளத்தால் உள்ளலும் தீதே! பிறர் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்'' என்கிறது தமிழ்மறை.

கையெழுத்துப் போட பேனா கொடுத்தால் சிலருக்குத் திருப்பிக் கொடுக்க மனசே வராது. சட்டப்பையில் வைத்துக் கொண்டு புறப்பட்டு விடுவார்கள்.

பொதுவாகவே பொருளாசை துன்பம் தரும். நாம் என்ன நினைக்கிறோம் தெரியுமா? நமது அனுபவத்திற்குக் கிடைக்கும் பொருள்கள் எல்லாம் நமது புண்ணியத்தின் பலன். எனவே அவற்றை நுகர நமக்கு உரிமை உண்டு என்று நினைக்கிறோம்.நமது புண்ணிய பலத்தால் நாம் பெறுகிற சுகபோக அனுபவங்களை யார் கேள்வி கேட்க முடியும் என்று அகம்பாவமாகக்கூட நடந்து கொள்கிறோம். இது தவறு.

காந்தி அடிகள் நமக்குக் கிடைத்த செல்வத்தை நாமே அனுபவிக்காது பிறருக்குப் பயன்படுத்தச் சொல்கிறார். எப்படி?தர்மகர்த்தா தத்துவம் என்பார்கள். கோயில் சொத்தைத் தர்மகர்த்தா நிர்வாகம் செய்வார். என்னுடையது என்று கருதமாட்டார்.அதன் இனிமை முழுதும் தனக்கே என்று ஆடம்பர வீக்கம் அடையமாட்டார். அப்படி நமது பணம், சொத்து, திறமைகள், கலைகள், ஆற்றல்கள் எல்லாவற்றையும் பிறர் உடைமையாகக் கருதி, நம்மைத் தர்மகர்த்தவாக நினைக்க வேண்டும் என்கிற காந்தியக் கொள்கை மிகமிக உயர்வானது.

விவேகானந்தர் மேலை நாடுகளுக்குப் போன போது அவர் தங்கும் அறை நவீன கட்டில், உயர்ரக மெத்தையுடன் இருந்தது. ஆனால் அவர் அந்தக் கட்டில் மெத்தையைத் தவிர்த்து கீழே படுத்துக்கொண்டார்.ஏன்? என்று கேட்டபோது''என் நாட்டில் கோடிக் கணக்கான ஏழைகள் பாய்கூட இன்றி வெறுந்தரையில் படுக்கிறபோது இந்த உயர் ரக கட்டில் மெத்தையில் என்னால் எப்படி உறங்க முடியும்'' என்று பதில் கூறினார். இதுமட்டுமல்ல,இது போல உயர்ந்த சிந்தனையைத் தூண்டும் ஒரு கதை சொல்கிறேன்.

அரண்மனையில் வேலைபார்க்கும் அடிமை ஒருவன் அரசருடைய படுக்கை அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். மெத்தையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தவன் அதன் மென்மையை உணர்ந்து சாய்ந்தான். தன்னை அறியாது உறங்கியும் போனான். உள்ளே நுழைந்த அரசர் அடிமை தம் கட்டிலில் உறங்குவதைப் பார்த்து கோபப்பட்டு'' இவனை சவுக்கால் அடியுங்கள்'' என்று உத்தரவிட்டார். சவுக்கால் அடிபட்ட அடிமை அழுவதற்குப் பதில் சிரிக்கத் தொடங்கினான். அரசர்.. '' ஏன் சிரிக்கிறாய்'' என்று உறுமினான். '' அரைமணி நேரம் படுத்திருந்த எனக்கே இத்தனை அடி கிடைக்கிறது என்றால் வாழ்நாள் முழுவதும் படுத்திருந்த உங்களுக்கு எவ்வளவு அடி கிடைக்கும் என்று நினைத்தேன் சிரிப்பு வந்துவிட்டது'' என்றான்.இப்படியும் யோசிக்கலாமோ?

(அர்த்தமுள்ள வாழ்வு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# கணக்கீடு - 01 | பகுதி - I

01. நிதிக் கணக்கீட்டின் நோக்கம்,
   1) தேவையான தரப்பினருக்குரிய தகவல்களை வழங்கல்.
   2) நிறுவன திரவத்தன்மையை மதிப்பிடல்.
   3) நிறுவன செயற்பாட்டு பெறுபேறுகளை அறிதல்.
   4) எதிர்கால திட்டமிடல்.
   5) வளங்களை கட்டுப்படுத்தல்.

02. கணக்கீட்டின் அடிப்படை தொழிற்பாடாக கருதக்கூடியது?
   1) வகைப்படுத்தலும் பொழிப்பாக்கலும். 2) தகவல்களை வழங்கல்.
   3) திரட்டலும் தொடர்பாடலும். 4) திரட்டலும் பதிவிடலும்.
   5) பதிவிடலும் கணக்காய்வும்.

03. நிதிக்கூற்றுக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்,
   1) கணக்காளர். 2) கணக்குப்பதிவாளர். 3) தலைவர்.
   4) கணக்காய்வாளர். 5) பணிப்பாளர் சபை.

04. கணக்கீட்டு சமன்பாடு தோற்றம் பெறுவதற்கான அடிப்படை எண்ணக்கரு,
   1) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு. 2) பண அளவீட்டு எண்ணக்கரு.
   3) அலகுசார் எண்ணக்கரு. 4) அட்டுறு எண்ணக்கரு.
   5) தேறல் எண்ணக்கரு.

05. உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கொடுக்கல்வாங்கல்,
   1) செலுத்திய வாடகை ரூபா 4,000/=
   2) அடுத்த நிதியாண்டுக்கான முற்பணமாக செலுத்திய வாடகை ரூபா 5,000/=
   3) வங்கிக்கடன் செலுத்தியது ரூபா 6,000/=
   4) தளபாடம் வாங்கியது ரூபா 10,000/=
   5) கடன்பட்டோரிடம் பெற்றகாசு ரூபா 15,000/=

06. 01.04.2008இல் கடன்பட்டோர் மீதி ரூபா 40,000 31.03.2009இல் கடன்பட்டோர் மீதி ரூபா 60,000 ஆகும். கடன்பட்டோர் தொகையில் 5%இற்கு ஐயக்கடன் ஏற்பாடு செய்வது நிறுவனத்தின் கொள்கையாகும். ஐயக்கடன் ஏற்பாடு தொடர்பாக இலாபநட்டக் கணக்கில் பதிவு செய்யப்படும் தொகை யாது?
   1) ரூபா 1,000 குறை ஏற்பாடு. 2) ரூபா 1,000 மிகை ஏற்பாடு.
   3) ரூபா 2,000 குறை ஏற்பாடு. 4) ரூபா 2,000 மிகை ஏற்பாடு.
   5) ரூபா 3,000 மிகை ஏற்பாடு.

07. 31.03.09இல் கணக்கேடுகளை மூடும் நிறுவனம் செலுத்திய காப்புறுதித் தொகையில் ரூபா 10,000/= 01.07.2008இல் தொடக்கம் 30.06.2009 வரையான காலப்பகுதிக்குரியதாகும். 31.03.09இல் முடிவடைந்த ஆண்டில் செலுத்திய மொத்தக் காப்புறுதித் தொகை ரூபா 40,000 ஆகும். அவ்வாண்டுக்கு இலாநட்டக்கணக்கில் தாக்கீடு செய்யப்படும் காப்புறுதித் தொகை யாது?
   1) ரூபா 37,500/= 2) ரூபா 30,000/= 3) ரூபா 42,500/=
   4) ரூபா 40,000/= 5) ரூபா 46,500/=

08. மிக விரைவாக பழுதடையும் கணனி போன்ற சொத்துக்களுக்கு ஒடுங்கு மீதி முறையிலான பெறுமானத்தேய்விடல் முறை பொருத்தமானது எனக் கருதப்படுகின்றது. அதற்கான அடிப்படைக்காரணிகளாக அமைவன,
   1) கணனியின் பெறுமதி அதிகமாக இருப்பதால்.
   2) கணனியின் தொடர்ச்சியான பயன்பாடு அதிகமாக இருப்பதால்.
   3) கணனியின் பராமரிப்பு செலவு அதிகரித்துச் செல்லல்.
   4) கணனியில் இருந்து பெறுகின்ற பயன் காலப்போக்கில் குறைவடைந்து செல்லல்.
   5) வழக்கிழத்தல் தொழில் நுட்ப மாற்றங்கள்.

09. நிதிக்கூற்றுக்களுக்கு அளவு சாராப் பண்புகளை வழங்குவதற்கு வழிகாட்டியாக அமையாதது.
   1) இலங்கை கணக்கீட்டு நியமம்.
   2) நிறுவனக் கணக்காளரின் தனிப்பட்ட தீர்மானம்.
   3) இறைவரித் திணைக்கள சட்டப்பிரமாணங்கள்.
   4) கம்பனிச்சட்டம். 5) எண்ணக்கருக்கள்.

10. பங்காளர் ஒருவர் இளைப்பாறுகின்றபோது அவரது செலுத்தவேண்டிய கடன் தொடர்பான வட்டி வீதத்தில் செல்வாக்கு செலுத்தும் சட்டப்பிரிவு யாது?
   1) 24ஆம் பிரிவு. 2) 44ஆம் பிரிவு. 3) 42ஆம் பிரிவு.
   4) 24ஆம் பிரிவும் 42ஆம் பிரிவும்.
   5) மேற்கூறிய எவையுமில்லை.

11. சலிமும் ரகுமானும் 3:2 என்ற விகிதத்தில் இலாபநட்டங்களை பகிரும் பங்காளர்கள். அசின் இலாபத்தில் 1/5 பங்கு உரித்துடன் இணைத்துக் கொள்ளப்படுகிறார். புதிய இலாபநட்ட விகிதம் யாது?
   1) 10 : 8 : 2 2) 12 : 8 : 5 3) 10 : 5 : 5
   4) 3 : 2 : 1 5) 8 : 7 : 5

12. இயங்கிக் கொண்டிருக்கும் பங்குடைமை ஒன்றில் புதிய பங்காளர் ஒருவர் சேருகின்ற பொழுது அவரால் காசாகக் கொண்டு வரப்படும் நன்மதிப்பானது எவ் அடிப்படையில் பதிவு செய்யப்படும்.
   1) பழைய இலாப நட்டவிகிதம். 2) புதிய இலாப நட்டவிகிதம்.
   3) இழப்பீட்டு விகிதம். 4) மூலதன விகிதம். 5) ஏற்பீட்டு விகிதம்.

2008 ஆண்டில் Star விளையாட்டுக் கழகத்தில் பெற்ற சந்தா

| | | | 1.1.08 | 31.12.08 |
|---|---|---|---|---|
| 2008ஆம் ஆண்டுக்கு ரூ 8,000/= | | | | |
| 2007ஆம் ஆண்டுக்கு ரூ 29,000/= | வருமதி சந்தா | 2007 இற்கு | 10,000 | - |
| 2008ஆம் ஆண்டுக்கு ரூ 6,000/= | | 2008 இற்கு | - | 5,000 |
| 43,000/= | முற்பணச்சந்தா | | 3,500 | - |

13. வருமான செலவுக்கணக்கிற்கு மாற்றவேண்டிய சந்தாவை அட்டுறு அடிப்படையில் கணிக்குக.
   1) ரூபா 43,000/= 2) ரூபா 53,500/= 3) ரூபா 30,500/=
   4) ரூபா 36,500/= 5) ரூபா 37,500/=

14. காசு அடிப்படையில் சந்தா மதிப்பிடும்பொழுது வருமான செலவுக்கணக்கிற்கு தாக்கல் செய்ய வேண்டிய தொகை,
   1) ரூபா 40,500/= 2) ரூபா 20,500/= 3) ரூபா 30,500/=
   4) ரூபா 37,500/= 5) ரூபா 36,500/=

15. ஊழியர் சேமலாப நிதி தொடர்பாக தொழில் தருணரின் பங்களிப்புக்கான இரட்டைப்பதிவு,
   1) ஊழியர் சேமலாப நிதி செலவுக்கணக்கு வரவு, ஊழியர் சேமலாப நிதியக்கணக்கு செலவு.
   2) ஊழியர் சேமலாப நிதியக்கணக்கு வரவு, இலாபநட்டக் கணக்கு செலவு.
   3) ஊழியர் சேமலாப நிதியக்கணக்கு வரவு, ஊழியர் சேமலாப நிதிச்செலவுக்கணக்கு செலவு.
   4) இவை அனைத்தும் அல்ல.
   5) மேற்கூறிய அனைத்தும் பொருந்தும்.

## SPECIAL GUIDE FOR 2010 A/L COMMERCE STUDENTS

16. வரையறுத்த ஏகலைவன் கம்பனியில் 31.12.08இல் தயாரித்த கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதியானது ரூபா 75,000/= ஆகும். இக்காலப் பகுதியில் கடன் கொடுநர் பட்டோலை மீதியைத் தயாரித்தபோது ரூபா 7,000/= தவறவிடப்பட்டது. வெளித்திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 8,000/= கூட்டியும் கூட்டப்பட்டிருந்தது. மேற்கூறிய தகவல்களை கருதிக்கொண்டு திருத்த முன் உள்ள கடன் கொடுநர் பட்டோலை மீதி யாது?
   1) ரூபா 70,000/= செலவு மீதி. 2) ரூபா 68,000/= செலவு மீதி.
   3) ரூபா 62,000/= செலவு மீதி 4) ரூபா 88,000/= செலவு மீதி.
   5) இவை அனைத்துமல்ல.

17. பெற்ற கழிவு ரூபா 500/= பெற்ற கழிவுக் கணக்கில் இருமுறை பதியப்பட்டமைக்கான சீராக்கற் பதிவு,
   1) கடன் கொடுநர் கணக்கு வரவு ரூபா 1,000/=
      பெற்ற கழிவுக் கணக்கு செலவு ரூபா 1,000/=
   2) பெற்ற கழிவுக்கணக்கு வரவு ரூபா 1,000/=
      கடன் கொடுநர் கணக்கு செலவு ரூபா 1,000/=
   3) பெற்ற கழிவுக்கணக்கு வரவு ரூபா 500/=
      தொங்கல் கணக்கு செலவு ரூபா 500/=
   4) பெற்ற கழிவுக்கணக்கு வரவு ரூபா 1,000/=
      தொங்கல் கணக்கு செலவு ரூபா 1,000/=
   5) தொங்கல் கணக்கு வரவு ரூபா 1,000/=
      பெற்ற கழிவுக்கணக்கு செலவு ரூபா 1,000/=

18. இருப்புக்கள் கிரயத்திலும் தேறிய தேறத்தகு பெறுமதி குறைவாக இருக்கும் சந்தர்ப்பம்,
   1) விற்பனைச் செலவு அதிகரித்தல்.
   2) விற்பனை விலை குறைதல்.
   3) இருப்பு பழமையாதல்.
   4) இருப்பு பகுதியாளவில் சேதமடைதல்.
   5) மேற்கூறிய யாவும் சரியான கூற்றாகும்.

19. (வற்வரி) பெறுமதி சேர் வரி செலுத்தும் நிறுவனமாக பதிவு செய்துள்ள நிறுவனம் ஒன்றின் விற்பனைக் கணக்கில்,
   1) வற்வரி உட்பட மொத்த விற்பனைத் தொகை செலவு வைக்கப்படும்.
   2) வற்வரி உட்பட மொத்த விற்பனைத் தொகை வரவு வைக்கப்படும்.
   3) வற்வரி நீங்கலாக மொத்த விற்பனைத்தொகை செலவு வைக்கப்படும.
   4) வற்வரி நிங்கலாக மொத்த விற்பனைத் தொகை வரவு வைக்கப்படும்.
   5) வற்வரித் தொகையும் வரி நீங்கலான விற்பனைத் தொகையும் தனித்தனியாக செலவு வைக்கப்படும்.

20. பின்வருவனவற்றுள் எது காசின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுவதில்லை.
   1) வங்கியினால் வழங்கப்பட்டு பயன்படுத்தப்படாத மேலதிகப்பற்ற வசதி.
   2) வருட இறுதியிலுள்ள சில்லறைக்காசு மீதி.
   3) வணிகத்திடமுள்ள மூன்று மாத திறைசேரி உண்டியல்.
   4) கடன்பட்டோரிடமிருந்து பெற்று தேறாத காசோலை.
   5) கடன்பட்டோரிடமிருந்து பெற்று வைப்பிலிடாத காசோலைகள்.

*** பின்வரும் வசனங்களின் இடைவெளியினை நிரப்புக.**

21. கணக்கீட்டு உள்ளீடுகளாவன ............................... , ............................... ஆகும்.

22. சொத்து அதிகரிப்பு ............................... லும் உரிமை குறைவு ............................... லும் இரட்டைப் பதிவுத் தத்துவத்தின்படி பதியப்படும்.

23. காசேட்டின் வரவுப்பக்க கழிவு நிரலில் பதிவதற்கான மூல ஆவணம் ............................... ஆகும்.

24. அறவிட முடியாக்கடனைப் பதிவதற்கான மூல ஏடு ............................... ஆகும்.

25. இறுதி இருப்பின் கிரயம் விற்பனைக் கிரயத்திலிருந்து கழித்துக் காட்டப்படுவது ............................... எண்ணக்கருவின் அடிப்படையிலாகும்.

26. இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன்படி ஆதனம் பொறி உபகரணங்கள் என்பவற்றைச் சொத்தாக அடையாளம் காண்பதற்கான 2 பண்புகள் எவை?
...............................................................

27. பங்குடைமை உடன்படிக்கை ஒன்றில் இல்லாத விடயம் தொடர்பிலான தீர்வுக்கு ............................... ஐப் பின்பற்றுதல் வேண்டும்.

28. மீள் மதிப்பீட்டு இலாபமானது பங்காளர்களின் ............................... கணக்கிற்கு மாற்றப்படும்.

29. ஆரம்ப அட்டுறு சந்தா, சந்தாக்கணக்கில் ............................... பக்கத்தில் பதிவு செய்யப்படும்.

30. சட்டகத்தின்படியும் கணக்கீட்டு நியமம் 3இன்படியும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கடைப்பிடிக்கப்படும் அடிப்படைகள்.
...............................................................

*** பின்வருவனவை சரியானவைய/ பிழையானவைய எனக் கூறுக.**

31. காசு அடிப்படையிலான சந்தாக்கணிப்பீட்டில் முற்பணமானது கருத்தில் கொள்ளப்படும். ( )

32. பங்காளர் கடன் வட்டியானது இலாபநட்டப் பகிர்கணக்கின் வரவில் பதியப்படும். ( )

33. மீள் மதிப்பீட்டு இலாபமானது ஓர் வருமான ஒதுக்கமாகும். ( )

34. இறுதிப் பெறுமதியுடைய சொத்தொன்றின் பெறுமானத் தேய்விடத்தக்க பெறுமதியானது அதன் கிரயமாகும். ( )

35. விற்பனையிலிருந்து கொள்வனவுக் கிரயத்தை ஒப்பிடுதலே இணைதல் எண்ணக்கருவின் நோக்கமாகும். ( )

*** மிகப்பொருத்தமான விடையை எழுதுக.**

36. தேறிய கைக்கிட்டும் பெறுமதி ............................... , ............................... அடிப்படையில் மதிப்பிடப்படும்.

37. S.L.A.S 12 இற்கு அமைய சான்றுபடுத்தக்கூடிய நிகழ்வு ............................... இல் மாற்றத்தை ஏற்படுத்தும்.

38. ஒதுக்கங்கள், எற்பாடுகள் என்பவற்றுக்கிடையிலான இரு வேறுபாடுகளைத் தருக.
...............................................................

39. மூலதனச் செலவையும் வருமானச் செலவையும் வேறுபடுத்துக.
...............................................................

40. கட்டுபாட்டுக் கணக்கை தயாரிக்கும்போது வழுக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் 2 தருக.
...............................................................
...............................................................

(முற்றும்)

நன்றி: மேல்மாகாணக் கல்வித் திணைக்களம், கொழும்பு தமிழ்ச்சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# வணிகக் கல்வி - 01

## பகுதி - I

01. தேவை, விருப்பம் என்பன தொடர்பில் மிகப்பொருத்தமான கூற்று,
    1) சந்தைப்படுத்துவோரால் தேவை, விருப்பங்களை உருவாக்க முடியும்.
    2) தேவை, விருப்பம் என்பன மனித வழ்வுக்கு மிக அவசியமானவை.
    3) தேவை, விருப்பம் ஆகிய இரண்டும் கொள்வனவு ஆற்றலால் நிர்ணயிக்கப்படும்.
    4) தேவை, விருப்பம் என்பன மனித வாழ்வுக்கு மிக அவசியமானவை அல்ல.
    5) தேவை குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் விருப்பமாக மாறலாம்.

02. உற்பத்தி என்பதன் சரியான கருத்து,
    1) மூலப்பொருளை முடிவுப்பொருளாக மாற்றுவது.
    2) மனித தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்காகச் சந்தைக்குச் சமர்ப்பிக் கப்படும் எதுவும்.
    3) ஏற்கனவே பெறுமதியுள்ள பொருளின் பெறுமதியை அதிகரித்தல்.
    4) ஏற்கனவே பெறுமதியில்லாத பொருளுக்கு பெறுமதி ஏற்படுத்தல்.
    5) உள்ளீட்டை வெளியீடாக மாற்றுதல்.

03. வணிக இடர் தொடர்பான தவறான கூற்று,
    1) இணைந்து முதலீடு செய்வதன் மூலம் இடர்களைப் பரவலாக்கலாம்.
    2) எல்லா இடர்களையும் எதிர்கொள்ளல்.
    3) அதிக இடர்களை எதிர்கொண்டு அதிக இலாபம் பெறுதல்.
    4) முகாமையாளரும், ஊழியர்களும் அதிக இடர்களை ஏற்றல்.
    5) ஊழியர்களும், முயற்சியாளர்களும் அதிக இடர்களை ஏற்றல்.

04. குறித்த நிறுவனத்தால் கட்டுப்படுத்தமுடியாத ஆனால், இலங்கை மத்தியவங்கியால் கட்டுப் படுத்தக்கூடிய பேரினச் சூழல்,
    1) தொழில்நுட்பச் சூழல். 2) மக்கட்சூழல்.
    3) பூகோளச்சூழல். 4) பொருளியல் சூழல்.
    5) அரசியல் சட்டச் சூழல்.

05. தொழில் முயற்சிகளுக்கு அரசு வழங்கும் வசதிகளில் அடங்காதது,
    1) நிறுவன ரீதியான வசதிகள். 2) உட்கட்டமைப்பு வசதிகள்.
    3) வேலைவாய்ப்பு வசதிகள். 4) வரி நிவாரணங்கள்.
    5) நிதி வசதிகள்.

06. உலக நாடுகள் அனைத்தும் எதிர்கொள்ளும் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினை,
    1) அதிகரிக்கும் வறுமை. 2) சூழல் மாசடைதல்.
    3) போர்ச்சூழலுக்கு அதிகளவு பணம் செலவிடப்படல்.
    4) பெருமளவு பணம் ஆடம்பரப் பொருட்களுக்குப் பயன்படுத்தப்படல்.
    5) புவியின் அருமையான வளங்களின் மிகையான உபயோகம்.

07. விற்பனையாளர் வழங்கும் கழிவுகளில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் கொள்வனவாளர் பெற்றுக்கொள்ளத் தயங்கும் கழிவுவகை,
    1) காசுக் கழிவு. 2) கணியக் கழிவு.
    3) வியாபாரக் கழிவு. 4) பருவகாலக் கழிவு.
    5) திரண்ட கணியக் கழிவு.

08. பின்வரும் ஆவணங்கள் பயன்படுத்தப்படும் ஒழுங்குமுறைகளைக் காட்டுவது,
    அ - கட்டளைப் பத்திரம். ஆ - கூறுவிலைப் பத்திரம்.
    இ - விலைவிசாரணை. ஈ - மாதிரிப்பட்டியல்.
    1) ஈ, இ, அ, ஆ. 2) அ, ஆ, இ, ஈ.
    3) இ, ஆ, ஈ, அ. 4) இ, ஆ, அ, ஈ.
    5) அ, ஆ, ஈ, இ.

09. வலையமைப்புக்களின் வலையமைப்பு எனப்படுவது,
    1) இலத்திரனியல் அஞ்சல். 2) வெப்தளம்.
    3) இணையம். 4) உள்ளக வலையமைப்பு.
    5) பெரும்பரப்பு வலையமைப்பு.

10. ஒரு நிறுவனம் வணிகத் தொழிற்பாட்டிலிருந்து விலகிச்செல்வதற்கான காரணமாக அமைவது,
    1) பலமும், பலவீனமும். 2) வாய்ப்பும், அச்சுறுத்தலும்.
    3) பலமும், அச்சுறுத்தலும். 4) வாய்ப்பும், பலவீனமும்.
    5) பலவீனமும், அச்சுறுத்தலும்.

11. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உருவாகுவதற்காக ஒன்றிணைக்கப்பட்ட அமைப் புக்கள்,
    1) உள்நாட்டு வியாபாரத் திணைக்களமும், நியாய வியாபார ஆணைக்குழுவும்.
    2) நியாய வியாபார ஆணைக்குழுவும், விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களமும்.
    3) சுகாதாரத் திணைக்களமும், நுகர்வோர் பாதுகாப்புச் சங்கமும்.
    4) விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களமும், நுகர்வோர் பாதுகாப்புச் சங்கமும்.
    5) பாவனையாளர் அலுவல்கள் சபையும், நியாய வியாபார ஆணைக்குழுவும்.

12. HACCP சான்றிதழ் வழங்கும் நோக்கத்தை ஒத்ததாக I.S.O வினால் அறிமுகப்படுத்தப்பட்ட தரநியமம்,
    1) I.S.O, 14000 2) I.S.O 9000 3) I.S.O 22000
    4) I.S.O 14001 5) I.S.O 14024

13. பணத்தின் பண்பாகக் கருதமுடியாதது,
    1) போலிகளை உருவாக்க முடியாததாக இருத்தல்.
    2) காவிச்செல்லக்கூடியதாக இருத்தல்.
    3) இனங்காணக்கூடியதாக இருத்தல்.
    4) பெறுமான அளவுகோலாக இருத்தல்.
    5) சிறுசிறு அலகுகளாகப் பிரிக்கக்கூடியதாக இருத்தல்.

14. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் தொழிற்பாடாகக் கருதமுடியாதது,
    1) அன்னியச்செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுதல்.
    2) நடைமுறைக் கணக்கைப் பேணுதல்.
    3) வதிவற்றோர் சேமிப்பு வைப்புக்களை ஏற்றல்.
    4) நிலையான சேமிப்பு வைப்புக்களை ஏற்றல்.
    5) நாட்டின் அபிவிருத்தி நோக்கம் கருதி கடன் வழங்குதல்.

15. அரசு, அரசாங்க வரிவருமானங்கள் அரச மானியங்கள், அரசாங்கச் செலவுகள் போன்ற செயற் பாடுகள் தொடர்பான அரச பொருளாதாரக் கொள்கைமுறை அழைக்கப்படுவது,
    1) நாணயக்கொள்கை. 2) இறைக்கொள்கை.
    3) சர்வதேச வர்த்தகக் கொள்கை. 4) நாணயமாற்றுவீதக் கொள்கை.
    5) சென்மதி நிலுவைக் கொள்கை.

16. பங்குதாரர் ஒருவர் உடன்பட்ட தொகைக்கேற்ப நட்டப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வணிக அமைப்பு,
    1) வரையறுக்கப்பட்ட சொந்தக் கம்பனி.
    2) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி
    3) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி.
    4) பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம். 5) கரைகடந்த கம்பனி.

17. ஒருபொதுக்கம்பனி வர்த்தக வங்கிகளில் இருந்து குறுங்காலக் கடன்களைப்பெறுவதைத் தவிர்ப்பதற்காக வெளியீடு செய்யக்கூடிய ஆவணம்,
    1) பங்காணைப்பத்திரம். 2) பங்குப்பத்திரம்.
    3) வர்த்தகப்பத்திரம். 4) பங்குலாபப் பத்திரம்.
    5) பங்குரிமைப்பத்திரம்.

18. இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர் தொடர்பான பிரச்சினைகளில் சம்பளம் தொடர்பான விடயங்களைக் கையாழும் அமைப்பு,
    1) தேசிய கூட்டுறவுச்சபை. 2) கூட்டுறவுத் திணைக்களம்.
    3) கூட்டுறவு முகாமைச்சேவை நிறுவனம்.
    4) கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழு.
    5) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்.

19. மோட்டார் வாகனக் காப்புறுதியில் அடுத்துவரும் வருடத்திற்குரிய தவணைக்கட்டணத்தில் கழிவைப் பெறு வதற்குக் காப்புறுதியாளனுக்கு அனுமதிக்கப்படும் வசதி,
    1) வருடாந்த உபகாரப்பணம். 2) நட்டஈட்டுக் கொடுப்பனவு.
    3) ஈடுகோரா மிகையூதியம். 4) கருணைக் கொடுப்பனவு.
    5) ஒப்படைப்புக் கொடுப்பனவு.

20. பின்வரும் பணியாளர்களில் அறிவுமட்ட ஊழியர்களாகக் கருதப்படக்கூடியவர்,
    1) ஆசிரியர்கள். 2) எழுதுவினைஞர்கள்.
    3) கணக்காளர்கள். 4) பொறியியலாளர்கள்.
    5) கணக்காய்வாளர்கள்.

* 21-30 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடையளிக்குக.

21. இலங்கை அரசாங்கத்தின் பிரதான வருமான மூலமாகக் கருதப்படுவது .................................. ஆகும்.
22. அண்மையில் தனியார் பேரூந்து ஊழியர் தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடை முறை .......................................... ஆகும்.
23. வெளியீட்டுக் கருவிகளில் (Printer) மிக உயர்தரமாகக் கருதப்படுவது ......................... ஆகும்.
24. தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியின் சதவீதம் ................................ ஆகும்.
25. பயணிகள் பேரூந்துகளுக்குரிய பாதை அனுமதிப்பத்திரத்தினை ................................... வழங்குகின்றது.
26. சக்தித் தரவரிசை சான்றுப்படுத்தல் திட்டத்தை ......................................... நிறுவனமும், ................................... இணைந்து அமுல்படுத்துகின்றது.
27. தொழிற்பிரிவின் காரணமாகக் குறித்த தொழிலில் ஒருவர் பெற்றுக்கொள்ளும் சிறப்புத்தேர்ச்சி ............................... ஆகும்.
28. இலங்கையில் இணையச்சேவை வழங்கும் நிறுவனங்கள் .................................................. ....................................... ஆகும்.
29. இலங்கை மத்திய வங்கியின் ஒரு பிரதான நோக்கம், ...................................................
30. ஆகாயவிமானத்தின் மூலம் பொருட்களை எடுத்துச்செல்லப் பயன்படும் ஆவணம் ........... ஆகும்.

* 31-40 வரையான வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் எழுதுக.

31. இலங்கையில் காணப்படும் பிரபல்யமான அங்கீகார வணிக நிறுவனங்கள் எவை?
    ..................................................................................................
32. இலங்கையில் உள்ள கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு ஆய்வுகூட வசதிகளை வழங்கும் இரு பிரதான அரச நிறுவனங்களைக் குறிப்பிடுக.
    ..................................................................................................
33. 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கக் கம்பனிச்சட்டத்தின்படி கூட்டிணைக்கப்பட்ட ஒரு பகிரங்கக் கம்பனி ஆண்டிற்குரிய பங்குலாபத்தினைப் பகிர்வதற்கு முன்னர் கம்பனிப் பதி வாளர்களுக்கு சமர்ப்பிக்கவேண்டிய ஆவணம் எது?
    ..................................................................................................
34. அரசாங்க ஆவணங்களின் கொடுக்கல்வாங்கல் தொடர்பாகப் பின்பற்றப்படும் ''லங்கா செட்டில்'' (Lanka Settl) முறைமையின் இரு பிரிவுகளும் எவை?
    ..................................................................................................
35. இலங்கையின் தனியார்துறை தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தொடர்பான நடவடிக்கை களைக் கையாளும் பிரதான நிறுவனம் யாது?
    ..................................................................................................
36. ஆயுட்காப்புறுதியின் மீது செல்வாக்குச் செலுத்தும் இரு பிரதான தத்துவங்கள் யாவை?
    ..................................................................................................
37. மொத்த, சில்லறை வியாபாரம், சுற்றுலா போன்றன மத்திய வங்கியின் பாகுபாட்டின் அடிப் படையில் ............................................. பிரிவினுள் உள்ளடக்கப்படும்.
38. வேலைவாய்ப்பு வழங்குதல், வருமானச் சமமின்மையைக் குறைத்தல், சிக்கனமான வளப் பிரயோகம் போன்றவை வணிகத்தின் ........................................... சார்ந்த பொறுப்பாக உள்ளடக்கப்படும்.
39. தொலைத்தொடர்பினூடாக சர்வதேச மட்டத்தில் வங்கிகளுக்கிடையில் இடம்பெறும் பணக் கொடுக்கல்வாங்கல் தொடர்பான வலைப்பின்னல் ................................................ எனப் படும்.
40. I.S.O 9001 - 2001 ISO ............................ , ............................ , ............................
    ஆகிய மூன்று நியமங்கள் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்ட நியமங்கள்.

## பகுதி - II

* **முதலாம், 2ஆம் வினாக்கள் உட்பட நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. 1) உற்பத்தியை துறைரீதியாக விளக்கி, ஒரு லீற்றர் பால் போத்தல் உமது வீடு வரை கிடைப் பதை எவ்வாறு இத்துறை ரீதியான தொழிற்பாடு வெளிப்படுத்துகின்றது என விளக்குக.
    2) வணிகங்கள் ஏன் நிலைத்திருக்கின்றன?
    3) பொருளாதார சூழல் என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது யாது? வணிக தொழிற்பாட் டிற்கு இப்பொருளாதாரச் சூழல் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது.
    4) தெளிவான இலக்கு வணிகங்களின் குறிக்கோளை அடைவதற்கு எவ்வகையில் உதவுகிறது என விளக்குக.
    5) வரையறையற்ற பொறுப்பு என்ற பதத்தை விளக்கி, அது எவ்வாறு சிறியளவு வணிகங்க ளுக்கு பிரதிகூலமாக அமையும் என்பதை விளக்குக.
    6) பின்வரும் எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.
       அ. தனியார் மயமாக்கல், தேசிய மயமாக்கல்.
       ஆ. பணக்கொள்கையும், நிதிக்கொள்கையும்.
       இ. நுகர்வோர் உரிமையும், நுகர்வோர் பொறுப்பும்.

02. 1) ''அநேக வணிக நிறுவனங்கள் திறனற்ற தொடர்பாடல் முறைகளால் பாதிப்படைகின்றது'' சிறப்பான தொடர்பாடலுக்குள்ள தடைகளை பட்டியல்படுத்துக.
    2) ''பிரதிமை'' அடிப்படையிலான காசோலை தீர்ப்பனவு முறை எனப்படுவது யாது? இதன் மூலம் வாடிக்கையாளர் அடையும் நன்மை யாது?
    3) பொதுவாக தொழிற்சாலை உரிமையாளர் ஒருவர் பெற்றுக்கொள்ள வேண்டிய காப்புறுதி கொள்கைகளையும் (Insurance) அவை ஒவ்வொன்றிலும் உள்ளடக்கப்பட்டவேண்டிய விடயங்கள் ஒவ்வொன்றினையும் குறிப்பிடுக.
    4) போக்குவரத்தில் காணப்படும் வாகன நெரிசல்களை தவிர்ப்பதற்கு அரசு எடுத்துள்ள நட வடிக்கைகள் யாவை?
    5) சார்பு நலன் கோட்பாட்டிற்கு ஒப்பிட்டு நலன் கோட்பாட்டிற்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக.
    6) வலையமைப்பு (Network) என்றால் என்ன? வலையமைப்பு வசதியை பெற்றுக்கொள்ளத் தேவைப்படும் விடயங்கள் எவை?

03. 1) ''வணிக நோக்கம் இலாபமீட்டுதல் மட்டுமல்ல'' இக்கூற்றுக்கு நீர் உடன்படுகிறீரா? காரணம் தருக.
    2) ஒரு வணிக அமைப்பில் காணப்படும் முகாமையாளர், ஊழியர், பங்குதாரர்கள் வேறுபட்ட நோக்கங்களை கொண்டு காணப்படுவர். இவ்வேறுபாடு எவ்வாறு முரண்பாடுகளைத் தோற்று விக்கும் என்பதை விளக்குக.
    3) அ. பின்வருவன அடிப்படையில் தனியார் துறை, பொதுத்துறை நிறுவனங்களை வேறு படுத்தி காட்டுக.
          1. உரிமையும் கட்டுப்பாடும். 2. போட்டி.
          3. ஊக்குவிப்பு. 4. நிதி.
       ஆ. தனி பங்குதாரர் கம்பனி என்பதனால் விளங்கிக்கொள்வது யாது?
    4) வியாபாரி ஒருவரின் எத்தகைய நடவடிக்கைகள் நுகர்வோர் அலுவலக அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும்.

04. 1) ''கொழும்பு நகர் பகுதிகளில் கழிவுகளை அகற்றுதல் ஒரு பாரிய பிரச்சினையாகக் காணப் படுகின்றது'' இப்பிரச்சனையை தீர்பபதற்கு சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரி என்ற முறை யில் நீர் கூறும் ஆலோசனைகள் எவை?
    2) அ. அரச பிணைகள் எவ்வடிவங்களில் காணப்படுகின்றது.
       ஆ. இவற்றுள் எது இலங்கை ரூபா வடிவத்தில் காணப்படாத பத்திரமாகும்.
    3) நாணய பெறுமதியேற்றம். நாணய பெறுமதி இறக்கம் என்பவற்றிற் கிடையிலான வேறு பாட்டை உதாரணம் மூலம் விளக்குக.
    4) கையடக்க தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ள கூடிய நவீன வசதிகள் மூன்றைக் குறிப் பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

05. 1) குத்தகை முறைக்கும் வாடகை கொள்வனவு முறைக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக.
    2) கீழே தரப்பட்ட விநியோக முறையின் மூலம் உற்பத்தியாளர் ஒருவருக்கு காணப்படும் அனு கூலங்கள் யாவை?
       உற்பத்தியாளர் - மொத்த வியாபாரி - சில்லறை வியாபாரி - நுகர்வோர்.
    3) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தொழிற்பாடுகள் மூன்றினை விளக்குக.
    4) சிறுகுறிப்பு எழுதுக.
       அ. அண்மிய காரணி. ஆ. காப்புறுதி செய்யமுடியாத நட்ட அச்சம்.
       இ. ஒப்புறுதி

06. 1) நுகர்வோர் சில தெரிவு செய்த சில்லறை வியாபார நிலையங்களை நாடிச்செல்வதற்கான காரணங்களை குறிப்பிட்டு விளக்குக.
    2) சர்வதேச வர்த்தக கொடுக்கல்வாங்கலில் இலத்திரனியல் கொடுப்பனவு முறையின் பயன் பாடு அதிகளவில் அதிகரித்துள்ளது. இதற்கான காரணங்கள் யாவை?
    3) அ. உற்பத்தி நாட்டு சான்றிதழ் என்பதன் பொருள் யாது?
       ஆ. இவ் உற்பத்தி நாட்டு சான்றிதழ் மூலம் இறக்குமதியாளர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் யாவை?

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களுக்கும் புலன்களுக்கும் ஒரே சமயத்தில் இரண்டு விருந்துகள்

இம்மாதம் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் யாழ்.நகரின் மையப்பகுதி முதன் முறையாக ஒரு வித்தியாசமான அனுபவத்தைச் சந்தித்தது. ஆம், நிச்சயமாக இதுவரை காலமும் கண்டிராத ஒரு புதிய அனுபவம்தான் இது.


வெசாக் அலங்கார வளைவு

எது எவ்வாறிருப்பினும் யாழ். நகரமே வர்ண ஒளிவிளக்குகள் மற்றும் விதம் விதமான சோடனைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் மிகப் பெரிய மனித வலுவைப் பயன்படுத்தி துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்.பொதுநூலகம், கோட்டை, யாழ்.தபால் நிலைய முற்பகுதி ஆகிய இடங்களில் பிரமாண்டமான நிலப்பரப்பை ஒதுக்கி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை மையமாக வைத்து இந்த நிகழ்வுக்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

கடந்த ஆண்டுகள் இது போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றிருப்பினும் இம்முறை போன்று மிகப் பிரமாண்டமாக அமையவில்லை என்றுதான் கூறவேண்டும்.

இவற்றைக் கண்டுகளிக்கப் பெரும் திரளான மக்கள் குவிந்தனர். தற்போது ஏ-9 வீதி திறக்கப்பட்ட நிலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது.




இதில் பெரும் பாலான சுற்றுலாப் பயணிகள், விடுமுறை நாள்களை அண்டியே இங்கு வந்து சென்றனர்.

இவ்வருடம் மே மாதம் 27 ஆம், 28 ஆம் திகதி வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் அமைந்தது. இது உல்லாசப் பயணிகளுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது.

காரணம் தொடர்ந்து நான்கு நாள்கள் விடுமுறையைக் கழிக்கக் கூடியதாக அமைந்து விட்டது.

இதனால் குடாநாட்டின் பிரதான வீதிகளில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் சாத்தியம் காணப்பட்டது. ஏனெனில் எமது வீதிகள் அகலிக்கப்பட்ட வீதிகளாகவோ அல்லது வீதிச் சமிக்ஞை விளக்குகள் மூலம் பயணிகளைக் கட்டுப்படுத்தும் வசதிகளோ அற்ற நிலையிலேயே காணப்படுகின்றன.

இதனை நன்கு உணர்ந்த யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமை தமது சமயோசித


சிறுகைத்தொழில் கண்காட்சியில் தும்பு உற்பத்திப் பொருள்கள்

புத்தியைப் பயன்படுத்தி, வெசாக் தினத்திற்குச் சில நாள்களுக்கு முன்னரே வீதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்த பழக்கடைகளைத் துடைத்து அகற்றியதுடன், போக்குவரத்து ஒழுங்குகளைச் சீராக்கும் வகையில் வீதிகளுக்குப் பொலிஸாரை இறக்கி போக்குவரத்தை நல்ல முறையில் ஒழுங்குபடுத்தி வந்ததை நீங்கள் அனைவரும் நன்கு அறிந்திருப்பீர்கள்.

யாழ்.மாநகரசபை இப்பழக்கடைகளை அப்புறப்படுத்துவதற்குப் பல நாள்களாக முயற்சி எடுத்து வந்தும் அது கடினமான காரியமாக இருந்தது எனினும் ''துண்டைக் காணோம் துணியைக் காணோம்'' மன்னிக்கவும் பழக்கடைகளைக் காணோம், பழக்கடைகளைக் காணோம் என நீங்கள் தேடி இருப்பீர்கள்.

இப்பழக்கடைகளுக்கு இடம் ஒதுக்குவதற்கு ஆலோசித்து வருகின்றோம், மணிக்கூட்டு கோபுர வீதியில் இடம் ஒதுக்குகின்றோம் என்றெல்லாம் யாழ். மாநகர ஆணையாளர் மு.வ.சரவணபவ கூறி வந்ததை நீங்கள் அனைவரும் பத்திரிகை வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

ஏன் மணிக்கூட்டுக் கோபுர வீதியில் உள்ள சுவர்களில் மஞ்சள் பூச்சினால் இவர்களுக்கான இடம் ஒதுக்கப்பட்டு இலக்கமிட்டிருப்பதைக் கூடக் கண்டிருப்பீர்கள்.

என்னதான் இருப்பினும் தற்போது யாழ்.பஸ்நிலையப் பகுதி மிகவும் அழகாகவும் இலகுவாகப் பயணிக்கக் கூடியதாகவும் இருப்பதாகப் பயணிகள் செல்வதையும் காணக் கூடியதாக இருக்கிறது.

எது எவ்வாறாயினும் வெசாக் நிகழ்வுகள் முடிந்தபிறகு இப்பகுதியில் பழக்கடைகள் பீனிக்ஸ் பறவை போல மீண்டும் உயிர்ப்பிக்காது விட்டால் நல்லதுதான்.

வெசாக் தினத்தையொட்டி குடாநாட்டில் தீவிர பாதுகாப்பு ஒழுங்குகளுக்காக சுமார் 700 பொலிஸாரை ஈடுபடுத்தியுள்ளதாக கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பை ஒழுங்குசெய்து யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஹெட்டியாராச்சி தெரிவித்திருந்தார்.

இவ்வாறு நல்ல முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வெசாக்தின நிகழ்வை எதிர்பார்த்ததை விட அதிகமான உல்லாசப் பயணிகள் கண்டு களித்தனர்.

ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த வீதி ஒழுங்கு நடவடிக்கை மூலம் போக்கு வரத்து நெரிசல்களைப் பொலிஸார் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர்.

இவ்வாறாகக் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகிய வெசாக்தின நிகழ்வுகளை யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க வைபவ ரீதியாக ஒளி விளக்குகளை எரியவிட்டு ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து அனைத்து வெளிச்ச விளக்குகள் அலங்கார விளக்குகளும் ஒளி வீசி அப் பகுதியையே ஒளியால் அலங்கரித்தன.

தொடர்ந்து பிரதம விருந்தினரான யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க மற்றும் சிறப்பு விருந்தினர்களான யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் என். சண்முகலிங்கன் உள்ளிட்டோர் ஒவ்வொரு அலங்கார விளக்குகளாகப் பார்த்து வந்தார்கள். பின்னர் மங்கள விளக்குகள் விருந்தினர்களால் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து விசேட வெசாக் பக்திப் பாடல்கள் இடம்பெற்றன.

இவ்வாறாக அலங்கரிக்கப்பட்ட அலங்காரங்களில் சிறப்பு அம்சங்களாக சுமார் 75 அடி உயரமான அளவில் சிவனொளி பாதமலை அமைக்கப்பட்டிருந்தது. துரையப்பா விளையாட்டரங்கிலுள்ள நீர்த்தாங்கியின் உதவியுடன் இதில் ஏறும் வழியில் இடையில் இளைப்பாறும் பகுதி கோப்பி விற்பனை நிலையம் மற்றும் சித்தாலேப மருத்துவ நிலையம் என்பனவும் அமைக்கப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினரின் மின் பொறியியல் பிரிவினால் அமைக்கப்பட்டிருந்த ''நரக உலகத்தின் அமைப்பு'' இதற்குள் நுழைந்ததும் ஒரே பயங்கரக் காட்சிகள். இப் பூமியிலே மனிதன் புரிகின்ற ஒவ்வொரு குற்றத்துக்கும் நரக உலகத்தில் வழங்கப்படுகின்ற தண்டனைகள். உதாரணமாக எண்ணெய்ச் சட்டியில் வறுத்தல், தீக்குழம்பைப் பருகக் கொடுத்தல், நெருப்பில் தள்ளி விடுதல், கொடிய விலங்குகளுக்கு இரையாக்குதல் போன்ற பல தண்டனைகளை உணர்வுபூர்வமாக காணக் கூடியதாக மிகவும் தொழில்நுட்ப முறைகளால் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இதைவிட மிகச்சிறப்பாக மக்களைக் கவரக்கூடிய ஓர் அம்சமாக இவற்றுக்கு இடையில் அமைக்கப்பட்டிருந்த குகை காணப்பட்டது.

ஆம், படு பயங்கரமான பாரிய உருவம் அதன் வாய்மூலம் மெல்ல மெல்ல நகர்ந்தோம், ஒரே இருள் [illegible] திடீரென மின்னி மின்னி மறையும் ஒளிக்கு நடுவே அச்சமூட்டும் உருவங்கள். இந்த அமைப்பு மக்களின் பெருவரவேற்பைப் பெற்றதுடன், இதனூடான பயணம் ஒரு ''திரில்'' அனுபவமாக அமைந்திருந்தது.

இதைவிட தபால் நிலையம் முன்பாக விசேடமாக சிறுவர்கள் விளையாடி மகிழ்வதற்கு விளையாட்டு ரயில் வண்டி, குடைராட்டினம் போன்றவையும் அமைக்கப்பட்டிருந்தன.

அத்தோடு தானசாலைகள் என்பன அமைக்கப்பட்டுப் படையினரால் பொதுமக்களுக்கு உணவுகளும் பரிமாறப்பட்டு வந்தன.

இவ்வாறாக மிகச்சிறப்பாக நடைபெற்ற இக் கண்காட்சி பெருமளவு உல்லாசப் பயணிகளை யாழ்.நகர் நோக்கி வரவழைத்தது.

இதேவேளை இது உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்து விட்டது. அது எவ்வாறு என நீங்கள் எண்ணக்கூடும்.

கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பமாகிய ''உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம்'' என்ற தொனிப்பொருளில் மாபெரும் வடமாகாணக் கண்காட்சி உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காகவும் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கண்காட்சியில் வடமாகாண சபையின்கீழ் இயங்கும் அனைத்துத் திணைக்களங்களும்


அழகாகக் காட்சி தரும் அலங்காரம்

பங்கு பற்றித் தமது உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தின.

இக்கண்காட்சியை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

தொகுப்பு: சுகந்தன்

இக்கண்காட்சியில் காட்சிக் கூடங்கள், செய்முறைக் கூடங்கள், விற்பனைக் கூடங்கள் என்பன அமைக்கப்பட்டிருந்ததுடன் இவை விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

அது மட்டுமில்லாமல் பலர் தமது உள்ளூர் உற்பத்திகளையும் காட்சிப்படுத்தினர். இதன் மூலம் வெசாக் பண்டிகையை முன்னிட்டு யாழ்.நகரத்திற்கு வருகை தந்த உல்லாசப் பயணிகள் இப்பொருள்களால் கவரப்படுவதற்குப் பெரும் வாய்ப்பாக அமைந்தது.

என்னதான் இருந்தாலும் புத்தபெருமானின் வெசாக் தினநிகழ்வு உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குச் சிறந்த களத்தை அமைத்துக் கொடுத்துள்ளது என்பதை யாரும் மறுக்க இயலாது. இதை உள்ளூர் உற்பத்தியாளர்கள் சிறந்த முறையில் பயன்படுத்தி இருக்க வேண்டியது அவர்களது முக்கிய பொறுப்பு என்றுதான் கூறவேண்டும். ★★


சிறுகைத்தொழில் கண்காட்சியில் பனம்பொருள் உற்பத்திப் பொருள்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**01.10.1991**

* ஆனையிறவு யுத்தத்தின் பின்னர் குடா நாட்டு மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு பெருகியிருப்பதாக 'ரைம்' சஞ்சிகை விமர்சிப்பு.
* விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு இலங்கை அரசு ஆயுதங்களை வழங்கியது உண்மையே என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஒப்புக்கொண்டுள்ளதாக இந்திய வானொலி தெரிவிப்பு.

**02.10.1991**

* இந்திய அமைதிகாக்கும் படைக்கு எதிராகப் போராட விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசு ஆயுதங்கள் வழங்கியது என்ற குற்றச்சாட்டு வெளியானதைய டுத்து இலங்கை - இந்திய உறவில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* இலங்கை இராணுவத்தினருக்குப் பேரிழப்பை ஏற்படுத்தி வரும் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகள் அவர்களுக்கு இஸ்ரேலினால் வழங்கப்பட்டவையாகும் என இஸ்ரேலின் உளவுப் பிரிவு 'மொசாட்' டின் முன்னாள் அதிகாரியொருவர் தெரிவிப்பு.

**03.10.1991**

* வட பகுதிக் கடலில் ரோந்துப் பணியில் ஈடுபடும் கடற்படைப் பீரங்கிப் படகுகளைத் தாக்கி அழிக்க விடுதலைப் புலிகள் புதிய ரக கடற்கண்ணி வெடிகளைத் தயாரித்துப் பயன்படுத்தி வருவதாக இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு.
* தீவக கடற்பகுதியில் கடற்புலிகள் நடத்திய தீவிர தாக்குதலில் இலங்கை கடற் படைக்குச் சொந்தமான அதிவேகப்படகொன்று கடலில் மூழ்கடிக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

**04.10.1991**

* நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட் டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஆளும் ஐ.தே.கட்சி அரசு தோல்வியடைந்தால் ஐ.தே.கட்சியின் அதிருப்தியாளர்கள் புதிய அரசொன்றை அமைக்க நாம் ஆதரவு வழங்குவோம் என எதிர்க் கட்சிகள் கூட்டாக அறிவிப்பு.
* கொழும்பில் அடுத்த மாதம் நடத்தத் திட்டமிட்டிருக்கும் சார்க் உச்சி மாநாட்டைக் கொழும்பில் நடத்தாமல் இரத்துச் செய்யக் கோரும் முயற்சியில் நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய மூன்று நாடுகளும் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிப்பு.

**05.10.1991**

* அரச படையினர் கிழக்கில் மீண்டும் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு வரும் நாள் நெருங்க நெருங்க, ஜனாதிபதி பிரேமதாஸவுக்குள்ள ஆதரவு மேலும் குறைந்து வருவதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிப்பு.

**06.10.1991**

* கொழும்பில் அடுத்த மாதம் நடத்தத் திட்டமிட்டுள்ள சார்க் நாடுகளின் உச்சி மாநாட் டில் இந்தியா கலந்து கொள்வதற்கான சாத்தியம் மென்மேலும் குறைந்து வருவதாகத் தெரிவிப்பு.
* ஈரோஸ் அமைப்பின் சார்பில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற யாழ். மாவட்ட சுயேச்சை எம்.பிக்கள் நாடாளுமன்றம் வருவதைக் குறைகாண முயல்வதோ, கண்டித்து எதிர்ப்பதோ அர்த்தமற்றதாகும் என அரசியல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநரும், முன்னாள் வடக்கு -கிழக்கு மாகாண அமைச்சருமான தயான் ஜெயதிலக தெரிவிப்பு.

**07.10.1991**

* விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் படையினரின் கை ஓங்கியுள்ள இவ்வேளையில் அரசு யுத்த நிறுத்தமொன்றுக்கு ஒப்புக் கொள்ளக் கூடாது என இராணுவத் தலைமைப் பீடம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* அரசின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் ஈரோஸ் அமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறாமலேயே அரசால் வெற்றிபெற முடியும் என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு.

**08.10.1991**

* ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையைச் சபாநாயகர் எம்.எச்.முகம்மது நிராகரித்து, அது குறித்து ஜனாதிபதிக்கும், எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோவுக்கும் அறிவித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* நாட்டின் அமைதி தோன்றுவதற்கு தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டியது அவசியமாதலால் நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து இயங்கிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவி பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவிப்பு.

**09.10.1991**

* சபாநாயகர் எம்.எச்.முகம்மது மீது எதிர் கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையை எதிர்க்கட்சிகள் சார்பில் எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்ததாகத் தெரிவிப்பு.
* லலித் அதுலத்முதலி பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது விடுதலைப்புலிகள் இயக்க பிரமுகர் கிட்டுவுடன் பேச்சு நடத்தியதோடு புலிகளுக்கு ஆயுதம் வழங்குவ தற்கும் உடன்பட்டிருந்ததாக ஜனாதிபதி பிரேமதாஸ குற்றச்சாட்டு.

**10.10.1991**

* எதிர்க்கட்சிகள் சார்பில் அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டி ருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பிக்க எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ மறுத்துவிட்டதால் பிரேரணை செல்லுபடி அற்றதாகிவிட்ட தாக உபசபாநாயகர் காமினி பொன்சேகா நாடாளுமன்றத்தில் அறிவிப்பு.
* ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமானால் வெளிநாட்டுப் பிரசன்னம் தேவை என தமிழ் மக்கள் கருதுவது நியாயமானதொன்றாகவே தோன்றுகிறது என கிறிஸ்டியன் எய்ட் யூ.கே. என்ற பிரிட்டிஷ் தொண்டர் நிறுவனத்தின் பிரதிநிதி கருத்துத் தெரிவிப்பு.

**11.10.1991**

* சபாநாயகர் எம்.எச் முகம்மதுவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று 38 அதிகப்படியாக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டதாக அறிவிப்பு.
* ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு ஏதிராக குற்றவிசாரணை பிரேரணை கொண்டு வரும் யோசனையை எமக்குத் தந்தவரே சபாநாயகர் முகம்மதுதான் என ஐ.தே. கட்சி அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சமரவீரர் வீரவன்னி நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு.

**12.10.1991**

* வடக்கு, கிழக்கு மாகாண சபையை ஆட்சி செய்த ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம், ஜே.வி.பியினருக்கு ஆயுதம் வழங்கியதாக வடக்கு, கிழக்கு மாகாண அரசியல் அமைச்சராக இருந்து பதவி விலகிய தயான் ஜெயதிலக குற்றச்சாட்டு.
* இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழு ஆராய்ந்து வரும் இவ்வேளையில் அமைச்சர் தொண்டமான் மறுபுறமாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்துவது தவறு என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ குற்றச்சாட்டு.

**13.10.1991**

* ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக மீண்டும் ஒரு குற்ற விசாரணைப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டு வர ஐ.தே. கட்சி அதிருப்தியாளர்கள் குழு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.
* மனித உரிமைகள் மீறப்படுதல், பாதுகாப்புச் செலவினஅதிகரிப்பு என்பவற்றுக்கு ஆட்சேபம்தெரிவிக்கும் விதத்தில் நோர்வே அரசு இலங்கைக்கு அடுத்த வருடம் வழங்கவிருந்த நிதி உதவியை வெட்டிக் குறைத்துள்ளதாகத் தெரிவிப்பு.

**14.05.2010**

* முல்லைத்தீவு, மூன்றாம் கட்டை இரா ணுவ மினி முகாம் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித்தாக்குதலில் முகாம் முற்றாக அழித்து நாசமாக்கப்பட்டதுடன் 21 படையினரும் பலியானதாகத் தெரிவிப்பு.
* விடுதலைப்புலிகளுக்கு இலங்கை அரசு ஆயுதங்கள் வழங்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாகவும் வேறுபல முக்கிய விடயங்கள் குறித்தும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் கொழும்பு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருப்பதாகத் தெரிவிப்பு.


**15.10.1991**

* விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சாமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியாக 'குயாக்கர்ஸ்' சமாதான இயக்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருப்பதாகத் தெரிவிப்பு.
* விடுதலைப்புலிகள் வன்முறைகளைக் கைவிடத் தயார் என்றால், அவர்களைச் சமாதான மாநாட்டுக்கு அழைப்பதற்கு நான் தயாராகவுள்ளேன் என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.

# பழைய குருடி கதவைத் திறந்தாள் மீண்டும் தனிச் சிங்களத்தில் நியமனக் கடிதங்கள்

கிளிநொச்சி, மே 31

கல்வியமைச்சினால் அண்மையில்



அனுப்பிவைக்கப்பட்டுள்ள அதிபர் சேவை நியமனக் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தனிச்சிங்களத்தில் இத்தகைய கடிதங்களை அனுப்புவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்களும் ஏற்கனவே பல தடவைகள் ஆட்சேபம் தெரிவித்து வந்த போதும் இறுதியாக அனுப்பப்பட்ட கடிதமும் இவ்வாறே அனுப்பப்பட்டுள்ளதால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக உத்தியோகத்தர்கள் பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இனிவரும் காலங்களிலாவது தமிழ் மொழியில் இதுபோன்ற முக்கிய கடிதங்களை அனுப்பிவைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

(எ-405)

# மீள் குடியேற்றப்பட்டு இருமாதங்களாகியும் இதுவரை வட்டக்கச்சிக்கு தபால் விநியோகம் இல்லை

கிளிநொச்சி, மே 31

இந்தவருடம் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி மீள் குடியேற்றம் நடைபெற்ற போதிலும் தபால் விநியோகம் இதுவரை வட்டக்கச்சியில் ஆரம்பிக்கப்படவிலையெனப் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி இராம நாதபுரம் உப தபால் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு தபால் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் வட்டக்கச்சி உப தபாலகம் ஆரம்பிக்கப்படாமையால் தபால் விநியோகம் நடைபெறவில்லை. இதனால் வாரத்தில் இரு நாள்கள் கிளிநொச்சி தபாலகத்திலிருந்து வட்டக்கச்சிப் பகுதி தபால்கள் வட்டக்கச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள உப தபாலகத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் வைக்கப்பட்டிருப்பதாகவும் உரியவர்கள் அங்கு வந்து தபால்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோன்று திருவையாறு உப தபாலகமும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை எனினும் 'கிளிநொச்சி நகரை அண்டிய பல பகுதிகளில் கிளிநொச்சி தபாலகத்தில் இருந்தே தபால் விநியோகம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(எ-405)

# கிளிநொச்சி மாவட்ட மட்ட பெரு விளையாட்டு முடிவுகள்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற பெரு விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**எல்லே-19 வயது ஆண்கள்**
முதலாமிடம்-முழங்காவில் ம.வி, 2ஆம் இடம்-பூநகரி ம.வி, 3ஆம் இடம்-கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**எல்லே-19வயது பெண்கள்**
முதலாமிடம்-பூநகரி ம.வி, 2ஆம் இடம்-கனகபுரம் ம.வி, 3ஆம் இடம்- முழங்காவில் ம.வி.

**கபடி- 19 வயது ஆண்கள்**
முதலாமிடம்-பூநகரி ம.வி, 2ஆம் இடம்-கனகபுரம் ம.வி, 3ஆம் இடம்- கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**கபடி- 19 வயது பெண்கள்**
முதலாமிடம்-பூநகரி ம.வி, 2ஆம் இடம்- வேரவில் இந்து ம.வி, 3ஆம் இடம்-கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**உதைபந்தாட்டம்-17வயது ஆண்கள்**
முதலாமிடம்-வேரவில் இந்து ம.வி, 2ஆம் இடம்-இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை, 3ஆம் இடம்- பளை மத்திய கல்லூரி.

**உதைபந்தாட்டம்-19வயது ஆண்கள்**
முதலாமிடம்-கிளிநொச்சி இந்துக் கல்லூரி, 2ஆம் இடம்-பாரதி வித்தியாலயம், 3ஆம் இடம்-முழங்காவில் ம.வி.

**உதைபந்தாட்டம்-19வயது பெண்கள்**
முதலாமிடம்-பூநகரி ம.வி, 2ஆம் இடம்-வேரவில் இந்து ம.வி.

**கரபந்தாட்டம்-15 வயது ஆண்கள்**
முதலாமிடம்-கனகபுரம் ம.வி, 2ஆம் இடம்-ஜெயபுரம் ம.வி, 3ஆம் இடம்- கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**கரபந்தாட்டம்-15 வயது பெண்கள்**
முதலாமிடம்-கிளிநொச்சி இந்துக் கல்லூரி, 2ஆம் இடம்- இரணைதீவு றோ.க.த.க.பாடசாலை, 3ஆம் இடம்- வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை.

**கரபந்தாட்டம்-17 வயது ஆண்கள்**
முதலாமிடம்-கனகபுரம் ம.வி, 2ஆம் இடம்-கிளிநொச்சி இந்துக் கல்லூரி, 3ஆம் இடம்-பூநகரி ம.வி.

**கரபந்தாட்டம்-17 வயது பெண்கள்**
முதலாமிடம்- பளை மத்திய கல்லூரி, 2ஆம் இடம்-முருகாணந்தா ம.வி, 3ஆம் இடம்-பாரதி வித்தியாலயம்.

**கரபந்தாட்டம்-19 வயது ஆண்கள்**
முதலாமிடம்- பாரதி வித்தியாலயம், 2ஆம் இடம்-ஜெயபுரம் ம.வி, 3ஆம் இடம்-பூநகரி ம.வி.

**கரபந்தாட்டம்-19 வயது பெண்கள்**
முதலாமிடம்-கிளிநொச்சி இந்துக் கல்லூரி, 2ஆம் இடம்-பளை மத்திய கல்லூரி, 3ஆம் இடம்-அக்கராயன் ம.வி.

**மென்பந்துக் கிரிக்கெட் 19 வயது ஆண்கள்**
முதலாமிடம்-பளை மத்திய கல்லூரி, 2ஆம் இடம்-ஜெயபுரம் ம.வி, 3ஆம் இடம்-முழங்காவில் ம.வி.

**மென்பந்துக் கிரிக்கெட்- 19 வயது பெண்கள்**
முதலாமிடம்-கனகபுரம் ம.வி, 2ஆம் இடம்-கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**சதுரங்கம்-15 வயது ஆண்கள்**
முதலாமிடம்- கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்-கிளிநொச்சி மத்திய கல்லூரி, 3ஆம் இடம்-முருகானந்தா ம.வி.

**சதுரங்கம்-15 வயது பெண்கள்**
முதலாமிடம்- கிளிநொச்சி மத்திய கல்லூரி, 2ஆம் இடம்-பாரதி வித்தியாலயம்.

**சதுரங்கம்-19 வயது ஆண்கள்**
முதலாமிடம்- கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்-கிளிநொச்சி மத்திய கல்லூரி, 3ஆம் இடம்-பூநகரி ம.வி.

**சதுரங்கம்-19 வயது பெண்கள்**
முதலாமிடம்-கிளிநொச்சி மத்திய கல்லூரி, 2ஆம் இடம்- கிளிநொச்சி இந்துக் கல்லூரி, 3ஆம் பூநகரி ம.வி.

**பூப்பந்தாட்டம்-19 வயது ஆண்கள்**
முதலாமிடம்-கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்- கனகபுரம் ம.வி, 3ஆம் இடம்- பூநகரி ம.வி.

**பூப்பந்தாட்டம்-19 வயது பெண்கள்**
முதலாமிடம்- கிளிநொச்சி இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் கனகபுரம் ம.வி, 3ஆம் இடம்-பூநகரி ம.வி.

**வலைப்பந்தாட்டம்-15 வயது பெண்கள்**
முதலாமிடம்-பூநகரி ம.வி, 2ஆம் இடம்-கிளிநொச்சி மத்திய கல்லூரி, 3ஆம் இடம்-ஜெயபுரம் ம.வி.

**வலைப்பந்தாட்டம்-17 வயது பெண்கள்**
முதலாமிடம்-முழங்காவில் ம.வி, 2ஆம் இடம்-முருகானந்தா ம.வி, 3ஆம் இடம்-பளை மத்திய கல்லூரி.

**வலைப்பந்தாட்டம்-19 வயது பெண்கள்**
முதலாமிடம்-அக்கராயன் ம.வி, 2ஆம் இடம்- கனகபுரம் ம.வி, 3ஆம் இடம்- பூநகரி ம.வி.

மேற்படி மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் வடமாகாண மட்டத்தில் நடைபெறவுள்ள பாடசாலை அணிகளுக்கு இடையிலான போட்டிகளில் பங்குபற்ற தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## மே 31 முதல் ஜூன் 05 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பொழுதுபோக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். ஆறாம் இடத்தில் சனி சாதகமாக இருப்பதால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். வேலையாள்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். விரயஸ்தானத்தில் குரு இருப்பதால், பிள்ளைகள் வழியில் கணிசமான பணத்தைச் செலவிடலாம். தெய்வ காரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். நீண்டதூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். சூரியன், புதன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் தொடர்பான வகையில் சிரமங்களைச் சந்திக்கலாம். அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல் அதிருப்திக்கு ஆளாகலாம். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள் பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள், எதிர்பார்த்த கடனுதவி, பொருள் உதவி கிடைத்தல் போன்றவற்றால் சந்தோஷம் உண்டு. சந்திராஷ்டமம் என்பதால், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, காரியத்தடை போன்றவற்றைச் சந்திக்கலாம்.

### இடபம்

இந்த வாரம் சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகித் தொந்தரவு கொடுக்கலாம். பணவரவுகளைப் பெறலாம். எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். ஜென்ம ராசியில் சூரியன் இருப்பதால், எந்த வேலையையும் பதட்டம், படபடப்போடு செய்வீர்கள். சிறிய விடயங்களுக்குக் கூடப் பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். மற்றவர்களின் கோபத்திற்கு ஆளாகாமல் இருக்க, பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை, மருத்துவம் தொடர்பான விடயங்கள் சாதகமாக இல்லை. சுக்கிரன் சாதகமாக இருப்பதால், கையில் காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்களைச் சரிவர நிறைவேற்றிக் கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வீர்கள். இருந்தாலும், அவ்வப்போது தடாலடியாகப் பெரிய செலவுகளைச் செய்து விட்டு, பிறரிடம் கைமாத்து வாங்கலாம். குரு சாதகமான நிலையில் உள்ளதால், பிள்ளைகளின் செயற்பாடுகளால் பெருமை அடைவீர்கள். நெடுநாள்களாக இழுத்தடித்த கடன் மிகுதிகள் வரலாம். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். பெரிய மனிதர்களின் நட்பைப் பெறலாம். தற்போது சாதகமான நிலையில் இருக்கும் செவ்வாய், நான்காம் இடத்திற்கு செல்வதால், பயணங்கள் அதிகரிக்கும். சகோதரர்க்ள் வழியில் தொல்லைகள் உருவாகலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

### மிதுனம்

இந்த வாரம் அவசியமான, அவசரமான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். மற்றவர்களின் பேச்சை நம்பிச் சில வேலைகளைச் செய்து விட்டுப் பின்னர் வருத்தம் அடைவீர்கள். உறவினர்கள் வகையில் தொல்லைகள், செலவுகள் உருவாகலாம். எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். சில வேலைகள் சுலபமாக முடியாமல் இழுத்தடிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்டு சில காரியங்களைச் செய்வீர்கள். பத்தாம் இடத்தில் குரு இருப்பதால், தொழில், உத்தியோக ரீதியான விடயங்களில் பொறுப்போடும், பொறுமையோடும், எச்சரிக்கையாகவும் செயற்பட வேண்டும். மற்றவர்கள் செய்த தவறுக்கு நீங்கள் பொறுப்பேற்கும் சூழ்நிலை உருவாகும். அதுமட்டுமின்றி, வேலை நெருக்கடிகளாலும் வெறுப்பு, விரக்தி உண்டாகும். தற்போது தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தில் இருந்து பல்வேறு தொந்தரவுகளை கொடுத்து வரும் செவ்வாய், மூன்றாம் இடத்திற்கு மாறுவதால், முத்தான பல வாய்ப்புகள் உருவாகும். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் ஏற்பட்ட பகை விலகி பாசம் கூடும். நிலம், பூமி, கட்டட பணிகள், பொலிஸ் தொடர்பான விடயங்களில் ஆதாயம், அனுகூலம் பெறலாம். கடன் பிரச்சினைகளைச் சமாளிப்பீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். விரய ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால், தந்தை, மருத்துவம் தொடர்பான வகையில் திடீர் செலவு உருவாகும். அவர்களின் கோபத்திற்கும் ஆளாகலாம். பணவரவு உண்டு. சந்தோஷ அனுபவம் பெறலாம்.

### கடகம்

இந்த வாரம் திட்டமிட்ட வேலைகளைச் சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். புதிய பொருள்கள் வாங்கலாம். ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம். வெளியூர் பயணங்கள் செல்லப்போட்ட திட்டம் நிறைவேறும். மற்றவர்களால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம். சனியும், குருவும் சாதகமான நிலையில் உள்ளதால், நினைத்த காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் வாய்ப்பு உருவாகும். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்கள் கைகூடி வரலாம். பழைய கடன் மிகுதிகள் வசூலாகும். பிள்ளைகள் அல்லது உடன் பிறப்புக்களின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு, சம்பள உயர்வு வாய்ப்புகள் சாதகமாகும். வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். புதன் சாதகமாக இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் கேட்ட உதவிகளையும் செய்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். தரகு, இலாபத் தொழில் புரிவோர் கூடுதல் ஆதாயம் பெறுவர். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். சூரியன் சாதக்மாக உள்ளதால், தந்தை வழியில் அனுகூலம் உண்டு. அவர் மீதான பாசம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் சந்திப்பால் மகிழ்ச்சி, ஆதாயம் அடையலாம். பெண்கள், பயணங்களால் செலவு உண்டு. குழப்பம், தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். மறதியாலும் அவதியுண்டு.

### சிங்கம்

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சிலர் கேட்ட உதவிகளைச் செய்யாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். எதிர்பாராத நல்ல செய்திகளைக் கேட்கலாம். உறவினர்கள், நண்பர்கள் ஆதாயம் பெற நீங்கள் துணையாக இருப்பீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பவரலாம். குடும்ப ஸ்தானத்தில் இருக்கும் சனியால், அவ்வப்போது செலவுகள் அதிகரித்து பற்றாக்குறை நிலைமை ஊடுருவிக் கொண்டிருந்தாலும், அந்த சனியைக் குரு பார்ப்பதால், நிலைமையை அங்கும், இங்கும் புரட்டியாவது சமாளிப்பீர்கள். பிரச்சினைகள் வராமல் இருக்க சர்ச்சைக்குரிய பேச்சுக்களையும் தவிர்க்க வேண்டும். தற்போது விரய ஸ்தானத்தில் உள்ள செவ்வாய், ஜென்ம ராசிக்கு வருவதால், கோபம், வேகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். சகோதரர்கள், பங்காளிகளின் முரண்பாடான செயற்பாடுகளாலும் எரிச்சல் அடையலாம். நிலம், பூமி, கட்டட பணிகள் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக இருக்காது. பொலிஸ் தொடர்பான விவகாரங்களில் கவனம் அவசியம். சூரியன், சுக்கிரன் சாதகமான நிலையில் இருப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், உறவுப் பெண்கள், மனைவி வழி உறவுகள், சகோதரிகள் போன்றவர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி, அவர்களால் உபகாரம் கிடைத்தல் போன்ற நல்ல பலன்களைக் காணலாம். அரசு கொன்ட்ராக்ட் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நண்பர்கள், உறவினர்கள் விடயங்களில் பட்டும்படாமல் நடக்கவும். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். தண்டச் செலவு நேரும்.

### கன்னி

இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். அதேநேரத்தில், கோபம், வேகத்தை அதிகரிக்கும் சில நிகழ்ச்சிகளும் நடக்கலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். நட்பு வட்டத்தால் ஆதாயம் பெறலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். முக்கியமான வேலை ஒன்றை முடிக்க முடியாமல் தடை, தாமதத்தைச் சந்திக்கலாம். தற்போது லாப ஸ்தானத்தில் உள்ள செவ்வாய் விரய ஸ்தானத்திற்குச் செல்வதால், அதுவரை சகோதரர்கள், பங்காளிகள், பொலிஸ் தொடர்பான விடயங்கள், நிலம், பூமி விவகாரங்கள் போன்றவற்றால் ஆதாயத்தையும், அதன்பின் இந்த வகையில் செலவுகளையும், அலைச்சல்களையும் சந்திக்கலாம். சுக்கிரன் பாதகமான நிலையில் உள்ளதால், பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். வாகனங்கள் திடீர் செலவு வைக்கலாம். அல்லது பழைய பொருள்களை மாற்றிப் புதிய பொருள்கள் வாங்கலாம். திடீர் பயணங்களாலும் சிரமங்கள் உருவாகலாம். சூரியன் சாதகமற்ற நிலையில் உள்ளதால் தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான வகையில் தொல்லைகள், சிரமங்கள் நேரிடலாம். தந்தையிடம் வீண்வாக்கு வாதங்களைத் தவிர்க்க வேண்டும். ஏழாம் இடத்தில் இருக்கும் குரு ஜென்ம ராசியைப் பார்ப்பதால், தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். நல்ல பல வாய்ப்புகள் [illegible] கவுரவம் மேம்படும் வகையிலான நிகழ்ச்சி நடக்கும். பணவரவு உண்டு. காரியங்கள் பலிக்கும்.

### துலாம்

இந்த வாரம் ஒன்றுக்கு இரு மடங்காகச் செலவு செய்யலாம். உறவினர்கள் வருகையால் உங்களின் வழக்கமான வேலைகளை மாற்றி அமைக்கலாம். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் அடைவீர்கள். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். எதிர்பாராத உதவிகளைப் பெறலாம். உதிரி வருமானம் கைக்குக் கிடைக்கும். மற்றவர்கள் மத்தியில் உங்களின் பெருமை, செல்வாக்கைக் காட்ட முற்படுவீர்கள். விரய ஸ்தானத்தில் உள்ள சனியால், அடுக்கடுக்காகச் செலவுகள் வந்து கொண்டிருக்கும். பல விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். சிலர் உங்களை ஏமாற்றி, தந்திரமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வர் என்பதால், உஷாராகச் செயற்பட வேண்டும். உங்களை ஐஸ் வைத்து பேசுவோரிடம் எச்சரிக்கை அவசியம். ஆறாம் இடத்தில் இருக்கும் குரு, இரண்டாம் இடத்தைப் பார்ப்பதால், தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்வீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் சுமுகமான நிலைமை காணப்படும். தொழில் ரீதியான விடயங்களும் ஆறுதல் தருவதாக அமையும். தற்போது பத்தாம் இடத்தில் இருந்து கொண்டு, உங்களைப் பரபரப்பாகச் செயற்பட வைத்த செவ்வாய், லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், நிலம், பூமி விவகாரங்கள், கட்டடப் பணிகள், பொலிஸ் தொடர்பான விடயங்கள் போன்றவற்றில் நல்லது நடக்கலாம். நெடுநாள்களாக விற்க நினைத்த சொத்துக்களை விற்கும் வாய்ப்பு உருவாகும். பெண்கள், பயணங்களால் சந்தோஷம் அடைவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் உருவாகும். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். வாக்குவாதங்களை தவிர்க்கவும்.

### விருச்சிகம்

இந்த வாரம் இலாபகரமான பணவரவுகளைப் பெறலாம். சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் அடைவீர்கள். அலைச்சல்களைச் சந்திக்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களுக்காகச் செலவு செய்வீர்கள். சிறிய வேலை ஒன்றுக்காகப் பல முறை அலைய நேரிடலாம். லாப ஸ்தானத்தில் சனியும், ஐந்தாம் இடத்தில் குருவும் இருப்பது உங்களுக்குப் பல வகையிலும் சாதகமே. பிள்ளைகளின் உயர் கல்வி முயற்சிகளில் நீங்கள் நினைத்தது நடக்கலாம். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். சிலர் பழைய வேலையை விட்டு விட்டு, ஆதாயகரமான புதிய வேலைகளுக்கு மாறலாம். பூர்வீக சொத்துக்கள் விற்பனை மூலம் கணிசமான ஆதாயம் பெறலாம். ஏழாம் இடத்தில் சூரியன் இருப்பதால், கணவன், மனைவி உறவில் சிறு சிறு பிரச்சினைகள் உருவாகலாம். கூட்டுத் தொழிலிலும் எச்சரிக்கை அவசியம். அரசியல்வாதிகளுக்கு அலைச்சல் அதிகரிக்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதும் கடினமே. சுக்கிரன், புதன் சாதகமான நிலையில் இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். மனைவியின் நீண்டநாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். சந்தோஷமான அல்லது எரிச்சல் உண்டாக்கும் அனுபவங்களைப் பெறலாம். பெண்களால் நன்மையுண்டு.

### தனுசு

இந்த வாரம் உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு, சந்தோஷம் குடிகொள்ளும். நெடுநாளைய பிரச்சினைகள் முடிவுக்கு வரலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு மேம்படும். பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். வேலைகளைச் சிரமம் இல்லாமல் சுலபமாக முடிப்பீர்கள். சூரியன் சாதகமான நிலையில் இருப்பதால், அரச தொடர்பான காரியங்கள் தடையின்றி விறுவிறுப்பாக முடிவுக்கு வரும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். அரசியல்வாதிகள் சந்திப்பால், ஆதாயம் அனுகூலம் பெறலாம். பத்தாம் இடத்தில் இருக்கும் சனியால் வேலைப்பளு அதிகரிக்கும். இருந்தாலும், அதற்கேற்ற ஆதாயம் கிடைப்பது கடினமே. நீங்கள் நன்றாக வேலை செய்கிறீர்கள் என, பாராட்டிப் பேசியே சிலர் உங்களின் தலையில் வேலைகளை சுமத்தி விட்டு தப்பித்துக் கொள்ளலாம். பணிபுரிவோர் எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றைப் பெறலாம். சுக்கிரன், புதன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், பெண்கள், பயணங்கள், உறவினர்களுக்காகச் செலவிடுதல், கேளிக்கை கொண்டாட்டங்களில் பங்கேற்றல் போன்ற வழிகளில் பணம் கரையலாம். கணவன், மனைவி உறவிலும் சிறு உரசல் கள் உருவாகும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயத்தை விடத் தொல்லைகளே அதிகம். செவ்வாய் பாதகமாக இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள், பொலிஸ் தொடர்பான விடயங்களில் சிரமங்களே அதிகம். மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். மறதி, தடை, தாமதங்களால் அவதிப்படலாம்.

### மகரம்

இந்த வாரம் சில பிரச்சினைகளை நினைத்து அதிக பதட்டம் அடைவீர்கள். பிரியமான சிலர் மீதே கோபம் கொள்வீர்கள். உடல் ரீதியான உபாதைகளாலும் உற்சாகம் குறையலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். கேட்ட கடனுதவிகள் கிடைக்கும். கணவன்- மனைவி இடையே அன்யோன்யம் கூடும். புத்தி ஸ்தானமான ஐந்தாம் இடத்தில் சூரியன் இருப்பதால், ஏதோ ஒரு விடயத்தை நினைத்து மண்டையைப் போட்டு குழப்பிக் கொள்வீர்கள். மற்றவர்கள் சொல்லும் பேச்சைக் கேட்பதன் மூலமும் மனம் அலைபாயலாம். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளும் திருப்தி தரும் வகையில் இருக்காது. சுக்கிரன் பாதகமாக இருப்பதால், பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். சில விடயங்களில் அவசரப்பட்டு வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். புதன் சாதகமாக இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனுகூலமாக இருப்பர். அவர்கள் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். ஏஜன்சி, இலாபத் தொழில் புரிவோருக்கு செல்வாக்கும், வருவாயும் அதிகரிக்கும். கடிதங்கள் மூலம் நல்ல தகவல்கள் வரலாம். மூன்றாம் இடத்தில் குரு இருப்பதால், சில காரியங்கள் நினைத்த வேகத்திற்கு நடக்காமல் தடை ஏற்படலாம். பிள்ளைகளின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் எரிச்சல் அடைவீர்கள். சந்தோஷமான அனுபவங்களைப் பெறுவீர்கள். நண்பர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள்.

### கும்பம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, திட்டமிட்ட காரியங்கள் நடக்காமல் முடக்கம் போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். போட்டி, எதிர்ப்புகளாலும் மன உளைச்சல் உண்டாகும். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். ஆன்மீக விடயங்களில் நாட்டம் செல்லும். திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். இரண்டாம் இடத்தில் ஆட்சிப் பலத்துடன் இருக்கும் குருவால், கையில் காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். மனைவி, குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு சில காரியங்களைச் செய்வீர்கள். இழுபறியாக இருந்த சுபகாரிய விடயங்கள் முடிவுக்கு வரலாம். சேமித்த பணம் ஒன்றை நிலத்திலோ அல்லது வீடு வாங்கவோ முதலீடு செய்யலாம். வருமானம் அதிகரிக்கும். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், உறவுப் பெண்கள் வழியில் சில உதவிகள் கிடைக்கலாம். பழைய வாகனங்களை மாற்றிப் புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம். பொழுது போக்கு விடயங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். சூரியன், புதன் சாதகமற்ற நிலையில் உள்ளதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான விடயங்களில் அனுகூலத்தைவிட அல்லல்களே அதிகம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உங்களிடம் உதவிகள் கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். சகோதரர்கள், பங்காளிகள், நிலம், பூமி தொடர்பான வகையில் ஆதாயமான பலன்களைக் காணலாம். அதன் பின் கணவன், மனைவி உறவில் சிறு உரசல்கள் உருவாகலாம். புதியவர்களின் நட்பு கிடைக்கும். சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம்.

### மீனம்

இந்த வாரம் இன்பமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். ஓய்வின்றி நாள் முழுவதும் சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். ஆசைப்பட்ட பொருள்களை வாங்குவீர்கள். சந்திராஷ்டமம் என்பதால், மந்தம், மறதி, கவனக்குறைவு, காரியத்தடை, எதிர்பாராத வீண் செலவு, மன அமைதி பாதித்தல் போன்றவற்றைச் சந்திக்கலாம். தடுமாற்றங்களும் நேரும். ஏழாமிடத்தில் இருக்கும் சனியால் அவ்வப்போது மன நிம்மதியை குலைக்கும் நிகழ்ச்சிகள் நடந்தாலும், குருவின் பார்வையால் அதிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். மலை போல் வந்த பிரச்சினைகள் எல்லாம் பனி போல விலகிவிடும். தொழில் ரீதியான விடயங்களில் ஏற்பட்ட மந்த நிலைமை விலகி, ஓரளவுக்கு சுறுசுறுப்புக் கூடும். கடன் விவகாரங்களைச் சமாளிக்கும் வல்லமை அதிகரிக்கும். வேலையாள்கள் தொந்தரவு குறையும். நான்காம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால், பயணங்களால் செலவு, அலைச்சல்கள் உண்டாகலாம். இருந்தாலும், அவற்றைத் தவிர்க்க முடியாது. உறவுப் பெண்கள் அல்லது ஆண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். சூரியன் சாதகமாக இருப்பதால், முடங்கிக் கிடந்த சில வேலைகள் சுறுசுறுப்பாக முடிவுக்கு வரும். தந்தை வழி உறவுகள் மூலம் உதவி பெறலாம். அரசியல்வாதிகள் மேலிடத்தின் பாராட்டைப் பெறுவர். அரசு காரியங்கள் தடையின்றி, சுறுசுறுப்பாக முடிவுக்கு வரும். பல நாள்களாகச் சந்திக்காத மாமன், மைத்துனர்கள், நண்பர்களைச் சந்திக்கலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்வீர்கள். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முறிகண்டியின் கிழக்குப் பக்கத்தில் இன்னும் மக்கள் குடியேற அனுமதிக்கப்படவில்லை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கிளிநொச்சிக்கான பயணம் பிரச்சினைகளுடனேயே ஆரம்பமானது. மாங்குளத்தில் அவர்களது வாகனங்களை வழிமறித்த மக்கள் சிலர் சம்பந்தன் ஐயாவிடம் கோரிக்கைக் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

தங்கள் கிராமத்தை இராணுவத்தினர் அபகரித்துக் கொள்ளப் போகிறார்கள் என்கிற முறிகண்டிப் பகுதி மக்களின் பயம்



அந்தக் கடிதத்தில் பிரதிபலித்தது. முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் சந்தித்த சிலரும் அதே விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்தினர்.

கிளிநொச்சி பிள்ளையார் கோயிலில் தரிசனத்தை முடித்துக் கொண்டு அங்கே மக்களின் பிரச்சினைகளை, தேவைகளைக் கேட்டறிந்த பின்னர் கிளி. மத்திய கல்லூரிக்குச் சென்றனர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

தற்காலிக முகாமாக மாற்றப்பட்டிருக்கும் அந்தப் பாடசாலையில்தான் தற்போது முறிகண்டி, சாந்தபுரத்தைச் சேர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் தமது கிராமங்களுக்குச் சென்று




பார்த்து வருவதற்கு இராணுவத்தினர் அனுமதிக்கின்றனர். ஆனால், மக்கள் மீளக்குடியமர்வதற்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை.

தமது பகுதியை இராணுவத்தினர் தம்வசப்படுத்தி விடுவார்கள் என்கிற மக்களின் அச்சத்திற்கு அதுவே காரணம்.

'எங்களுக்கு எங்கட காணி வேணும்' இதுதான் கிளி. மத்திய கல்லூரியில் தங்கியிருக்கும் மக்கள் தமது பிரதிநிதிகளிடம் அழுத்தம் திருத்தமாகச் சொன்ன வாக்கியங்கள்.

முறிகண்டியில் ஏ-9 வீதிக்கு மேற்குப்புறத்தில் இருந்த கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், கிழக்குப் புறத்தில் உள்ள சாந்தபுரம் பகுதியில் மீள்குடியமர்வுப் பணிகளை நிறுத்தும்படி முல்லைத்தீவு அரச அதிபருக்கு இராணுவத்தினர் சித்திரை மாதம் 29ஆம் திகதி உத்தரவிட்டுள்ளனர்.

இதனால், வவுனியா முகாம்களில் இருந்து மீளக்குடியமர்த்துவதற்காக அழைத்து வரப்பட்ட மக்கள் மத்திய கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அங்கிருந்தபடியே அவர்கள் தமது கிராமத்திற்குச் சென்று காணிகளுக்குச் சென்று வருகின்றனர். இதுவரைக்கும் அதற்குத் தடை விதிக்கப்படவில்லை.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த மக்களைச் சந்திக்கச் சென்ற 24ஆம் திகதி, மீள்குடியமர்வு பற்றிய இறுதித் தீர்மானம் சொல்லப்படும் என அந்த மக்களுக்குச் சொல்லப்பட்டிருந்தது. ஆனால், அது நடைபெறவில்லை.

போரினால் கடுமையாகச் சீரழிந்து கிடக்கும் மத்திய கல்லூரியில் இந்த மக்களின் வாழ்வும் சீரழிந்தபடியே தொடர்கிறது.

மழை வந்தால் மொட்டைமாடியால தண்ணி வழிஞ்சு உள்ளுக்குள்ள வந்திடுது.. பிறகு படுக்கவும் ஏலாது. சாப்பாடும் சரியான மோசம். பிள்ளையள் பள்ளிக்கூடம் போக ஏலாது. முகாமில இருக்கேக்கையும் படிப்பு இல்ல. இங்க வந்தும் பள்ளிக்கூடம் இல்லை. இப்பிடியே போனால் பிள்ளையளின்ட எதிர்காலம் என்னாகும்? என கஷ்டங்களைச் சொல்லிக் கலங்கினார் நடுத்தர வயதுப் பெண்மணி.

சொந்த இடங்களைப் பொறுத்த வரையில் தமது சொத்துக்கள் இராணுவத்தினரால் திருடப்படுகின்றன என அந்த மக்கள் நேரடியாகவே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிட்டார்கள்.

'ஒரு மாதத்துக்கு முன்னால போகேக்க, இருந்த வீடு இப்ப தரமட்டமாக் கிடக்குது. ஆமிக்காரர்தான் எல்லாத்தையும் உடைச்சு ஏத்திக் கொண்டு போகினம்' எனச் சொன்னார் பெண் ஒருவர்.

முறிகண்டியில் வளமான பகுதி இந்தக் கிழக்குப் புறம் உள்ள இடம்தான். நல்ல தண்ணீரும் அங்குதான் கிடைக்கிறது. மேற்குப் புறத்தில் உள்ளவர்கள்கூட கிழக்குக்கு வந்துதான் தண்ணீர் எடுத்துச் செல்வார்கள்.

மரங்களும் தோட்டங்களும் செழிப்பாக வளரக்கூடிய இந்தப் பகுதியைத் தம்வசப்படுத்தி இராணுவத்தினரின் குடும்பத்தினருக்கான குடியேற்றத் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தப் போகிறது என மக்கள் அச்சம் தெரிவித்தார்கள்.

'எங்கட வளமான மண். நிறைய மரங்கள் வளத்து வச்சிருக்கிறம். இனி அது மாதிரி வேற இடத்தில வளக்க ஏலாது. காணிக்குள்ள நிண்ட பச்சைப் பாக்கு மரத்தைக் கூட வெட்டி ஏத்திக் கொண்டு போகினம்' என்கிறார் நபர் ஒருவர்.

எல்லாம் அழிஞ்சு; அழிச்சு போனாலும் 'நிலத்த மட்டும்தான் கேக்கிறம். எங்களுக்கு எங்கட காணி வேணும்' என சாந்தபுரம் மக்களின் குரல் ஒருமித்து ஒலிக்கிறது.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 120 குடும்பங்கள் முன்னர் இரணைமடுக் குளத்தில் மீன்பிடித்து தமது வருமானத்தைத் தேடி இருக்கின்றன. ஆனால், இப்போது அந்த மக்கள் குளத்துப் பக்கம் போவதற்கே தடை விதிக்கப்பட்டுள்ளது. எனில், அவர்கள் வருமானத்திற்கு எங்கே போவார்கள்? (சுற்றுலாப் பயணிகள் இரணைமடுக் குளத்திற்குச் சென்று பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள் என்பது வேறு கதை)

வவுனியா முகாமில் இருந்து கொண்டு வந்த உடனே, 5 குடும்பங்கள் சாந்தபுரம் கிராமத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன. ஆனால், பின்னர் அவர்களும் மத்திய கல்லூரிக்கு திருப்பி அழைத்து வரப்பட்டு விட்டார்கள்.

மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதற்குத்



**5**

தாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்றும் நாடாளுமன்றத்தில் அந்த மக்களின் நிலையை எடுத்துச் சொல்லி உரிய நடவடிக்கைகளை எடுப்போம் என்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதி அளித்தார்கள்.

இறுதிப் போரின் போது அனைத்துலகச் சட்டங்கள் மீறப்பட்டு பொது மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்ற விடயத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மக்கள் நேரடிச் சாட்சியமாக அளித்தார்கள்.

தாங்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறியதற்கான முக்கிய காரணம் ஷெல் தங்கள் மீது வந்து விழுந்ததுதான் என எல்லாக் கிராமங்களிலும் மக்கள் கூறினார்கள்.

திருவையாறில் சந்திப்புக்களை முடித்துக் கொண்ட கூட்டமைப்பினர் தர்மபுரம் மகாவித்தியாலயத்திற்குச் சென்றார்கள். பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் விசுவமடு எல்லை வரையான பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர் வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மீளக்குடியமர்வதற்காக வரும் மக்களின் பதிவுகள் தருமபுரம் மகா வித்தியாலயத்திலேயே நடைபெறுகின்றன. இராணுவத்தினரும் அரச அதிகாரி களும் பதிவுப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மீளக்குடியமரும் மக்கள் ஓரிரு நாள்கள்



தங்கி இருப்பதற்கான இடைத்தங்கல் முகாமாகவும் பாடசாலை பயன்படுகிறது.

பாடசாலையின் செயற்பாடுகள் அனைத்தையும் 'அ' வில் இருந்துதான் மீளா தொடங்கப்பட வேண்டி இருக்கிறது எனச் சொன்னார் அதிபர் ச.பூலோகராஜா. போரினால் பாடசாலை யின் கட்ட டங்கள் மட் டுமல்லாது ஆவணங்கள் அனைத்தும் கூட அழிந்து போய்விட்டன. இப்போது ஒரு ஆவணமும் கிடையாது. 2009 ஆம் ஆண்டு பாடசாலை தொடங்கி 50 வருடங்கள் பூர்த்தியாகி உள்ளது.

**- செழியன் -**

அதற்கான கொண்டாட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்த வேளையில் போர் அனைத் தையும் விழுங்கி விட்டது.

இப்போது பாடசாலையின் வரலாற்றை நிரூபிப்பதற்கான ஆவணங்கள்கூட தம்மிடம் இல்லை என்று கவலைப்பட்டார் அதிபர்.

பரந்தன் கிராமத்தைவிட நன்றாகவும் செழிப்பாகவும் இருந்த தருமபுரம் 50 வருடங்களின் பின்னர் மீண்டும் குடியேற்ற காலத்திற்கே திரும்பச் சென்று விட்டதாக அவர் விவரித்தார்.

தருமபுரத்தில் இருந்து புறப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டாவளை மகாவித்தியாலயத் திற்கும் சென்று மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகள் தேவைகளைக் கேட்டறிந்தனர்.

அதன் பின்னர் புதுக்குடியிருப்பு வீதியில் மக்கள் மீளக்குடியமர அனு மதிக்கப்பட்ட இடம் தாண்டியும் செல்ல வேண்டும் என்பதில் விடாப் படியாக இருந்தனர். வாகனங்கள் விசுவமடு தாண்டிச் செல்ல ஆரம்பித்தன. (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லூர் சமூக அபிவிருத்தி மன்றத்தின் மகளிர் தின விழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் சமூகசேவகி திருமதி வடிவாம்பிகை இந்திரராஜா மலர்மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிப்படுவதையும், அருகில் மன்றத்தின் தலைவி திருமதி ருக்குமணி ஆனந்தவேல், திருமதி ஜெப மணி யோசெப், திருமதி நவநீதம் ஜெகதீசன், திருமதி வேதவல்லி செல்வரத்தினம் ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்திலும்-
சிறுமி ஒருவரின் நடன நிகழ்வையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்தஇரு படங்களில் காணலாம்.

# கிளிநொச்சி கரைச்சி கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள் சில

கிளிநொச்சி, மே 31

கடந்த வாரம் கரைச்சி கோட்டமட்டத்தில் நடைபெற்ற பாடசாலை அணிகளுக்கிடையிலான போட்டியின் மேலும் சில முடிவுகள் வருமாறு:

**எல்லே 19 வயது ஆண்கள்:** முதலாம் இடம் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), 2 ஆம் இடம் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி).

**எல்லே- 19 வயது பெண்கள்:** முதலாம் இடம் (கனகபுரம் ம.வி), 2 ஆம் இடம் (அக்கராயன் ம.வி).

**மென்பந்து கிரிக்கெட்- 19 வயது ஆண்கள்:** முதலாம் இடம் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), 2 ஆம் இடம் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி).

**19 வயது பெண்கள்:** முதலாம் இடம் (கனகபுரம் ம.வி), 2 ஆம் இடம் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி).

**பூப்பந்தாட்டம் - 19 வயது ஆண்கள்:** முதலாம் இடம் (கிளிநொச்சி ம.வி), (கனகபுரம் ம.வி).

**19 வயது பெண்கள்** - முதலாம் இடம் (கிளிநொச்சி இந்துக் கல்லூரி), (கனகபுரம் ம.வி).

மேற்படி முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள் கிளிநொச்சி வலய, மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்கு பற்றவுள்ளன. (எ - 405)





டயிடஸ் ஸ்ரோஸ்
2439422



**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் நாளை (01.06.2010) தொடக்கம் விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.
* றாஜின் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
தொ.பே: 021 222 2867, 077 6090926.


# மாகாணமட்டத்துக்கு தெரிவாகியோருக்கு விசேட சதுரங்கப் பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை விசேட சதுரங்கப் பயிற்சிப்பட்டறையொன்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டமட்டத்தில் நடைபெற்ற பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டியில் 19 வயது, 15 வயது பெண்கள் அணிகள், முதலாமிடத்தினையும், 19 வயது, 15 வயது ஆண்கள் அணி இரண்டாம் இடத்தினையும் பெற்று வடமாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன. இதனால் வெற்றிபெற்ற அந்த அணிகளுக்கு பயிற்சிப்பட்டறை நடைபெற்றது.

இப்பயிற்சிப்பட்டறையில் யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரியின் சதுரங்கப் பயிற்றுவிப்பாளர் எஸ்.திருச்செல்வம், யாழ்.மாவட்ட சதுரங்கச் செயலாளர் என். சோதிநாதன் ஆகியோர் மாணவர்களுக்குப் பயிற்சியை வழங்கினர். மாணவர்கள் மிக ஆர்வத்துடன்பயிற்சிகளில் பங்கு கொண்டு சதுரங்கம் தொடர்பான பல நுணுக்கங்களை கற்றுக்கொண்டனர். (எ-405)


**கைமாறப்பட்ட பயணப் பொதி**

கடந்த 28.05.2010 (வெள்ளி) அன்று இரவு வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பேருந்தில் இருந்து தவறுதலாக எனது பயணப்பொதிக்கு பதிலாக ஞானச்சந்திரன் கென்ஸ்மன் என்பவருடைய பயணப்பொதி எமக்குக் கிடைத்துள்ளது. எனவே ஞானச்சந்திரன் கென்ஸ்மன் என்பவர் தயவுசெய்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
0779254176


**2ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 | | 31 |
| * |  | * |
| 12 | | 05 |
| * | | * |
| 1933 | | 2008 |

**திருமதி கந்தசாமி செல்லம்மா**

எமது புரத்தின் ஒளியாய் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே ஆண்டுகள் இரண்டு ஆகியும் உங்கள் அன்பான பார்வையும் கனிவும் நெஞ்சைவிட்டகலாது!

தி.மு:
மாசேரி, வரணி.
த.மு:
மடத்தடி, சாவகச்சேரி.

அன்புடன் தவிக்கும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

**வலி.தென்மேற்கு பிரதேச செயலரை பாராட்டுகின்றோம்**



வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராக (DS) பதவி உயர்வுபெற்ற
Mrs E.A.Yohanayakam (M.A., Pub.Ad)
அவர்களை மனதார வாழ்த்தி பாராட்டுகின்றோம்.

நவாலி.
எஸ்.ரமேஷ்
தலைவர் HSCMF


**புறொயிலர் பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்கு**

முதற்தர புறொயிலர் மற்றும் பேட்டுக்குஞ்சுகள் (சிவப்பு முட்டைக் கோழி) உடன் விற்பனைக்குண்டு.
01.06.2010 செவ்வாய்க் கிழமை விநியோகிக்கப்படும்.
பதிவுகளுக்கு உடன் அழையுங்கள்.
தொ.பே:
021 7200616.


**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் திரு .ஜெயமைதனன் அவர்களின் மைத்துனர்



அமரர் இராசலிங்கம் அருள்ஜெயக்குமார்
(பெரியதம்பி)

அவர்களின் திடீர் மறைவால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மதுரம் இன்ஸ்ரிரியூட்
டச்சு வீதி, கோப்பாய். (98937)
கல்விச்சமூகம்.

**இரண்டாம் ஆண்டு நினைவலைகள்**



தோற்றம்:
04.06.1980

மறைவு:
31.05.2008

அமரர்
யோகரட்ணம் கீதன்

இதயமதில் கனக்கும் நினைவுகள்
இமைகளில் ஈரமாய் கசிகின்றன. உன்
அன்பை இழந்து ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
எம் உயிர் உள்ளவரை உன் நினைவு அழியாது.

யாழ்.பரியோவான் கல்லூரி,
99,Batch

## அதிபர் கூட்டம்

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள 63 பாடசாலைகளின் அதிபர்களையும், தற்காலிக இணைப்பில் கிளிநொச்சியில் கடமையாற்றும் அதிபர்களையும், வேறு வலயங்களிலும், நலன்புரி நிலையங்களிலும் தற்காலிகமாகக் கடமையாற்றும் கிளிநொச்சி வலய அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலநாதன் அறிவித்துள்ளார். (201-405)


**பக்க வடிவமைப்பாளர், தட்டச்சாளர் உடன் தேவை**

எமது நிறுவனத்தில் பக்க வடிவமைப்பாளராகவும், தட்டெழுத்தாளர்களாகவும் பணிபுரிய ஆர்வம் உள்ள ஆண்கள் உடன் விண்ணப்பிக்கவும்.

தகைமைகள் :
- 2 வருடத்துக்குக் குறையாத முன்னனுபவம்,
- பக்க வடிவமைப்பு, தட்டெழுத்து துறையில் தேர்ச்சி
-ஏற்கனவே பத்திரிகை நிறுவனங்களில் பக்க வடிவமைப்பு, தட்டெழுத்து துறையில் பணியாற்றியோருக்கு முன்னுரிமை

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
உங்கள் சுயவிவரங்களோடு
-05.06.2010 இற்கு முன்னர்
கீழ்வரும் முகவரிக்கு
விண்ணப்பிக்கவும்.



பிரதம ஆசிரியர்,
உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''ஐக்கியப்படுத்தலுக்கான'' 2010ஆம் ஆண்டிற்கான அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

போட்டி அனுசரணையாளர்களான 'கொல்சிம்' சிமெந்து கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்ரெபன் கூபர் அவர்களுக்கு வீரர்களை அறிமுகம் செய்து வைக்கப்படுவதை முதலாவது படத்திலும் இருஅணி வீரர்களும் ஆக்ரோஷமாக மோதிக்கொள்வதை இரண்டாவது படத்திலும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானப்பொன்ராஜா, சுவிஸ்நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான யாழ்.மாவட்டத்திற்கான அதிகாரி கான்ஸ் பீற்றர் ஏற்றர் ஆகியோர் உரையாற்றுவதை மூன்றாம், நான்காம் படங்களிலும்-

இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணித்தலைவரிடம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானப்பொன்ராஜா, கான்ஸ்பீற்றர் ஏற்றர், ஸ்ரெபன் கூபர் ஆகியோர் இணைந்து வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதை ஐந்தாவது படத்திலும்- வெற்றிக்களிப்புடனும் சம்பியன் கிண்ணத்துடனும் மன்னார் புனித சேவியர் அணி வீரர்கள் இருப்பதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: தமிழினியன், நேசன்)

# யாழ். வவுனியா மாவட்டங்களில் ஜூன் 10 முதல் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 31

பாடசாலைகளுக்கு இடையிலான 2010 ஆம் ஆண்டிற்கான மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள் ஜூன் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இப்போட்டிகள் யாவும் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இரு மாவட்டங்களிலும் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறவுள்ள போட்டிகளின் விவரங்கள் வருமாறு:

ஜூன் மாதம் 10,11 ஆம் திகதிகளில் உடுவில் மகளிர் கல்லூரியின் மைதானத்தில் 15,17,19 ஆகிய வயதுப்பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்.

✱ ஜூன் மாதம் 12ஆம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆண், பெண் இருபாலருக்குமான உடற்பயிற்சி.

✱ ஜூன் மாதம் 13,14,15 ஆம் திகதிகளில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் 15,17,19 வயதுப் பிரிவு ஆண்,பெண் இருபாலருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி.

✱ ஜூன் மாதம் 15,16 திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மைதானங்களில் ஆண்,பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டப் போட்டி, யாழ்.மத்திய கல்லூரியில் இதே தினத்தில் ஆண்,பெண் இருபாலருக்குமான மேசைப்பந்தாட்டப் போட்டி.

✱ ஜூன் மாதம் 16,17 திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆண்,பெண் இருபாலருக்குமான ஹொக்கிப் போட்டி.

✱ ஜூன் மாதம் 17,18 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி,யாழ். மத்திய கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானங்களில் ஆண்,பெண் இருபாலருக்குமான மென்பந்து கிரிக்கெட் போட்டி.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவுள்ள போட்டிகளின் விவரங்கள்:

✱ ஜூன் மாதம் 21,22 ஆம் திகதிகளில் யூ.சி. விளையாட்டு மைதானம் ஆண், பெண் இருபாலருக்குமான எல்லேப் போட்டி.

✱ ஜூன் மாதம் 23,24 ஆம் திகதிகளில் யூ.சி. விளையாட்டு மைதானத்தில் ஆண், பெண் இருபாலருக்குமான கபடிப் போட்டி.

✱ ஜூன் மாதம் 24,25,26 ஆம் திகதிகளில் யூ.சி. மைதானம், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானம் என்பவற்றில் 17 வயதுப்பிரிவு ஆண்கள், 19 வயதுப்பிரிவு ஆண்கள், 19 வயதுப்பிரிவு பெண்கள் உதைபந்தாட்டப் போட்டி.

✱ ஜூன் மாதம் 26,27,28 ஆம் திகதிகளில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் 15,19 வயதுப் பிரிவு ஆண்,பெண் இருபாலருக்குமான சதுரங்கப்போட்டி.

✱ ஜூன் மாதம் 26,27,28 ஆம் திகதிகளில் யூ.சி. உள்ளக அரங்கத்தில் ஆண், பெண் இருபாலருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி.

✱ ஜூன் மாதம் 26,27,28 ஆம் திகதிகளில் வவுனியா சிவப்பிரகாச மகளிர் கல்லூரியில் 15,19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான கரம் போட்டி.

இது தவிர எதிர்வரும் ஜூலை மாதம் 1,2,3,4 திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆண், பெண் இருபாலருக்குமான தடகளப் போட்டிகள் இடம்பெறவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## இன்றைய ஆட்டம்

வலி. வடக்கு,மே 31

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி மோதவுள்ளது. (எ-86)

# 'விளையாட்டின் மூலம் ஐக்கியம் 2010' வெற்றிக்கிண்ணம் மன்னார் புனித சேவியர் வசம்!

வலி.வடக்கு, மே 31

'விளையாட்டின் மூலம் ஐக்கியம் 2010' நிகழ்வு என்னும் தொனிப்பொருளில் ஹொல்சிம் சிமெந்து நிறுவனம் மற்றும் சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான அமைப்பு ஆகியவற்றின் ஆதரவுடன் வடக்கு, கிழக்கு, தெற்கு பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் புனித சேவியர் கல்லூரி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், மன்னார் புனித சேவியர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் தமது முழுத்திறமையையும், நுட்பங்களையும் பயன்படுத்தி மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த முன்னணி வீரர்களினால் முறியடிக்கப்பட்டதால் முதல் பாதி ஆட்டத்தில் எந்தவொரு கோல்களையும் இரு அணிகளாலும் பெறமுடியவில்லை.

இதனால் இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் எப்படியாவது கோல்கள் பெற்றுவிட வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கின.

போட்டி ஆரம்பமாகி 4 ஆவது நிமிடத்தில் புனித சேவியர் கல்லூரி வீரர் அனோஜன் மிகவும் ஆர்வமாகப் பந்தை நகர்த்திச் சென்று தனது அணிக்காக முதல் கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி பல பந்துகளை கோல் கம்பம் நோக்கி நகர்த்திய போதிலும் இறுதி நேரத்தில் கோல்பெற முடியாத வண்ணம் புனித சேவியர் கல்லூரி பின்னணி வீரர்கள் சிறப்பாக விளையாடித் தடுத்து நிறுத்தினார்கள்.

புனித சேவியர் கல்லூரி தனக்கு கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பம் ஒன்றைக் கோட்டைவிட்ட நிலையில் இரண்டாவது சந்தர்ப்பத்தை மிகச்சரியாகப் பயன்படுத்தி இரண்டாம் பாதி ஆட்டத்தின் 18 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப் பெற்றுக்கொண்டது.

இடதுபக்க முன்னணி வீரர் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு திரும்பிய நிலையில் முன்னணி வீரர் அனோஜன் அதனைத் திருப்பி அடித்து அற்புதமான முறையில் அந்தக் கோலைப் பெற்றுக்கொண்டனர்.

ஆட்ட நிறைவில் மன்னார் புனித சேவியர் கல்லூரி 02:00 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றிகொண்டு வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது. (எ-86-23)

# ஏழு முதல் இடங்களை வென்றது சென். அன்ரனிஸ்

வலி.வடக்கு, மே 31

யாழ். மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் 7 முதல் இடங்கள் உட்பட 10 இடங்களை தீவகக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஊர்காவற்றுறை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த புனித அந்தோனியார் கல்லூரி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் 21 வயது ஆண்கள் பிரிவில் 800 மீற்றர், 1500 மீற்றர், 5000 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்று மா.தினேஷ் மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

21 வயதுப்பிரிவில் வெற்றிபெற்ற ஏனைய கல்லூரி வீரர்களின் விவரங்கள் வருமாறு:

அ.டொமிஸ்கோ (நீளம் பாய்தல்- 1ஆம் இடம்), பி.டிலான் (தட்டெறிதல்- 2ஆம் இடம்), மு.ஆன்கோ ( 200 மீற்றர் ஓட்டம்- 3ஆம் இடம்), செல்வி யூ, விஜிதா (நீளம் பாய்தல்- 1ஆம் இடம்), அஞ்சலோட்டம் ஆண் 4x100 மீற்றர் (1ஆம் இடம்), 4x400 மீற்றர் அஞ்சலோட்டம் (1ஆம் இடம்)

(59-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு விழாவில் பங்கேற்கின்ற நடிகர்களின் படங்களுக்குத் தடை!

## தென்னிந்திய திரைப்படக் கூட்டமைப்பு அதிரடி

சென்னை, மே 31

கொழும்புப்பட விழாவில் இந்தியத் திரை நட்சத்திரங்கள் யாரும் பங்கேற்கக் கூடாது. மீறிப் பங்கேற்பின் அவர்களின் படங்கள் தென்னிந்தியாவில் திரையிடப் படமாட்டா - என்று தென்னிந்திய திரைப் படக் கூட்டமைப்பு நிர்வாகிகள் அதிரடியாக அறிவித்துள்ளனர்.

மேலும், சர்வதேச திரைப்பட விழாவை இலங்கையில் நடத்தக் கூடாது என்றும் இது தொடர்பாக இந்த விழாவை நடத்தும் முக்கிய அமைப்பான இந்திய ஐ.ஐ.எவ்.ஏ. நிர்வாகிகளைச் சந்தித்து, இந்த விழாவை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தப் போகின்றனர் எனவும் தென்னிந்தியத் திரை கூட்டமைப்பு நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

வரும் ஜூன் 4, 5, 6 ஆகிய திகதிகளில் இலங்கையில் இந்திய ஐ.ஐ.எவ்.ஏ. அமைப்பின் சார்பில் சர்வதேச திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நடைபெறவுள்ளது.

இதில் இந்தியத் திரை நட்சத்திரங்கள் யாரும் கலந்துகொள்ள வேண்டாம் என தமிழ்த் திரை அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இதையடுத்து, இந்த விழாவின் சிறப்புத் தூதர் பதவியிலிருந்து அமிதாப் விலகினார். ஆனால் ஷாருக், சல்மான் கான் உள்ளிட்ட ஹிந்தி நடிகர்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.

இந்நிலையில் தென்னிந்திய தயாரிப்பாளர் சங்கம், நடிகர் சங்கம் உள்ளிட்ட திரை அமைப்புகள் கலந்துகொண்ட கூட்டம் சென்னையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தென்னிந்திய மொழிப் படங்களின் படப்பிடிப்புகள், கலை விழாக்கள் எதையும் இலங்கையில் நடத்தக் கூடாது.

சர்வதேச திரைப்பட விழாவுக்கு தென்னிந்தியத் திரைப்படத் துறையினர் ஒத்துழைப்பு வழங்க மாட்டார்கள்.

இதில் கலந்து கொள்ளும் நட்சத்திரங்களின் படங்கள் தென்னிந்தியாவில் திரையிடப்படமாட்டா.

இலங்கையில் விழாவை நடத்தாமல் வேறு எந்த நாட்டிலாவது விழா நடந்தால் தென்னிந்திய சினிமா உலகம் சர்வதேச திரைப்பட விழாவை வரவேற்கும்.

இவ்விழாவை நடத்தக் கூடாதென சர்வதேச இந்தியத் திரைப்பட அக்கடமி (ஐ.ஐ.எவ்.ஏ.) குழுவினரை மும்பை சென்று சந்தித்து வலியுறுத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

தயாரிப்பாளர் சங்கத் தலைவர் இராம. நாராயணன், நடிகர் சங்கம் சார்பில் ராதாரவி, பெப்ஸி தலைவர் வி.சி.குகநாதன், திரையரங்க உரிமையாளர்கள் சங்கம், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம், தமிழ்நாடு திரைப்பட விநியோகஸ்தர்கள் கூட்டமைப்பு, சின்னத்திரைக் கலைஞர்கள் சங்கம், தென்னிந்திய திரைப்படப் பத்திரிகைத் தொடர்பாளர் சங்கம் உள்ளிட்ட அனைத்துத் திரை அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# கொழும்புப் படவிழாவில் கலந்துகொள்ளும் நடிகர்கள், கலைஞர்களுக்கு எதிராக மறியல்!

## தமிழ்த் திரைப்படப் பாதுகாப்புக் கழகம் எச்சரிக்கை

சென்னை, மே 31

இலங்கையில் நடக்கும் சர்வதேச இந்திய திரைப்பட விழாவில் நடிகர்கள், தொழில் நுட்ப கலைஞர்கள் கலந்துகொண்டால் அவர்களுக்கு எதிராக மறியல் போராட்டம் நடத்தப்படும் - என்று தமிழ்த் திரைப்படப் பாதுகாப்புக் கழகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழ் திரைப்படப் பாதுகாப்பு கழகத் தலைவர் கே.ராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சர்வதேச இந்தியத் திரைப்பட விழா கொழும்பில் வரும் 4, 5, 6 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

போரினால் சொத்துச் சுகங்களை, சொந்த பந்தங்களை இழந்து தவிக்கும் நமது சகோதரர்களான ஈழத்தமிழர்களின் புனர்வாழ்வுக்காக இந்திய அரசு 1000 கோடி ரூபாவை இலங்கை அரசுக்கு அளித்தது. மஹிந்த அரசு ஈழத்தமிழர்களுக்காக அந்தப் பணத்தைச் செலவு செய்யாமல், இன்னும் அவர்களை முகாமில் தடுத்து வைத்திருக்கிறது.

## இந்தியச் செய்திகள்

இந்த நிலையில் இந்தியத் திரைப்பட விழா இலங்கையில் நடப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

இந்தியாவின் ஒற்றுமையை விரும்பும் எவரும் இந்த விழாவில் கலந்துகொள்ள விரும்பமாட்டார்கள்.

இந்திய நடிகர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் யாரேனும் கலந்து கொண்டால் அவர்களுக்கு தென்னிந்தியத் திரைப்படத் துறையினர் ஒத்துழைப்பு கொடுக்க மாட்டார்கள் என்று அறிவித்த தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகசபை, நடிகர்கள் சங்கம், தமிழ்த்திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், இயக்குநர்கள் சங்கம், பெப்சி உள்ளிட்ட அனைத்து சங்கங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நடிகர்கள் மற்றும் தொழில் நுட்ப கலைஞர்கள் நமது ஒற்றுமையைக் காட்ட வேண்டிய அருமையான நேரம் இது.

தென்னிந்தியத் திரைப்படத் துறையினரின் வேண்டுகோளை மதிக்காமல் கொழும்பு திரைப்பட விழாவில் நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் கலந்து கொண்டால் அவர்களை எதிர்த்து தமிழ்த் திரைப்பட பாதுகாப்பு கழகம் சார்பில் மறியல் போராட்டம் நடத்தப்படும்.

- இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மாவோயிஸ்ட் வேட்டையில் இராணுவம்: படைத்தளபதி-அந்தோனி ஆலோசனை

டில்லி, மே 31

மாவோயிஸ்டுகளுக்கு எதிரான வேட்டையில் இராணுவத்தைப் பயன்படுத்துவது பற்றி இராணுவத் தளபதியுடன் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி ஆலோசனை நடத்தினார்.

மாவோயிஸ்டுகளின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சத்தீஷ்கார் மாநிலம் தந்தேவாடாவில் சமீபத்தில் 76 ரிசர்வ் படை பொலிஸாரை மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொன்றனர். மீண்டும் அதே பகுதியில் கண்ணிவெடி மூலம் 30 இற்கும் மேற்பட்டோரைக் கொன்றனர்.

கடந்த வெள்ளியன்று, மேற்கு வங்கத்தில் ரயிலை கவிழ்த்து 120 இற்கும் மேற்பட்டோர் உயிரிழக்க காரணமாக இருந்தனர். தற்போது மாவோயிஸ்டு வேட்டையில் துணை இராணுவப் படையினரும், மாநிலப் பொலிஸாரும் மட்டுமே ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு பயிற்சி அளிக்கும் பணியை மட்டும் இராணுவத்தினர் செய்து வருகிறார்கள்.

மாவோயிஸ்டு வேட்டையில் இராணுவத்தினரை நேரடியாக ஈடுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக எழுப்பப்பட்டு வருகிறது. ஆனால், இராணுவத்தை ஈடுபடுத்த மாட்டோம் என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி கூறிவந்தார்.



இந்நிலையில், நேற்று முன்தினம் அவர் இராணுவத் தளபதி வி.கே. சிங்கை சந்தித் துப் பேசினார். மாவோயிஸ்டுகளுக்கு எதிராக இராணுவத்தைப் பயன்படுத்துவது பற்றி இருவரும் ஆலோசனை நடத்தினர்.

அதன்பிறகு ஏ.கே.அந்தோனி செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இராணுவத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை மறுக்கவில்லை. இராணுவத்தைப் பயன்படுத்துவது பற்றி பகிரங்கமாக விவாதிக்க முடியாது. அதுபற்றி கவனமாக ஆய்வு செய்து முடிவு எடுப்போம் - என்றார்.

இதேவேளை, மாவோயிஸ்ட் வேட்டையில் ஈடுபட இராணுவம் தயார்நிலையில் இருக்கிறது எனவும், மத்திய அரசின் முடிவுக்காகவே காத்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# திரையரங்குகளில் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பாடல் பிரசார வாகனத்தை ஆரம்பித்து வைத்தார் கனிமொழி

சென்னை, மே 31

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பாடல் நேற்றுமுதல் திரையரங்குகளில் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

மாநாட்டுப் பிரசார வாகனத்தை கனிமொழி எம்.பி. தொடக்கி வைத்தார்.

கோவையில் ஜூன் 23 முதல் 27ஆம் திகதி வரை நடைபெற இருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்காக மைய நோக்க பாடலை முதல்வர் கருணாநிதி எழுதியுள்ளார். அந்தப் பாடலுக்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்க, இயக்குநர் கௌதம் வாசுதேவமேனன் இயக்கியுள்ளார். இதில் சுசீலா முதல் சுருதிவரை, டி.எம்.சௌந்தரராஜன் முதல் நரேஷ் அய்யர்வரை பலர்பாடியுள்ளனர்.

இந்தப் பாடல் குறுந்தட்டை நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் கவிஞர் கனிமொழி எம்.பி. வெளியிட்டார்.

தொடர்ந்து உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பிரசார வாகனத்தையும் அவர் கொடியசைத்துத் தொடக்கி வைத்தார்.

பின்னர் கனிமொழி எம்.பி. செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுக்கான அனைத்து ஆயத்தப் பணிகளும் கோவையில் வேகமாக நடந்துகொண்டிருக்கின்றன.

மாநாட்டுக்கு வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் பட்டியல், அவர்களது சுற்றுப் பயண விவரம் ஆகியவை சேகரிக்கப்பட்டு வருகிறது. மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஆய்வுக் கட்டுரைகளும் வந்து கொண்டிருக்கின்றன. - இப்படி கனிமொழி எம்.பி. கூறினார்.

அமைச்சர் பரிதி இளம்வழுதி கூறியவை வருமாறு -

காலையில் சென்னை சத்யம் திரையரங்கில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டு மைய நோக்க பாடல் ஒளிபரப்பப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் திரையரங்குகளில் இந்தப் பாடலை ஒளிபரப்ப செய்தித்துறை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இதுதவிர வேறு சில மாநிலங்களிலும், உலக நாடுகள் முழுவதும் பார்க்கும் வகையில் இணையதளங்கள் மூலமாகவும் மற்றும் எந்த வகையில் எல்லாம் ஒளிபரப்ப முடியுமோ அந்த வகையில் எல்லாம் ஒளிபரப்ப ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

இப்படி பரிதி இளம்வழுதி கூறினார்.

# தெலுங்கானாவில் வெடித்தது வன்முறை; 900 பேர் கைது; இரண்டு பேர் தற்கொலை

## ரயில், 14 பஸ்களுக்குத் தீவைப்பு

ஐதராபாத், மே 31

காங்கிரஸ் எம்.பி. ஜெகன்மோகன் ரெட்டி கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து தெலுங்கானாப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முழு அடைப்பின்போது வன்முறை வெடித்தது. அதன்போது ரயிலுக்கும், 14 பஸ்களுக்கும் வன்முறைக் கும்பல் தீவைத்தது. மேலும், 2 பேர் தற்கொலை செய்து கொண்டனர்.

இதையடுத்து, முன் எச்சரிக்கையாக 900 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆந்திர முதல்வராக இருந்த ராஜசேகர ரெட்டி கடந்த ஆண்டு ஹெலி விபத்தில் இறந்தபோது துக்கம் தாங்காமால் தற்கொலை செய்து கொண்டவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறப்போகிறார் என ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன் மோகன் ரெட்டி அறிவித்தார். அதற்கு தெலுங்கானா ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால், அவரது யாத்திரைக்கு காங்கிரஸ் மேலிடம் தடைவிதித்தது.

இதையும் மீறி, அவர் கடந்த வெள்ளி [illegible] யாத்திரையைத் தொடங்கியபோது கைது செய்யப்பட்டார். அவரை வரவேற்க [illegible] பாத் ரயில் நிலையத்தில் காத்திருந்த காங்கிரஸ் தொண்டர்களுக்கும், தெலுங்கானாக் கட்சியினருக்கும் இடையே மோதல் வெடித்தது. அப்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில், தெலுங்கானா ஆதரவாளர்கள் 9 பேர் காயமடைந்தனர்.

இதைக் கண்டித்து, தெலுங்கானா பகுதியிலுள்ள 9 மாவட்டங்களிலும் நேற்று முன்தினம் 24 மணி நேர முழு அடைப்பு (பந்த்) நடத்த தெலுங்கானா கூட்டு நடவடிக்கைக் குழு அழைப்பு விடுத்திருந்தது.

அதன்படி, 9 மாவட்டங்களிலும் நேற்று முன்தினம் முழு அடைப்பு நடைபெற்றது. கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. அசம்பாவிதத்தை தவிர்ப்பதற்காக, இந்த மாவட்டங்களுக்கு பஸ் போக்குவரத்தை அரச போக்குவரத்துக் கழகம் ரத்து செய்தது. இதனால் ஆயிரக்கணக்கான பயணிகள் நடுவழியில் பரிதவித்தனர். தெலுங்கானாப் பகுதியிலுள்ள ஐதராபாத்தில் மாநகர பஸ்கள் இயக்கப்பட்ட போதிலும், அவை குறைவான எண்ணிக்கையிலேயே ஓடின.

இதற்கிடையே, தெலுங்கானா ஆதரவாளர்கள் பல இடங்களில் வன்முறையில் ஈடுபட்டனர். ஐதராபாத் புறநகரில் 3 தனியார் கல்லூரி பஸ்களை அவர்கள் தீயிட்டுக் கொளுத்தினர். வாரங்கல் மாவட்டத்தில் 3 தனியார் பஸ்கள் கொளுத்தப்பட்டன. மேலும் பல்வேறு இடங்களில் 8 அரசு வாகனங்கள் எரிக்கப்பட்டன. ஆங்காங்கே 10 இற்கும் மேற்பட்ட பஸ்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இதையடுத்து பல்வேறு இடங்களில் மொத்தம் 900 பேர் முன் எச்சரிக்கையாக கைதுசெய்யப்பட்டனர்.



இதேவேளை, தெலுங்கானாக் கோரிக்கைக்கு ஆதரவாக, மேடக் மாவட்டம் சித்திபேட்டை என்ற இடத்தில் சூரிய பிரகாஷ் என்ற கல்லூரி மாணவர் விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டார்.

ராஜமுந்திரி ரயில் நிலையத்தில் இருந்து பீமாவரத்துக்கு நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணிக்கு புறப்பட இருந்த ரயிலுக்கு மர்மக் கும்பல் ஒன்று தீவைத்தது. இதில் 3 பெட்டிகள் முற்றிலும் எரிந்து விட்டன.

இந்நிலையில், ஜெகன் மோகன் ரெட்டியின் கைதைக் கண்டித்து கோகிலம்பேடு என்ற இடத்தில் வெங்கையா என்பவர் விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

### உத்தரப் பிரதேசத்தில் சூறாவளியால் 34 பேர் பலி

உத்தரப்பிரதேச மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் வீசிய சூறாவளிக்கு 34 பேர் பலியாகினர்.

சாஜன்பூர் மாவட்டத்தில் 7 பேரும், பருக்காபாத் மாவட்டத்தில் 6 பேரும் சீதாபுர் மாவட்டத்தில் 5 பேரும், கன்னோசி மாவட்டத்தில் 4 பேரும் லட்சுமிபுர் மற்றும் பிலிபிட் மாவட்டங்களில் தலா 3 பேரும் உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தரப்பு கிரிக்கெட் சுற்றுப்போட்டி; இலங்கையை வீழ்த்தி அசத்தியது இந்தியா

புலவாயோ, மே 31
இலங்கை அணிக்கு எதிரான முத்தரப்பு ஒருநாள் தொடரின் லீக் போட்



டியில், ரோகித் சர்மா சதமடிக்க, இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா, சிம்பாப்வே, இலங்கை அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் சிம்பாப்வேயில் நடக்கிறது. நேற்று இடம்பெற்ற போட்டியில் இந்தியா, இலங்கை அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி தலைவர் சுரேஷ் ரெய்னா, களத்தடுப்பில் ஈடுபடவிருப்பதாகத் தெரிவித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு உபுல் தரங்கா (1) மோசமான துவக்கம் அளித்தார். அடுத்து வந்த சமரவீரா (19) நிலைக்கவில்லை. பின்னர் இணைந்த கப்டன் டில்ஷான், மாத்யூஸ் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இந்த ஜோடி 3 ஆவது விக்கெட்டுக்காக 58 ரன்கள் எடுத்தபோது, டில்ஷான் (61) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கபுகேதரா (20), பெரேரா (32), குலசேகரா (19) ஆறுதல் அளித்தனர். மறுமுனையில் சிறப்பாக ஆடிய மாத்யூஸ் (75) அணியின் ஸ்கோரை உயர்த்தினார். இலங்கை அணி 49.5 ஓவரில் 242 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியா சார்பில் அசோக் டிண்டா, பிரக்யான் ஓஜா, ரவிந்திர ஜடேஜா தலா 2, உமேஷ் யாதவ் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு தினேஷ் கார்த்திக் (18), முரளி விஜய் (14) சுமாரான துவக்கம் அளித்தனர். பின்னர் இணைந்த விராத் கோஹ்லி, ரோகித் சர்மாஜோடி, இலங்கை பந்துவீச்சை பதம் பார்த்தது. இந்த ஜோடி 3ஆவது விக்கெட்டுக்காக 154 ரன்கள் சேர்த்த போது விராத் கோஹ்லி (82) ஆட்டமிழந்தார். மறுமுனையில் அதிரடியாக ஆடிய ரோகித் சர்மா, ஒருநாள் அரங்கில் தனது 2ஆவது சதமடித்தார். இந்திய அணி 43.3 ஓவரில் 3 விக்கெட்டுக்கள் இழப் புக்கு 243 ரன் கள் எடுத்து, 7 விக்கெட் டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ரோகித் (101), கப்டன் சுரேஷ் ரெய்னா (24) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இலங்கை சார்பில் குலசேகரா, அஜந்தா மெண்டிஸ், ரந்திவ் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். (1)



# தொடர் தென்னாபிரிக்கா வசம்!

டொமினிகா, மே 31
மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று -



தொடரையும் கைப்பற்றி யது.

ஸ்மித் தலை மையி லான தென் னாபிரிக்கக் கிரிக் கெட் அணி, மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் 3ஆவது ஒருநாள் போட்டி டொமினிகாவில் நேற்றுமுன்தினம் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 47.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக டி வில்லியர்ஸ் 70 ஓட்டங்களையும், அம்லா 34 ஓட்டங்களையும், கலிஸ் 31 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பந்துவீச்சில், பொல்லார்ட் 3 விக்கெட்டுகளையும், சுலைமான் பென், பிராவோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ரெய்லர், ராம்போல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் 225 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, தென்னாபிரிக்க வீரர்களின் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் 38 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 157 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதன்மூலம் தென்னாபிரிக்க அணி, 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ரிச்சர்ட்ஸ் 28 ஓட்டங்களைச் சேர்த்தார்.

தென்னாபிரிக்க அணி சார்பாகப் பந்துவீச்சில், மோர்னே மோர்கல் 4 விக்கெட்டுகளையும், லாங்வெல்ட் 3 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க வீரர் டி வில்லியர்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இன்னும் 2 ஆட்டங்கள் எஞ்சி இருக்கின்றன.

இத்தொடருக்கு முன்னர் நடந்த 'ருவென்ரி-20' தொடரையும் தென்னாபிரிக்கா (2-0) கைப்பற்றி இருந்தது.

அதுமட்டுமன்றி ஏற்கனவே, தாய்மண்ணில் நடைபெற்ற 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடரிலும் பிரகாசிக்க முடியாமல் தோல்வியடைந்து அரையிறுதிக்குக் கூட முன்னேற முடியாமல் தொடரை விட்டுப் பரிதாபமாக வெளியேறியிருந்தது.

மொத்தத்தில் தாய்மண்ணில் தொடர் தோல்விகளைச் சந்திக்கும் பரிதாபம் மேற்கிந்தியத் தீவுகளைத்துரத்திக்கொண்டிருக்கிறது.

# நடால்-ஜெலீனா முன்னேற்றம்

பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டித் தொடரின் 4ஆவது சுற்றுக்கு ஸ்பெயின் வீரர் ரபேல் நடால், செர்பியா வீராங்கனை ஜெலீனா ஜோன்கோவிக் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

நேற்று நடந்த 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் சம்பியனும், உலகின் இரண்டாம் நிலை வீரருமான ரபேல் நடால், ஆஸ்திரேலிய வீரர் லைடன் ஹெவிட்டை 6-3, 6-4, 6-3 என்ற நேர் செற் கணக்கில் வென்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஏனைய போட்டிகளில் டிஜோகோவிக் (செர்பியா), பெர்னாண்டோ வெர்டஸ்கோ (ஸ்பெய்ன்) ஆகியோர் 4ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.




பெண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் 4ஆம் நிலை வீராங்கனையான ஜெலீனா ஜோன் கோவிக் (செர்பியா), அலோனாவை (உக்ரைன்) 6-4, 7-6 (7-3) என்ற செற் கணக்கில் வென்று 4ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

# பங்களாதேஷ் தடுமாற்றம்!

லோர்ட்ஸ் டெஸ்டில், மழையால் பாதிக்கப்பட்ட மூன்றாம் நாள் ஆட்டத்தில், இங்கிலாந்து அணி துல்லியமாகப் பந்துவீச, பங்களாதேஷ் அணி, 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 237 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

முன்னர் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, டிராட் (226) இரட்டை சதமடித்து கைகொடுக்க, முதல் இன்னிங்ஸில் 505 ஓட்டங்களைக் குவித்தது. பின்னர் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி, இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின்போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 172 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. சித்திக் (53), ஜக்ருல் இஸ்லாம் (16) ஆகியோர் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பின்னர் நேற்றைய 3ஆம் நாள் ஆட்டம், மழை காரணமாக சுமார் 5 மணி நேரம் தாமதமாக ஆரம்பமாகியது.

இதனால் மொத்தம் 50 ஓவர்கள் பந்து வீச முடிவு செய்யப்பட்டது. இருப்பினும் போட்டியின்போது, போதிய வெளிச்சமின்மை காரணமாக, மூன்று தடவைகள் ஆட்டம் சிறிதுநேரம் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், தனது முதல் இன்னிங்ஸைத் தொடர்ந்த பங்களாதேஷ் அணிக்கு சித்திக் (58), ஜக்ருல் இஸ்லாம் (20) ஜோடி நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

அடுத்து வந்த அஷ்ரபுல் (4) சொதப்பினார். பின்னர் களமிறங்கிய அணித்தலைவர் சகிப் அல் ஹசன் (25), முஸ்பிகுர் ரஹிம் (15) ஆகியோர் ஆறுதல் அளித்தனர்.

இறுதியில் மூன்றாம் நாள் ஆட்டம் முடியும்போது பங்களாதேஷ் அணி, 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 237 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. முகம்துல்லா (7), சகாதத் ஹொசைன் (3) ஆகியோர் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில் ஸ்ரீப்ன் 4 விக்கெட்டுகளையும், ஜேம்ஸ் அண்டர்சன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

# மாலிக் மீதான தடை நீக்கப்பட்டது

லாகூர், மே 31
பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான சொய்ப் மாலிக்குக்கு விதிக்கப்பட்டிருந்த ஓர் ஆண்டுகாலத் தடை நீக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியச் சுற்றுப் பயணத்தின் போது ஏற்பட்ட சர்ச்சைகளால், ஓர் ஆண்டுகாலத் தடையும், சுமார் 50 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்தத் தடையை எதிர்த்து சொய்ப் மாலிக் உள்ளிட்ட சில வீரர்கள் மேன்முறையீடு செய்திருந்தனர். மேல்முறையீடு குறித்து, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் நியமிக்கப்பட்ட முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி இர்பான் காதிர் விசாரணை நடத்தி வருகிறார்.

சொய்ப் மாலிக் தரப்பில் அவரது சட்டத்தரணி ஆஜராகி தங்கள் தரப்பு விளக்கத்தைத் தாக்கல் செய்தார். இந்த விசாரணையின் முடிவை நீதிபதி இர்பான் காதிர் அறிவித்துள்ளார். மாலிக் மீதான தடை நீக்கப்பட்டதுடன், அவருக்கு விதிக்கப்பட்ட அபராதம் சுமார் 25 லட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நீதிபதி இர்பான் காதிர் கூறியவை வருமாறு-

''சொய்ப் மாலிக்கின் மேன்முறையீட்டை ஏற்று அவர் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. வீரர்கள் தங்களின் எதிர்காலத்தை மறுசிந்தனை செய்ய வேண்டும் என்ற நோக்குடன்தான் இந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருந்தது.

கடந்த 3 மாதகாலமாக கண்காணித்ததில் சொய்ப் மாலிக்கின் நடத்தை மற்றும் செயற்பாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என கிரிக்கெட் சபையின் சட்டத்தரணி என்னிடம் அறிக்கை அளித்துள்ளார்'' - என்றார்.

இதுகுறித்து சொய்ப் மாலிக் கூறியவை வருமாறு:-

''தடை எனது பெயருக்கும், எங்களது குடும்பத்துக்கும் களங்கத்தை ஏற்படுத்தியது. இந்தக் களங்கத்தைப் போக்கவே நான் மேன்முறையீடு செய்தேன். அதற்குத் தற்போது பயன் கிட்டியுள்ளது'' - என்றார்.

## ஆசியக் கிண்ணத் தொடர்:
# இந்திய அணி விவரம் 7ஆம் திகதி அறிவிப்பு

மும்பை, மே 31
ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி ஜூன் 7ஆம் திகதி அறிவிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஜூன் 15ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை இலங்கையில் நடக்கவுள்ளது.

இந்தப் போட்டியில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் கலந்து கொண்டு மோதுகின்றன.

இந்தத் தொடருக்கான இந்திய அணித் தெரிவு ஜூன் 7ஆம் திகதி டில்லியில் நடக்கவுள்ளது. தெரிவுக் குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் தலைமையில் தேர்வாளர்கள் கூடி அணியைத் தெரிவு செய்து அறிவிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியக் கலை வடிவில் சீனாவில் பௌத்த கோயில்

லுயோயாங், மே 31

சீனாவில் இந்திய பாரம்பரிய வடிவிலான முதல் பௌத்த கோயிலை இந்தியக் குடியரசுத் தலைவி பிரதிபா பாட்டீல் சனிக்கிழமை திறந்து வைத்தார். சீனாவில் ஹெனான் மாகாணத்தில் லுயோயாங் என்ற இடத்தில் சரித்திர சிறப்புவாய்ந்த வெள்ளை குதிரை கோயில் உள்ளது.

17 ஆண்டு கடற் பயணத்துக்குப் பின்னர் சீனத்துக்குப் புத்த மதத்தை அறிமுகப் படுத்திய அந்நாட்டுத் துறவியான ஜுவான் ஸான் என்பவரால் கி.பி.68இல் இந்தக் கோயில் கட்டப்பட்டது.

இந்தக் கோயிலில் நவீன தொழில்நுட்பத்துடன் இந்திய பாரம்பரிய வடிவிலான புத்தர் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோயிலை குடியரசுத் தலைவி பிரதிபா பாட்டீல் சனிக்கிழமை திறந்துவைத்தார். இந்தக் கோயிலை வடிவமைத்த அக்ஷய் ஜெயின், ராகா சக்ரவர்த்தி, திலிப் குமார் நாக் ஆகியோரை பிரதிபா பாராட்டினார். இந்த நிகழ்ச்சிக்காக சீனத் தலைநகர் பீஜிங்கிலிருந்து சனிக்கிழமை காலை லுயோயாங்குக்கு பிரதிபா வந்திருந்தார்.

அவரை ஹெனான் மாகாண ஆளுநர் குவோ கெங்மாவோ, கோயிலின் தலைமை மடாதிபதி யென் லி ஆகியோர் வரவேற்றனர்.

## பாக். மசூதிகளுக்குள் துப்பாக்கிச்சூடு 95 பேர் மரணம்; 100 பேர் படுகாயம்!

### தீவிரவாதிகளில் இருவர் கைது



லாகூர், மே 31

பாகிஸ்தானிலுள்ள 2 மசூதிகளில் புகுந்து தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக சுட்டதில் 95 பேர் பலியாயினர்; 100 பேர் காயமடைந்தனர். தீவிரவாதிகளில் இருவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநில லாகூரிலுள்ள மொடல் டவுன் மசூதியிலும், கார்ஹி சாஹு மசூதியிலும் வெள்ளிக்கிழமை பிற்பகல் தொழுகை நடந்துகொண்டிருந்தது. இரு மசூதிகளிலும் தலா 1,500 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தொழுகை நடத்திக் கொண்டிருந்தனர். இவர்களில் பெண்களும், குழந்தைகளும் அடங்குவர்.

பாகிஸ்தான் நேரப்படி பிற்பகல் 1.45 மணியளவில் இரு மசூதிகளுக்குள்ளும் தீவிரவாதிகள் புகுந்துள்ளனர். மசூதிகளின் வாயிலில் நின்றுகொண்டிருந்த பொலிஸார், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோரை சுட்டுத் தள்ளிவிட்டு உள்ளே புகுந்த தீவிரவாதிகள், தங்களிடமிருந்த அதிநவீன துப்பாக்கிகளால் கண்மூடித்தனமாகச் சுட்டுத் தள்ளியுள்ளனர்.

அத்துடன், தங்களிடமிருந்த கையெறி குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தீவிரவாதிகளின் தாக்குதலையடுத்து தொழுகை நடத்திக்கொண்டிருந்த முஸ்லிம்கள் அங்கிருந்த அறைகளுக்குள் சென்று தாளிட்டு தம்மை பாதுகாத்துக்கொண்டனர். ஆனால், சிலரை தீவிரவாதிகள் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர்.

சம்பவம் அறிந்ததும் லாகூர் பொலிஸாரும், பாகிஸ்தான் துணை இராணுவப் படையினரும் மசூதிகளைச் சுற்றிவளைத்தனர். இதையடுத்து, பயங்கரவாதிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இந்தத் துப்பாக்கிச் சண்டை பிற்பகல் 4 மணிக்கு முடிவுக்கு வந்தது. பிணைக் கைதிகளாகப் பிடித்துவைக்கப்பட்டிருந்த முஸ்லிம்களை பொலிஸார் மீட்டனர்.

சுமார் 8 முதல் 10 தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர் என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். இவர்களில் 3 தீவிரவாதிகள் கார்ஹி சாஹு மசூதிக்கு வந்தடைந்ததும் தங்களது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்துள்ளனர். இவர்களில் ஏராளமானோர் பலியாயினர். அந்த தீவிரவாதிகளின் தலைகள், உடல்கள் சம்பவ இடத்தில் சிதறிக் கிடந்தன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே நடந்த சண்டையின் முடிவில் 2 தீவிரவாதிகளைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவர்களில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் ஜின்னா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மசூதிகளுக்குள் நுழைந்த மற்ற தீவிரவாதிகளின் கதி என்னவென்று தெரியவில்லை. அவர்கள் பொலிஸ் தாக்குதலில் இறந்தார்களா அல்லது தப்பியோடிவிட்டார்களா என்பது உடனடியாகத் தெரியவில்லை.

தீவிரவாதிகளின் தாக்குதலில் மொத்தம் 95 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 100 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலில் இறந்தவர்களில் பாகிஸ்தான் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற லெப்டினென்ட் ஜெனரல் ஒருவரும், லாகூரைச் சேர்ந்த தொலைக்காட்சியில் பணியாற்றும் பத்திரிகையாளர் ஒருவரும் அடங்குவர்.

மசூதிகளுக்குள் புகுந்த அனைவரும் தெஹ்ரிக்-இ-தலிபான் எனப்படும் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

அனைவருமே உடலில் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு மசூதிகளுக்குள் நுழைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் அந்த அமைப்பின் தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## உலக அரங்கில்

## அமெ.தகவல் துறைக்கு தலைவராக இந்தியர்

தீவிரவாதிகள் சார்ந்த தகவல்களைக் கண்காணிக்கவும், அது தொடர்பான தகவல்களை அளிக்கவும் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய துறைக்கு இந்திய வாழ் அமெரிக்கர் ஷெமேந்திர போல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை ஜனாதிப்தி பராக் ஒபாமா பிறப்பித்துள்ளார்.

அமெரிக்காவின் பல்வேறு துறைகளிலிருந்து தீவிரவாதிகள் தொடர்பான தகவல்களை ஒருங்கிணைத்து அளிப்பது இந்தத் துறையின் பிரதான பணியாகும்.

போலின் பெற்றோர்கள் 1950 ஆம் ஆண்டுகளில் பஞ்சாபிலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர்களாவர். தற்போது புதிதாக உருவாக்கப்பட்ட திட்ட மேலாண்மை (பிஎம்) தகவல் பகிர்வு சூழல் துறையின் தலைவராகப் போல் நியமிக்கப்பட்டுள்ளார். இப்போது நிதித்துறைத் தலைவராக இவர் உள்ளார்.

## நேபாளப் பிரதமர் ராஜிநாமாவுக்கு ஒப்புதல்: நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் நீடிப்பு!

நேபாள பிரதமர் மாதவ் குமார் நேபாள் இராஜிநாமா செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் மேலும் ஓர் ஆண்டு நீடிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு அரசுக்கும், மாவோவாதிகளுக்கும் உடன்பாடு ஏற்பட்டது. அதன் பின்னர் அங்கு மன்னராட்சி முறை ஒழிக்கப்பட்டு ஜனநாயக ஆட்சி அமுலுக்கு வந்தது. இந்து நாடாக இருந்த நேபாளம் மதச்சார்பற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.

நீதி, நிர்வாகம், சமூகம், அரசியல் ஆகியவை உட்பட பல்வேறு அம்சங்களைக் கருத்திற்கொண்டு புதிய அரசமைப்பை உருவாக்குவது என முடிவு செய்யப்பட்டது. நேபாளத்தின் புதிய அரசமைப்பை உருவாக்கும் வரை இடைக் கால அரசமைப்பு ஏற்படுத்தப்பட்டது. 2007 ஆம் ஆண்டு இடைக்கால அரசமைப்பு உருவாக்கப்பட்டது.

இடைக்கால அரசமைப்பு இரண்டு ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டது. இடைக்கால அரசமைப்பின்படி 2008 ஆம் ஆண்டு மே மாதம் தேர்தல் நடத்தப்பட்டது. 601 நாடாளுமன்ற இடங்களில் 229 இடங்களைக் கைப்பற்றி மாவோ வாதிகளின் நேபாள கம்யூனிஸ்ட் தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்தது.

மாவோயிஸ்ட் தலைவர் பிரசண்டா என்று அழைக்கப்படும் புஷ்ப கமல் தகால் தலைமையில் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்கப்பட்டது. சென்ற ஆண்டு மே மாதம் இராணுவத் தலைவர் ருக்மாங்கத கத்வாலை பதவி நீக்கம் செய்வது தொடர்பாக நேபாள குடியரசுத் தலைவர் ராம் பரன் யாதவுக்கும், பிரசண்டாவுக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பிரசந்தா இராஜிநாமா செய்தார்.

அதன் பின்னர் நேபாள காங்கிரஸும், ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனிஸ்ட் கட்சியும் இணைந்து கூட்டணி ஆட்சி அமைத்தன. மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் மாதவ் குமார் நேபாள் பிரதமராகப் பொறுப்பேற்றார். அவர் பதவியேற்றது முதலே கடந்த ஓராண்டாக மாதவ் குமார் நேபாள் பதவி விலகவேண்டும் என மாவோவாதிகளின் ஐக்கிய நேபாள கம்யூனிஸ்ட் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராட்டம் நடத்தி வந்தது.

இந்நிலையில், இடைக்கால அரசமைப்பின்படி அமைக்கப்பட்ட நேபாள நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் வெள்ளிக்கிழமை இரவுடன் முடிவுக்கு வந்தது. புதிய அரசமைப்பு இன்னும் உருவாக்கப்படவில்லை. இதனால் அரசமைப்பு நெருக்கடி உருவாகும் சூழ்நிலை உருவானது. புதிய அரசமைப்பை உருவாக்க ஏதுவாக தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் ஓர் ஆண்டுக்கு நீடிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டது.

ஆனால், அந்த மசோதாவை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவை. 229 உறுப்பினர்களுடன் தனிப்பெரும் கட்சியாக விளங்கும் மாவோவாதிகளின் ஆதரவு இருந்தால் மட்டுமே இந்த மசோதாவை நிறைவேற்ற முடியும் என்ற சூழ்நிலை உருவானது. ஏற்கெனவே பிரதமர் மாதவ் குமார் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி வந்த மாவோவாதிகளின் நேபாள கம்யூனிஸ்ட், இதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது.

## பிரிட்டனில் குடியேற கட்டுப்பாடு: புதிதாக பதவியேற்ற அரசு முடிவு

லண்டன், மே 31

பிற நாடுகளிலிருந்து பிரிட்டனில் குடியேறுவோர் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த புதிதாகப் பொறுப்பேற்றுள்ள டேவிட் கேமரூன் அரசு முடிவு செய்துள்ளது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் அல்லாத பிற நாடுகளிலிருந்து பிரிட்டன் குடியுரிமை கோருவோரைக் கட்டுப்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது.

இத்தகவலை குடியேற்றத்துறை அதிகாரி டேமியன் கிரீன் தெரிவித்துள்ளார்.

''பிரிட்டிஷ் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இத்தகைய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் பிரிட்டனில் நிரந்தர குடியுரிமை கோரி குடியேறியவர்களில் முதலிடத்தில் இந்தியர்கள் உள்ளனர். கடந்த ஆண்டில் மட்டும் 26,535 பேர் பிரிட்டனில் குடியேறியுள்ளனர். இது ஒட்டுமொத்தமாகக் குடியேறியவர்களுடன் ஒப்பிடுகையில் 13 சதவீதம் அதிகமாகும். ஆனால், முந்தைய ஆண்டைக் காட்டிலும் 124 சதவீதம் அதிகமாகும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இந்தியர்களுக்கு அடுத்தபடியாக பாகிஸ்தானியர் உள்ளனர். பாகிஸ்தானிலிருந்து குடியேறியவர்களின் எண்ணிக்கை 20,945. பங்களாதேஷிகளின் எண்ணிக்கை 12,040. 1990ஆம் ஆண்டுகளில் கடைப்பிடிக்கப்பட்டதைப் போன்று கடுமையான கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம் பிரிட்டனில் குடியேறுவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடியும்'' என்றும் கிரீன் தெரிவித்துள்ளார்.

''மாணவர்கள், பணியாளர்கள், திருமணம் முடிந்து இங்கு குடியேறுவோர் என பல தரப்பினரையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து எதிர் வரும் வாரங்களில் பரிசீலிக்கப்படும்'' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரசு கொண்டு வரவுள்ள இத்தகைய கட்டுப்பாடுகள் நடைமுறை சாத்தியமில்லாதவை. இதை எதிர்த்து நீதிமன்றம் செல்லவுள்ளோம் என பிரிட்டனில் பணிபுரியும் பிற நாட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கௌதமாலா, ஈக்வடோரில் எரிமலைக் குமுறல்; இரண்டு பேர் உயிரிழப்பு; 50 பேர் படுகாயம்!

கவுதமாலா சிட்டி, மே 31

கௌதமாலா, ஈக்வடோர் நாடுகளில் இரு எரிமலைகள் வெள்ளிக்கிழமை இரவில் திடீரென் வெடித்ததால், 2 பேர் உயிரிழந்தனர். ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதையடுத்து, அப்பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கானோர் வீடுகளிலிருந்து வெளியேறினர். விமானசேவையும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த கௌதமாலாவில் உள்ள பகாயா என்ற எரிமலை அடிக்கடி வெடிப்பது வழக்கம். கடந்த வெள்ளி நள்ளிரவில் பகாயா எரிமலை வெடித்தது.

இதையடுத்து, தீப்பிழம்புகளையும், கற்களையும் இந்த எரிமலை கக்கி வருகிறது. இதனால் 2 பேர் உயிரிழந்தனர். 3 குழந்தைகளைக் காணவில்லை. 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சுமார் 1,700 பேர் வீடுகளைவிட்டு வெளியேறி தவிக்கின்றனர்.

கௌதமாலா சிட்டி, எஸ்குய்ன்ட்லா ஆகிய நகரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஜனாதிபதி அல்வரோ கலோம் அவசர நிலை பிரகடனம் செய்துள்ளார்.

கவுதமாலா சிட்டி பகுதியில் புகையும், சாம்பலும் பரவியமையால் சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. பகாயா எரிமலை மேலும் பயங்கரமாக வெடிக்கும் என புவியியல் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

எரிமலைக்கு அருகிலுள்ள கால்டெராஸ் கிராமத்தைச் சேர்ந்த பிரண்டா காஸ்டனெடா குறிப்பிடுகையில், ''எரிமலையிலிருந்து கிளம்பிய கற்கள் வீட்டின் மீது விழுந்தபோது, வீட்டுத் தளபாடங்களுக்கு இடையில் ஒளிந்திருந்தோம். நாங்கள் உயிர் பிழைப்போம் என்றே நம்பவில்லை. எனினும், வீட்டை விட்டு தப்பிவிட்டோம். வீடு முற்றிலும் சேதமடைந்தது'' என்றார்.

இதுபோல், ஈக்வடோரில் துங்குரஹுவா என்ற எரிமலையும் வெடித்து தீப்பிழம்பை கக்கி வருகிறது. இது தலைநகர் க்விட்டோ நகரிலிருந்து 150 கி.மீ. தொலைவில் உள்ளது. இதன் அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக் கழகத்தில் இப்படியும் ஓர் அடாவடித்தனமா?

யாழ்ப்பாணம். மே31

யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்ற வெளிவாரிப் பட்டதாரிகளுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற 'உதயன்' ஊடகவியலாளர் அங்கிருந்த பாதுகாப்பு ஊழியரால் அவமானப்படுத்தப்பட்டு, பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்.

நிகழ்வின் ஏற்பாட்டாளர்களின் அழைப்பின் பேரில் வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் பற்றிய செய்தியைச் சேகரிக்க 'உதயன்' ஊடகவியலாளர் கைலாசபதி கலையரங்கிற்குச் சென்றிருந்தார். அங்கு நிகழ்வுகளை அவர் புகைப்படமெடுத்துக் கொண்டிருந்தபோது, திடீரென அவரை நெருங்கிய பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர், புகைப்படம் எடுக்க எவருக்கும் அனுமதி இல்லை என்று அதட்டுத் தொனியில் கூறியவாறு புகைப்படக் கருவியைப் பிடுங்கி யெடுத்து, 'உதயன்' ஊடகவியலாளரை - மேடையில் அமர்ந்திருந்த விருந்தினர்கள், மாணவர்கள் என்போர் பார்த்துக்கொண்டிருக்க - பலர் முன்னிலையில் தர தர வென வெளியே இழுத்துவர முற்பட்டார்.

இதன்போது அவர் தானொரு ஊடகவியலாளர் என்பதை எடுத்துச் சொல்லியும் பாதுகாப்பு ஊழியர் அதைக் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. தம்வசம் இருந்த அரசாங்கத் தகவல் திணைக்கள அடையாள அட்டையை எடுத்துக் காண்பிப்பதற்கு முன்னர், குறித்த பாதுகாப்பு உத்தியோகத்தர் 'உதயன்' ஊடகவியலாளரின் புகைப்படக் கருவியையும், பிடுங்கி எடுக்க எத்தனித்தார்.

பாதுகாப்பு ஊழியர் ஒருவரின் தான்தோன்றித் தனமான - பொறுப்பற்ற செயற்பாட்டால் மன உளைச்சல் காரணமாக 'உதயன்' ஊடகவியலாளர் அங்கிருந்து வெளியேறினார்.

இதேவேளை, பல்கலைக்கழகத்தில் முன்னர் இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளிலும் குறித்த ஊடகவியலாளரே செய்தி சேகரிக்கச் சென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறிருந்தும் குறித்த ஊழியரின் ஊடகச் சுதந்திரத்துக்கு எதிரான தன்னிச்சையான - தான்தோன்றித்தனமான - செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

உயர் கல்விப் பீடமான பல்கலைக்கழகத்தில் காரண, காரியம் எதுவும் இன்றி இந்த அடாவடித்தனம் நடைபெற்றிருப்பது எந்த வகையிலும் மன்னிக்கக்கூடியதும் அல்ல.

# முன்னாள் போராளிகளுக்கு ஒரே நாளில் திருமணம்

## படைத்தரப்பு ஏற்பாடு செய்கிறதாம்

கொழும்பு, மே 31

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராளிகளாக இருந்த 53 ஜோடிகளுக்கு ஒரே நாளில், ஒரே மேடையில் திருமணம் செய்து வைக்கப்படைத்தரப்பினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த முன்னாள் போராளிகள் தற்போது பம்பைமடு புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வுபெற்று வருகின்றனர் என்றும் திருமண விழா எதிர்வரும் 13ஆம் திகதி வெகு விமரிசையாக அங்கு இடம்பெறும் என்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

திருமணத் தம்பதிகள் ஒவ்வொருவரும் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கும் வகையில் கைதடியில் இவர்களுக்கென அமைக்கப்பட்டிருக்கும் வீடுகளில் இவர்கள் குடியேற்றப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-சி)

# 'சீபா' வர்த்தக உடன்படிக்கை; இலங்கை நழுவல் போக்கு

## இந்தியாவுடனான இராஜதந்திர உறவில் முறுகல்

கொழும்பு, மே 31

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியாவுடன் 'சீபா' என்கிற வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திடும் விடயத்தில் இலங்கையின் நழுவல் போக்கே இதற்குக் காரணமாகும்.

இலங்கையுடன் இவ்வர்த்தக உடன்படிக்கையை செய்துகொள்வதில் பிரச்சினைகள் ஏற்படும் என்று புது டில்லி எதிர்பார்த்து இருக்கவில்லை.

ஆனால், கொழும்பில் ஆயிரக்கணக்கான வர்த்தகர்கள் அலரி மளிகைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றைக் கடந்த வாரம் நடத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷவிடம் மனு ஒன்றையும் நேரடியாகச் சமர்ப்பித்திருந்தனர். இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்த உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்போவதில்லை என்று அவர்களுக்கு ஜனாதிபதி வாக்குறுதி வழங்கி உள்ளார்.

அதேநேரம், இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதாயின் நாடாளுமன்றத்தில் முதலில் விவாதம் நடத்தப்படவேண்டும் என்று அரசிடம் எதிர்க்கட்சிகள் கோரி உள்ளன.

இந்நிலையில், இலங்கையுடனான 'சீபா' உடன்படிக்கை நழுவிப்போகலாம் என்று இந்தியா கருதுகிறது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் முறுகல் நிலை தோன்றி உள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 8ஆம் திகதி இந்தியா செல்லும் போது இந்த இராஜதந்திர முறுகல் நிலை அங்கு எதிரொலிக்கலாம் என்று அரசியல் அவதானிகள் நம்புகின்றார்கள். (ஒ-சி)

# ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு இந்தியா வரும் மஹிந்தவிடம் வலியுறுத்துக!

## மத்திய அரசிடம் இடதுசாரிக் கட்சிகள் கோரிக்கை



சென்னை, மே 31

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்தியா வலியுறுத்த வேண்டும்.

- இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செய லாளர் பிரகாஷ் காரத் கூறினார்.

ஜூன் 8ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யும் இலங்கை ஜனாதிபதியிடம், போரால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு விரைந்து மறுவாழ்வு அளிக்குமாறு வலியுறுத்த வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

'இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு' என்ற தலைப்பிலான கருத்தரங்கம் ஒன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சென்னையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அதில் பங்கேற்றுப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இலங்கையில் போர் முடிந்து ஓராண்டாகிறது. அந்த நாட்டில் ஜனநாயகத்தை முன்னெடுத்துச் செல்ல இப்போது வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பது குறித்து இலங் கையில் அரசியல் தலைவர்கள் பேசி வந்தனர்.

ஆனால், போரால் இலங்கைக்குக் கிடைத்த இராணுவ வெற்றி, அதிகாரப் பகிர்வு குறித்த பேச்சுகளைப் பின்னுக்குத் தள்ளியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை இரண்டு முக்கியமான பிரச்சினை கள் இப்போதுள்ளன.

தமிழர் பகுதிகளில் மீண்டும் சகஜ நிலையை ஏற்படுத்த வேண்டும். இலங்கைத் தமிழர் மறுவாழ்வு தொடர்பாக பேசியுள்ள இலங்கை ஜனாதிபதி, போரால் இடம்பெயர்ந்த தமிழர்கள் அனைவரையும் மீண்டும் அவர்களது பகுதிகளில் குடியமர்த்த மேலும் மூன்று மாதம் தேவைப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, இந்த ஆண்டு ஜனவரிக்குள் அனைத்துத் தமிழர்களும் மீள்குடியேற்றப்படுவரென தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு கிடைக்கும் வகையில் அரசியல் சட்டத்தை சீரமைக்க வேண்டும். இலங்கையில் உள்ள சிங்களர்கள் மற்றும் தமிழர்களின் அரசியல் தலைவர்கள் அரசியல் தீர்வை நோக்கிப் பணியாற்ற வேண்டும். பிரச்சினைகளை ஜனநாயக ரீதி யில் பேசித் தீர்ப்பதற்கு பொதுவான தளம் உருவாக்கப்பட வேண் டும்.

- இப்படி பிரகாஷ் காரத் தெரிவித்தார்.

# தனியார் பஸ் கட்டணம் உயரும்

கொழும்பு, மே31

தனியார் பஸ் கட்டணத்தை உயர்த்த தீர்மானிக்க உள்ளதாகத் தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான அறிக்கை இன்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இதற்கமைய 7சதவீத கட்டண உயர்வை மேற்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், ஆரம்பக்கட்டணத்திலும் மாற்றம் ஏற்படும் எனவும், இதற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் இக் கட்டண உயர்வு நடை முறைக்கு வரும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# மத்திய அரசிடமே.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி:-** புலிகள் தோல்வியடைந்து ஓராண்டு கடந்துவிட்டது. புலிகள் இயக்கத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** தனி ஈழம் அமைவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களுடன் பல தடவைகள் பேச்சுகள் நடத்த முயற்சித்தோம். ஆனால், அவர்கள் மறுத்தனர். முக்கிய முடிவுகளை எடுப்பதைத் தவிர, வேறு வழி எனக்கு இருக்கவில்லை.

**புலிகளின் கதை இன்னும் முடியவில்லை**

**கே:-** சரி. இப்போது இது முடிந்த கதையா?

ப:- நான் அப்படிச் சொல்லவில்லை. புலிகளின் ஆதரவாளர்களும், உறங்கு நிலையிலுள்ள அனுதாபிகளும் பல நாடுகளிலும் மிகவும் திறமையாகச் செயற்படுகின்றனர். ஆகவே, கதை இன்னும் முடியவில்லை.

**கே:-** இறுதி யுத்தத்தில் 20 ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்று சொல்லப்படுகிறதே?

ப:- இது சரியல்ல. இலங்கை இராணுவம் மிகவும் கட்டுப்பாடுகளோடு செயற்படுகிறது. பொதுமக்களை அது அழிக்கவில்லை. பிரபாகரனின் தாய், தந்தையர் உட்பட பல நெருங்கிய உறவினரும் எமது முகாமில்தான் இருந்தனர். அவர்கள் தாக்கப்படவில்லை என்றால் பொதுமக்கள் தாக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை. அவர்களும் எமது மக்களே!

**கே:-** யுத்தம் முடிந்து 180 நாட்களுக்குள் மூன்று லட்சம் உள்ளூர் அகதிகளை அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்றுவோம் என்று உறுதி கூறினீர்களே?

ப:- தற்போது முன்னெடுக்கப்படும் முயற்சிகள் எனக்குத் திருப்தி அளிக்கிறது. முகாம்களிலிருந்த மூன்று லட்சம் மக்கள் தொகை இப்போது 30 ஆயிரமாகக் குறைந்திருக்கிறது. இவ்வருட இறுதிக்குள் எல்லா இடங்களிலும் கண்ணிவெடிகளை அகற்றி மிகுதியானவர்களையும் அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்றுவோம்.

**கே:-** புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இந்தியாவிடமிருந்து நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைத்ததா?

ப:- ஆம். கிடைத்தது. நாங்கள் அதைப் பாராட்டுகிறோம்.

**கே:-** இராணுவ ஆதரவா அல்லது தார்மீக ஆதரவா?

ப:- (சிரித்துக்கொண்டே) இரண்டும் எங்களுக்குத் தேவையானவை.

**கே:-** சீன இராணுவ உதவிகள் தொடர்கின்றனவா?

ப:- இராணுவ ஆயுதம் மற்றும் ஆயுதத் தளபாடக் கொள்வனவு என்பது இராணுவ விடயம். இந்தியாவிடமிருந்து எவ்வளவு பெறமுடியுமோ அவ்வளவையும் பெற்றோம். மிகுதியை சீனா, பாகிஸ்தான், ஐரோப்பிய ஒன்றியம், இஸ்ரேல் ஏன் அமெரிக்காவிடமிருந்தும் பெற்றோம்.

**கே:-** நீங்கள் ஜூன் 8 இல் இந்தியா வருகிறீர்கள். இதனால் இரண்டு வருடங்களாக கிடப்பில் கிடக்கும் இலங்கை - இந்திய பொருளாதார உடன்படிக்கை புத்துயிர் பெறுமா?

ப:- பல விடயங்கள் பரிசீலிக்கப்படும். பொருளாதார முன்னேற்றம் முக்கிய இடம் பெறும்.

**கே:-** இந்திய மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கிய அதிகாரம் பற்றி குறை கூறுகிறீர்களே? இது இலங்கையில் அமுல்படுத்த இருக்கும் மாகாண சபைக்கான 13 ஆவது திருத்தத்தை உதறித் தள்ள ஒரு முன்கூட்டிய கண்ணோட்டமா?

ப:- இந்தியா ஒரு பெரிய நாடு. இந்தியாவை இலங்கையுடன் ஒப்பிடமுடியாது. மும்பையில் நடந்த தாக்குதலை நோக்கும் போது, பொலிஸ் அதிகாரங்கள் எப்போதும் மத்திய அரசுடன் இருக்கவேண்டியவை.

**கே:-** உங்களது நெருங்கிய பல உறவினர்கள் உங்கள் நிர்வாகத்தில் இருக்கிறார்களே?

ப:- நான் என்ன செய்வது. அண்மையில் நடந்த தேர்தலில் மக்கள் அவர்களுக்கு ஆணை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தேவையில்லை என்று தெரிந்தால் அவர்கள் ஓரம்கட்டப்படுவார்கள்.

**கே:-** ஒருநாள் முழுவதும் கடும் வேலைக்குப் பின் எப்படி ஆறுகிறீர்கள்?

ப:- இந்திப் படம் பார்த்து மகிழ்கிறேன். அண்மையில் சாருக்கானின் படமான 'எனது பெயர் கான்' என்ற படத்தைப் பார்த்தேன். இது மேற்குலகில் முஸ்லிம்கள் படும் இன்னல்களை விவரிக்கின்றது. எம்மை மனித உரிமைகளை மீறுகிறோம் என்று குறை கூறுபவர்களும் இக் குற்றத்தையே தமது சொந்த நாடுகளில் செய்கிறார்கள் என படத் தைப் பார்த்த பின் நினைவில் கொள்கி றேன்.

# வேலணையில் பனை உற்பத்தி நிலையம்

யாழ்ப்பாணம், மே 31

வேலணை மேற்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கான புதிய விற்பனை நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக இந்த விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விற்பனை நிலையத்தை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் திறந்துவைத்தனர்.

அங்கு பனம் வெல்லம், புழுக்கொடியல், பனை ஓலையால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தி உள்ளிட்ட பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெண்டின் (உதயன்), வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சமி உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பிக்களை நாலாம் மாடிக்கு கொண்டுசெல்லச் சதி!

## 'லங்காதீப' செய்திக்கு அரியநேத்திரன் எம்.பி. பதிலடி

கொழும்பு, மே 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை நாலாம் மாடிக்குச் கொண்டு சென்று அடைத்து வைப்பதற்கான சதித் திட்டம் ஒன்று அரங்கேறி வருகிறது. அதன் நிகழ்ச்சி நிரலில் ஒன்றாகவே, தமிழ்க் கூட்டமைப்பின் தலைவராக, நாடு கடந்த தமிழீழ அரசின் முக்கியஸ்தர் உருத்திரகுமார் நியமிக்கப்பட உள்ளார் என சிங்களப் பத்திரிகைகளில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இத்தகைய திட்டமிட்ட பிரசாரங்களை நம்பி தமிழ் ஊடகங்கள் அச்செய்திகளைப் பிரசுரிப்பதன் மூலம் தமிழ்ச் சமூகத்தை அச்சத்தில் மூழ்கடித்து விடக் கூடாது என்றும் அவர் கோரினார்.

கூட்டமைப்பின் தலைவராக நாடு கடந்த தமிழீழ அரசின் முக்கியஸ்தர் வி.உருத்திரகுமார் நியமிக்கப்பட உள்ளார் என்று தெரிவித்து 'லங்காதீப' பத்திரிகை செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

இச்செய்தியை ஐரோப்பிய நாடு ஒன்றில் இருந்து வெளிவரும் இணையத் தளச் செய்திச் சேவை ஒன்றும் பிரசுரித்தது. இச்செய்தியின் உண்மைத் தன்மை குறித்துக் கருத்துக் கூறியபோதே அரியநேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இன்னொருவர் நியமிக்கப்படுவார் என்கின்ற பேச்சுக்கே இடம் இல்லை. சம்பந்தரே தொடர்ந்தும் எமது தலைவராக இருப்பார்.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் பிரதிநிதிகளாக கூட்டமைப்பினர் உள்ளனர். எனவே, எமது தலைவராக இருப்பவர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்பவராக இருக்க வேண்டும் என்பது இன்னொரு விடயம்.

நாடு கடந்த தமிழீழ அரசுக்கும் தமிழ்க் கூட்டமைபுக்கும் முடிச்சுப் போட்டு செய்தி பிரசுரித்திருப்பது 'மலடி மகன் முயற்கொம்பில் ஏறி ஆகாயத் தாமரையைப் பிடுங்கினான்' என்பது போன்ற அப்பட்டமான பொய்.

நாடு கடந்த தமிழீழ அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டனர் என்கின்ற குற்றச்சாட்டின் பேரில் கிழக்கு மாகாணத்தின் பல பாகங்களிலும் கடந்த வாரம் முதல் ஏராளமான தமிழர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இப்படி ஒரு செய்தி வெளியாகியிருக்கின்றமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும், கூட்டமைப்பு ஆதரவாளர்களையும் கைதுசெய்கின்ற நடவடிக்கையின் சூழ்ச்சியாகவே எமது கட்சி காண்கின்றது.

இத்தகைய பிரசாரங்கள் மூலம் அரச எதிர்கால சமாதானப் பேச்சுகளைக் குழப்பத் திட்டமிட்டுள்ளது. தமிழ் மக்கள் இது போன்ற செய்திகளால் குழப்பமோ, அச்சமோ அடையத் தேவை இல்லை. - என்று அரியநேந்திரன் மேலும் தெரிவித்தார்.

# ஐ.தே.க. தலைமைப் பதவியை கைப்பற்ற ரவி - சஜித் போட்டி

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியைக் கைப்பற்றுகின்றமை தொடர்பில் அக்கட்சியின் இரு முக்கிய புள்ளிகளான சஜித் பிரேமதாஸ எம்.பிக்கும், ரவி கருணநாயக்க எம்.பிக்கும் இடையில் பெரும் போட்டி ஏற்பட்டுள்ளது என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.க.தலைவரைத் தேர்தல் மூலம் தெரிந்தெடுக்க அக்கட்சி தீர்மானித்துள்ளது. இப்படியான நிலையில் சஜித், ரவி ஆகிய இருவரும் தலைமைத்துவப் பதவியைத் தட்டிக்கொள்வதற்கு மும்முரமாகப் போட்டி போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இத்தேர்தலில் போட்டியிடுகின்றமையைக் கடந்த சில வார காலமாக இருவரும் நாசூக்காக வெளிப்படுத்தியும் வருகின்றார்கள்.

ஐ.தே.க. தலைவராக மட்டுமன்றி நாட்டின் தலைவராகவும் வரவேண்டும் என்பது தனது அரசியல் அபிலாசை என்றும் ஐ.தே.க. தலைமைத்துவம் மட்டுமல்ல, நாட்டின் தலைமைத்துவமும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்தே உருவாகும் என்றும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பகிரங்கமாகக் கூட்டங்களில் தெரிவித்து வருகின்றார்.

## கிளிநொச்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(புதைகுழியை) நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். சம்பவ இடத்தில் நீதிவான் விசாரணையும் நடத்தினார். கிளிநொச்சி வைத்தியசாலை டாக்டரும் அங்கு பிரசன்னமாகி இருந்தார்.

நேற்றைய விசாரணையின் பின்னர் நீதிவான் இன்று புதைகுழியைத் தோண்டுமாறு உத்தரவிட்டார்.

மலசலக் கூடக் குழி மணல் மற்றும் குப்பைகள் போன்றவை போடப்பட்டு மூடப்பட்டுள்ளதால், கனரக இயந்திரங்களைக் (''பெக்கோ'') கொண்டு அதனைக் கிளறித் தோண்டி எடுக்குமாறு நீதிவான் தமது உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கறுப்புப் பொலித்தீனில் உள்ள சடலங்கள் மண்ணுடன் சேர்ந்திருப்பதால் தம்மால் பரிசோதனை செய்யமுடியாது என கிளிநொச்சி வைத்தியசாலை டாக்டர், நீதிவானிடம் தெரிவித்ததை அடுத்து, சட்ட வைத்திய அதிகாரியை இன்று அழைத்துவருமாறு நீதிவான் பொலிஸாரைப் பணித்தார்.

இதேவேளை, கணேசபுரத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதியே மீள்குடியேற்றம் ஆரம்பமானதாகவும், அதற்கு முன்னரே இந்தக் குழியில் சடலங்கள் போடப்பட்டு மூடப்பட்டிருக்கலாம் எனவும் ஊகிக்கப்படுகிறது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது :-

வீட்டுக்காரர் கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னரே மலசலக் கூடக்குழியைத் துப்புரவு செய்ய ஆரம்பித்துள்ளனர். குழியின் மேல் மூடப்பட்டிருந்த ''பிளேற்'' அங்கு காணப்படவில்லை. மேற் பரப்பில் மணல் போடப்பட்டுக் குப்பை கூளங்கள் போடப்பட்டிருந்தன.

அதனால் சகிக்கமுடியாதவாறு துர்நாற்றம் ஏதும் இருக்கவில்லை. குப்பைகளை அகற்றிய வேளையில், கறுப்புப் பொலித் தீன்கள் தெரிந்தன. அவற்றை அகற்ற முற்பட்டபோதே சிதைந்த - எலுப்புகள் அடங்கிய - மனித எச்சங்கள் தெரிந்தன.

அநேகமாக அங்கு மேல் மட்டத்தில் நான்கு சடலங்களின் எச்சங்கள் இருக்கலாம் என்று ஓரளவு ஊகிக்கப்படுகிறது.

குழியின் கீழ்ப்பகுதியில் மேலும் அழுகிய சடலங்களின் எச்சங்கள் இருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

இதனிடையில், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரனும் நேற்று குறிப்பிட்ட இடத்துக்கு வந்து நிலைமைகளை நேரில் அவதானித்துச் சென்றார். (ஒ-1-405)

## கூட்டமைப்பும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையிலேயே அதன் யோசனைகள் அமையும் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்பு தேர்தலில் வெற்றிபெறும் தமிழர் பிரதிநிதிகளுடன் பேச்சுகளை நடத்துவேன் என்று ஜனாதிபதி அறிவித்திருந்தபோதும் .இதுவரை கூட்டமைப்புக்கு கோரிக்கை விடுக்கப்படவில்லை. இப்படியான நிலையிலேயே ஜனாதிபதியின் புதுடில்லி விஜயம் இடம்பெறுகிறது.

ஜனாதிபதியின் புதுடில்லி விஜயத்தின் பின்பு பேச்சுக்கான சூழல் உருவாகலாம் என்றும் -

சமாதானப் பேச்சுக்குத் தயாராகுமாறு கூட்டமைப்புக்கு இந்தியா அறிவுறுத்தல் வழங்கி உள்ளது என்றும் - இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் கசிந்துள்ளன. (அ-சி)

## அம்பாந்தோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்னும் சில நாள்களில் இந்தியா செல்லும்போது இதுதொடர்பான கோரிக்கை முன்வைக்கப்படும் என இராஜதந்திரத் தரப்புகள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே, இந்தியத் தூதரகத்தை கொழும்பில் கொண்டுள்ள நிலையில் தமது துணைத் தூதரகத்தைக் கண்டியிலும் கொண்டுள்ளது.

இதுதவிர, யாழ்ப்பாணத்தில் துணைத் தூதரகம் ஒன்றை இந்தியா அமைத்துள் ளது.

இந்தநிலையிலேயே அம்பாந்தோட்டையிலும் துணைத் தூதரகத்தை அமைக்கும் திட்டத்தை இந்தியா வெளிப்படுத்தியுள்ளது.

## 50 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கிளிநொச்சிக் காணிகளின் பதிவுகள் பெரும்பாலானவை வவுனியா, யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய காணிப்பதிவகங்களில் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் பிரதேச நொத்தாரிசுகள் இந்தப்பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். அவர்களுடன் தொடர்புகொண்டு, உறுதிகளின் பிரதிகளைப் பெற்று கிளிநொச்சி காணிப்பதிவகத்தில் பதிவு செய்து உறுதிகளைப் பெறமுடியும்.

புதிய உறுதிகளைப் பதிவு செய்யக் கிளிநொச்சி பதிவகத்துக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. காணி உரிமையாளர்கள் அந்தப்பதிவகத்துடன் தொடர்பு கொண்டு உறுதிகளைப் பெறமுடியும் - என்று தெரிவித்துள்ளார்.

அரச காணிகளைப் பொறுத்தவரை, மாகாண காணி ஆணையாளருடன் தொடர்பு கொண்டு காணிகள் தொடர்பான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று பிரதிப்பதிவாளர் நாயகம் தெரிவித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். (அ-1)

## இலங்கையின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையான நீதியை நிலைநாட்ட வும், பாதிக்கப்படுகின்ற தரப்பினருக்கு உரிய நிவாரணம் வழங்கவும் ஆணைக் குழுக்கள் முன்வைக்கின்ற சிபாரிசுகளை ஒருபோதும் நடைமுறைப்படுத்துவது இல்லை.

இலங்கையில் யுத்தத்தின் இறு[...] நாள்களில் இடம்பெற்ற மனித உரி[...] மீறல்கள் வெளிச்சத்துக்கு வர வேண்டு[...] னால் ஐக்கிய நாடுகள் சபையால் சர்வதே[...] மட்டத்தில் நீதி விசாரணை ஒன்று கட்[...] யம் இடம்பெற வேண்டும்.

கடத்தல்கள், சட்டவிரோத கைதுக[...] சட்டவிரோதத் தடுத்துவைப்புகள், காண[...] மல் போதல்கள், நீதிக்குப் புறம்பா[...] கொலைகள் என்பன இலங்கை அரசி[...] பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தி[...] இன்றுவரை தொடரவே செய்கின்றன[...] இவற்றையெல்லாம் இனம்தெரியாதோ[...] செய்கின்றார்கள் என்று பொலிஸார் கூறு[...] கின்றனர்.

### தடுப்புக்காவலில் சித்திரவதை வெகு சாதாரணம்

அவர்கள் இவை தொடர்பில் சிலவேளை[...] களில் மாத்திரமே விசாரணை நடத்துகின்[...] றனர். பொலிஸாரின் தடுப்புக் காவலில் சித்திரவதை வெகு சாதாரணமாகவே இடம்பெறுகின்றது. இத்தடுப்புக்காவலில் மரணங்கள் நேர்ந்தால் தப்பி ஓட முயன்ற சந்தேக நபரை சுட்டு விட்டனர் என்று பொலிஸார் கூறி விடுகின்றனர்.

கடந்த காலங்களில் அரசால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் விசாரணைகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட படைத் தரப்பினர் தண்டிக்கப்படவே இல்லை. இந்த ஆணைக்குழுக்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான அரச படையினரின் பெயர்கள் விவரங்கள் ஆகியவற்றை அரசுக்கு விரிவாகச் சமர்ப்பித்திருந்தபோதும் அரசு அவர்களைத் தண்டிக்கவே இல்லை. இக்கலாசாரம் இன்றுவரை தொடர்கிறது. இதனால் அரச படையினர் தொடர்ந்தும் மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் தயக்கமின்றி ஈடுபட்டு வருகின்றமை கண்கூடு.

### சர்வதேச நாடுகளின் அழுத்தங்களைத் தவிர்க்கவே ஆணைக்குழுக்கள்

கடந்த வருடம் மே மாதம் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் சர்வதேச சட்டங் களை மீறிச் செயற்பட்டது என அரசின் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஒரு சுதந்திர மான சுயாதீன ஆணைக்குழுவால் மாத்தி ரமே இந்நாள்களில் என்ன நடந்தன என்கிற உண்மைகளை வெளிப்படுத்த முடியும்.

இலங்கையில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக உலக நாடு[...] கள் இராஜதந்திர ரீதியில் பாரிய அழுத்[...] தங்களைப் பிரயோகிக்கின்றபோது மாத்[...] ரமே அவற்றை விசாரிக்கவென ஜனாதி[...] பதி ஆணைக்குழுக்கள் இலங்கையில் நியமிக்கப்படுகின்றன. சர்வதேச நாடுக[...] ளின் விமர்சனங்களை தற்காலிகமாக முறியடிப்பதற்கு இலங்கை அரசு இந்[...] உபாயத்தைக் கையாள்கின்றது.

இவை எல்லாம் ஒரு பம்மாத்து என[...] பதை சகலரும் நன்கு அறிவர்.

இலங்கையில் ஜனாதிபதியால் நியமி[...] கப்பட்டிருக்கும் புதிய நல்லிணக்க ஆணை[...] குழு கூட யுத்தத்தின் இறுதி நாள்களி[...] இடம்பெற்ற மனிதப் பேரழிவுகளுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக விரல் களை உயர்த்தப் போவதே இல்லை.

- இப்படி அந்தக் கடிதங்களில் தெரிவி[...] கப்பட்டுள்ளது. (அ-சி)


## மரண அறிவித்தல்

### செல்வி ஷாலிகா விஜயகுமார்



சுதுமலை, பண்ணாகம், கொம்பனித் தெரு, கொழும்பு-02 ஐ சேர்ந்த செல்வி ஷாலிகா விஜயகுமார் நேற்று (30.05.2010) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் விஜயகுமார் - தீபா தம்பதிகளின் புதல்வியும், சபீஷனின் சகோதரியும், சுதுமலை வீரசிங்கம் புஸ்பராணி, பண்ணாகம் குமாரசாமி, சந்திராதேவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.54, சப்பல் ஒழுங்கை, கொம்பனித்தெரு (புனித ஹோலி ரொசரி தமிழ் வித்தியாலயத்திற்கு அருகாமையில்) இல்லத்தில் இன்று (31.05.2010) திங்கட்கிழமை காலை 9 மணிவரை வைக்கப்பட்டு, பின்னர் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 4 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தொ.பேசி. : 0777244893
0112303440

தகவல்: பெற்றோர், உறவினர்கள்.



2011 A/L வெப்பவியல்
By.M.கருணாநிதி
செவ்வாய், வியாழன்
பிரிவு 1 - 6 a.m
பிரிவு 2 - 3 p.m
பிரிவு 3 - 5 p.m
01.06.2010
N.E.W
ஆனைப்பந்தி.

கணக்கீடு
Mr.A.P.Pagieerathan
B.B.A. (Fm. Spl.)
A/L 2012 Mon, Wed 3 - 4
A/L 2011 Mon, Wed 4 - 5
புதிய அலகுகள்
ஆரம்பம்: 02.06.2010
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கணக்கீடு
Mr.A.P.Pagieerathan
A/L 2011
கட்டுப்பாட்டுக் க/கு
Mon, Wed 4 - 5
A/L 2012 Wed 3 - 4
ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
ஆரம்பம்: 02.06.2010

LAVA HOSPITAL
75, கோவில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
www.lavahospitals.com/blog
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [...] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org